சிந்தாமணி
CHINTAMANI
THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA
இல. 712 1983 ஜூலை 10 ஞாயிற்றுக்கிழமை
செய்தி இதழாகப் பதிவு செய்தது.
ரூ 2/50

RECEIVED 11-7-1983 PERIODICALS DIVISION LIBRARY



# இராணுவ, பொலிஸ் பலம் வடக்கில் மேலும் அதிகரிப்பு

## பல: முகாம்களிலும் நவீன வசதிகள்

— சிந்தாமணி நிருபர்: இரா. செல்வராஜா —

கொழும்பு, ஜூலை 10

வடபகுதியில் அதிகரித்து வரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த, அங்கு இராணுவ, பொலிஸ் பலத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று அரசாங்கத்துக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சு தெரிவித்த பிரஸ்தாப ஆலோசனையை அரசாங்க உயர் பீடம் ஏற்றுக் கொண்டு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கி இருப்பதாக அறியப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து வடக்கில் உள்ள இராணுவ முகாம்கள் எல்லாவற்றிலும் நவீன ஆயுத வசதிகள் செய்யப்பட இருப்பதாகவும் அறிய வந்துள்ளது.

இதே வேளை கிழக்கு மாகாணத்திலும் சகல வசதிகளும் கொண்ட நிரந்தர இராணுவ முகாம்களை அமைக்கவும் துரித நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

வடபகுதியில் கடந்த சில வாரங்களாக அடுத்துத் தொடுத்துப் பல பெரிய அளவிலான வன்செயல்கள் நடைபெற்று வருகின்றன.

ரயில் எரிப்பு, பஸ் எரிப்பு ஆகிய சம்பவங்களால் அரசாங்கத்துக்குப் பல கோடி ரூபாவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

வடக்கில் நடக்கும் வன்செயல்களால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவதோடு அங்கு அமைதிக்கும் குந்தகம் ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி வடபகுதிச் சம்பவங்களால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் ஆபத்து உருவாகக் கூடும்.

வடபகுதியில் நடக்கும் வன்செயல்களை கட்டுப்படுத்த அங்கு இராணுவ, பொலிஸ் பலத்தை மேலும் அதிகரிப்பதை விட வேறு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## லொறி புரண்டு இருவர் மரணம்

காட்டு மரங்களை ஏற்றிக் கொண்டு கல்முனைக்கு சென்று கொண்டிருந்த லொறி ஒன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் சரிந்து விபத்திற்குள்ளானது.

லொறியில் பின்பக்கத்தில் மரங்களின் மேல் அமர்ந்து பிரயாணம் செய்து கொண்டிருந்த இருவர் மரங்களுக்கிடையில் நசுங்குண்டு மரணமானார்கள்.

கிரான் பகுதியைச் சேர்ந்த புலி பாய்ந்த கல் என்ற இடத்திலுள்ள வயல் பகுதி வீதியில் இச்சம்பவம் நிகழ்ந்தது. (த—319)

## அசாம் எல்லையில் 160 மைல் நீள பெரும் சுவர்!

புதுடில்லி, ஜூலை 9

இந்தியாவின் அசாம் மாநிலம் தனது எல்லையில் 160 மைல் நீள பெருஞ்சுவர் ஒன்றை அமைக்க உத்தேசித்திருப்பதாக அசாம் முதல்வர் சைகியா இன்று தெரிவித்தார்.

இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் இருக்கும் அசாம் மாநிலத்தில் குடியேறுவதற்கு வங்காள தேசத்திலிருந்து சட்ட விரோதமாக வருவோரைத் தடுக்கவே இந்தச் சுவர் கட்டப்பட இருக்கிறது.

வங்காள தேசத்தில் இருந்து அசாமுக்குள் வருவோரை தடுப்பதற்காக தற்பொழுது ஒரு மைலுக்கு ஒரு காவல் நிலையம் வீதம் எல்லையில் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (த—ப)

## கூட்டணி தலைமைப் பதவிகள் மீண்டும் சிவா, அமிரிடம்

### சட்டச் செயலாளர் பதவிக்கு சந்திரகாசனா, கரிகாலனா?

யாழ்ப்பாணம், ஜூலை 9

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகத் திரு. மு. சிவசிதம்பரமும், செயலாளர் நாயகமாகத் திரு. அ. அமிர்தலிங்கமும் மீண்டும் ஏகமனதாக போட்டி எதுவுமின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் அமைப்பு நிர்வாகச் செயலாளராக கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் தெரிவானார்.

கட்சியின் ஐந்து செயலாளர் பதவிகளில் ஒன்றான சட்டத் துறைச் செயலாளர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது குறித்து இன்று நடைபெற்ற கூட்டணியின் புதிய பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்க்கமாக முடிவு செய்யப்படவில்லை.

இப் பதவியை ஏற்கனவே வகித்து வந்த திரு. எஸ். கி.

(2 ஆம் பக்கம் பார்க்க)



களுக்குள் அடங்காத கட்டான மேடுகள்
காண்போரைத் துளைக்கின்ற குவளைக்கண் ஜோடுகள்
பவுனுக்கே மெருகூட்டும் மேனியின் வார்ப்படம்
பருவத்தேன் நிறைந்திட்ட இளமையின் பூக்குடம்!

## வெளிநாடுகளில் உள்ள வடபகுதி தீவிரவாதிகளை வரவழைக்க முயற்சியா?

### போலி பாஸ்போர்ட்டுகள் பிடிபட்டன

கொழும்பு, ஜூலை 10

வெளிநாடுகளில் வசிக்கும் வடபகுதி தீவிரவாதிகள் சிலர் இலங்கை திரும்புவதற்காக அவர்களுக்கு இங்கிருந்து போலிப் பாஸ்போர்ட்டுகள் அனுப்பப்படுகின்றனவா என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சு உயர்மட்ட விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது.

ஒரு தொகை உபயோகிக்காத பாஸ்போர்ட்டுகள் பிரான்சில் வசிக்கும் இளைஞர் ஒருவரின் பெயருக்கு தபாலில் அனுப்பப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

மேற்கு ஆசிய நாடுகளில் கெரில்லா பயிற்சி பெற்ற தீவிரவாதிகளை இலங்கைக்கு வரவழைக்கும் நோக்குடன் இப்படி பாஸ்போர்ட்டுகள் அனுப்பப்படுகின்றனவா? என்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் சந்தேகம் எழுந்திருக்கிறது.

பாஸ்போர்ட் வழங்கும் அதிகாரிகள் சிலரின் ஒத்துழைப்புடன் இது நடைபெறுகிறதா, என்று அறியவும் விசாரணைகள் நடைபெறுகின்றன. (த—ப)

## பகிஷ்கரிப்பு நீடித்தால் பல்கலைக்கழகம் மூடப்படும்

### ஆளுநர் சபை எச்சரிக்கை

ஹரிஸ்பத்துவ, ஜூலை 9

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்று வரும் மாணவர் பகிஷ்கரிப்பு தொடர்பாக ஆராய்ந்த பல்கலைக்கழக ஆளுநர் சபை, மாணவர்கள் தொடர்ந்து பகிஷ்கரிப்பை நடத்துவாரா

(2 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை அகதிகளுக்கு உதவ கூட்டணிக் குழு

யாழ்ப்பாணம், ஜூலை 9

திருகோணமலையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென திருமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் தலைமையில் விசேஷ குழு ஒன்றைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நியமித்துள்ளது.

கட்சியின் புதிய பொதுச் சபைக் கூட்டத்தில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

பிரஸ்தாப குழுவின் சார்பில் யாழ்ப்பாணம் பகுதியில் நிதி சேகரிக்கவும், வேறு வகைகளில் உதவவும் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் மற்றொரு குழுவும் நியமிக்கப்பட்டது.

வவுனியா கோவில் குளத்தில் சுமார் 7 லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளுடனும் காந்திய இயக்கத்தினால் நிறுவப்பட்ட அநாதைச் சிறுவர் இல்லத்தை சுவீகரிக்க அரசு முடிவுசெய்திருப்பதைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சுவீகரிப்பு சம்பந்தமான உத்தரவு வவுனியா அரசாங்க அதிபருக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும், அந்த உத்தரவை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

வவுனியா, செட்டிகுளம், பெரிய புளியாலங்குளம் கிராம சேவ

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நேரம் மேலும் தளர்த்தப்பட்டது

கொழும்பு, ஜூலை 10

திருகோணமலையில் நேற்று ஊரடங்கு மேலும் தளர்த்தப்பட்டது.

நேற்று இரவு 8.00 மணியில் இருந்து அதிகாலை 4.00 மணிவரை ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

இதற்கு முன்னர் இரவு 6.00 மணியில் இருந்து அதிகாலை 4.00 மணிவரை ஊரடங்கு அமுலானது குறிப்பிடத்தக்கது. (ப– 287)

## பாதிக்கப்பட்ட இடங்களை கத்தோலிக்க பிஷப்மார் பார்வையிட்டனர்

### ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிப்பர்

திருகோணமலை, ஜூலை 9

சிலாபம், காலி, திருமலை கத்தோலிக்க பிஷப்மார் மூவரும் இன்று திருமலையில் வன்செயல்களால் மக்கள் பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிட்டனர்.

சிலாபம் மறை மாவட்ட பிஷப் அதி. வண. மார்க்கஸ் பெர்னாண்டோ, காலி மறை மாவட்ட பிஷப் அதி. வண. சில்வெஸ்டர், திருமலை மறை மாவட்ட பிஷப் அதி. வண. இக்னேஷி கவாம்பிள்ளை ஆகிய மூவரும் வெள்ளிக்கிழமை மாலை திருமலை வந்தனர்.

அவர்களுடன் செடெக் நிறுவன அதிபர் வண. டெப்பும் வந்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நோன்பு தொழுகை நேரம்

10 — 7 — 1983

| | |
|---|---|
| சஹர் முடிவு | 4.26 |
| சுபஹ் | 4.41 |
| சூரிய உதயம் | 6.01 |
| ளுஹர் | 12.20 |
| அஸர் | 3.44 |
| மஃரிப் | 6.31 |
| இஷா | 7-51 |

## ● வடக்கில் ..............

## கடத்தப்பட்ட பஸ் மயானத்தில் எரிந்த நிலையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணத்தில் இருந்து கீரிமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று துப்பாக்கி இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டது. இன்று காலை மயானம் ஒன்றுக்கு அருகில் அது எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விவரம் வருமாறு:—

23 ஸ்ரீ 2985 இலக்க பஸ் வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கிண்ணியாவில் ஒருவர் கொலை வீட்டோடு சடலமும் எரிப்பு

கிண்ணியா, ஜூலை 9

கிண்ணியா, ஆலங்கேணியைச் சேர்ந்த சோமசுந்தரம் அம்பலவாது என்ற 60 வயது முதியவர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். அதன் பின் வீட்டோடு சேர்த்து அவரது சடலமும் எரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கிண்ணியாவில் இருந்து அரை மைல் தொலைவில் உள்ள மணலாறு என்ற இடத்தில் நடைபெற்றது.

இன்று சனிக்கிழமை எரியுண்ட வீட்டுக்குள் இருந்து கருகிய நிலையில் சடலம் கண்டு

(11-ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ்காந்தி — குரோமிக்கோ மாஸ்கோவில் சந்திப்பு

மாஸ்கோ, ஜூலை 9

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் புதல்வரும் ஆளும் இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளருமான திரு. ராஜீவ் காந்தி ரஷ்ய வெளி விவகார அமைச்சர் திரு. அன்ரி குரோமிக்கோவுடன் மாஸ்கோவில் பேச்சு வார்த்தை நடத்தினர்.

எம். பி. என்ற வகையில் திரு. ராஜீவ் காந்தி ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருப்பதாக ரஷ்ய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சரை சந்திப்பதற்கு முன்னர் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர், ஆயுதப் படைகளின் தளபதி ஆகியோரையும் ராஜீவ் காந்தி சந்தித்திருந்தார். (த)

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

# சிந்தாமணி சிறு விளம்பரங்கள்

## வாழ்த்துக்கள்

ஹுனுப்பிட்டிய - கொழும்பு, கொச்சிக்கடையைச் சேர்ந்த பாரீஸ்டர் ஹமீது ஹனிப்பா தனது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சந்தர்ப்பத்தில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றார்.

வி. இ:- 041153

## பேனா நண்பர்

பேனா நண்பர்கள், முத்திரை சேகரிப்பாளர்கள், கலாரசிகர்கள் தொடர்பு தேவையா? எழுதுக:

"MOONRISE" (Govt. Regd.), Puthaneri, Nanguneri, 627108 Tamil Nadu (S. INDIA).

வி. இ: 040594

## சினிமா மெஷின்

இதோ ஒரு நல்ல சந்தர்ப்பம்! சினிமா மெஷின் (விளையாட்டுச் சாமான்) இரண்டு போச் பெட்டியுடன் இயங்குவது பிலிம் ஒன்றுடன் ரூபா 22/50 வி. பி. பி. மூலமும் பெறலாம்.

Sunil Y. Production, Timbirigaskatuwa.

வி. இ: 040966

## விற்பனையாளர் தேவை

புத்தகசாலைக்கு விற்பனையாளராகக் கடமையாற்ற 6 மைல் எல்லைக்குள் வசிக்கும் ஆண் அல்லது பெண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். டானியல் புத்தகசாலை, 387, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு -6.

வி. இ:- 041160

## கோக்கிகள்தேவை

கொழும்பில் அதி பிரபலமான முஸ்லிம் ஹோட்டலுக்கு புரியாணி கறிவகைகள் தயாரிக்கக் கூடிய நல்ல அனுபவமுள்ள கோக்கிகள். 15 ஆம் 16 ஆம் திகதிகளில், காலை 9 மணி முதல், மாலை 5 மணி வரை ஹோட்டல் டி இக்பால், 240, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12 எனும் முகவரிக்கு அடையாள அட்டையுடன் நேரில் வரவும்.

வி. இ: 041245

## மூலநோய்

"நவமூலரோக எண்ணெய்" உள்மூலம், வெளிமூலம், இரத்தமூலம், சீழ் மூலம், செண்டுமூலம், ஆசன வாய் எரிச்சல், கார்தல், சொறிச்சல் குத்தல், கடுப்பு, கசிவு, கிருமி உபத்திரவம், மலவாசல் தொப்புள் கிளைகள், மூலமுளைகள், அடிதள்ளுதல், பவுந்திரம் மூலவாயு, மூலச்சூடு, அஜீரணம், புளித்தேப்பம், கட்டு கைக் குன்மவாயுக்கள், சீத இரத்தம் விழுதல், மலச்சிக்கல் முதலிய மூலரோகங்களையும் நீக்கும் நவீன சஞ்சீவி! 6 - அவுன்ஸ் ரூபா 50/- வைத்தியராஜ் இஸ்மாயில் ஜே. பி. அட்டாளைச்சேனை.

வி. இ: 082582

## பீனிசம்

"பீனிசகேசரித் தைலம்" நாசியில் இரத்தம் வடிதல், சதா தும்மல், தலைவலி, தலைப்பாரம், நாசயடைப்பு, நாசகத்தின் சவ்வு வளர்தல், பீடிகவலி, மண்டைக் கரப்பான், தொண்டைக்கரப்பன், சொடுகு, மயிருதிர்தல் முதலிய பீனிச ரோகங்கள், மண்டை மாந்தை பரிசுதண்ட பணிபோல அகலும். நாடெங்கும் புழக்கமுறுகிறது. ½ போத்தல் ரூபா 30/00 வைத்தியராஜ் J. P. "முகம்மதியா வைத்தியசாலை" அட்டாளைச்சேனை.

வி. இ:-082582

## வாதம்

"வாதராஜாங்க எண்ணெய்" நான் சென்ற பாரிசவாதம், சந்து வாதம், முகவாதம், முழங்கால் வாதம், பிறவிவாதம், இளம் பிள்ளைவாதம், அண்டவாதம், வாதக்குடைப்பு, இடுப்புப் பிடிப்பு, நரம்புத்தளர்ச்சி, பெண்களின் இரத்த சம்பந்தமான ரோகங்கள், பரிசுதண்ட பனிபோல் அகலும். யாவராலும் புகழப்படுவது ½ போத்தல் ரூபா 35/- வைத்தியராஜ், எம். பி. பி. எம். இஸ்மாயில் ஜே. பி., முகம்மதியா வைத்தியசாலை, அட்டாளைச்சேனை.

வி. இ:- 082582

## மாற்று திருமணம்

மணமகனும் மணமகளும் தேவை:- இலங்கை சோனக தந்தை தன் 30 வயது மகனுக்கும், 28 வயது மகளுக்கும் இஸ்லாமிய பற்றுள்ள மணமகளையும் மணமகனையும் மாற்றுத் திருமணம் செய்வதற்கு தேடுகிறார். மணமகன் ஆங்கிலத்தில் கல்வி பயின்றவர், தையற்கலையில் டிப்ளோமாவரை பயின்றவர், மணமகள் ஆங்கிலத்தில் உயர் கல்வி பயின்றவர். சொந்த வியாபாரம் செய்பவர். போதிய சகல வருமானம் உண்டு. மணமகளின் வயது கவனத்திற்கு எடுக்கப்பட மாட்டாது. விதவைகளும் கவனத்திற்கு எடுக்கப்படும். முதல் கடிதத்திலேயே முழு விபரங்களையும் எழுதவும்.

(சகல கடிதத் தொடர்புகளும் இரகசியமாக வைக்கப்படும்) விண்ணப்பிக்கவும்:- விளம்பர இலக்கம்: 837101 மே/பா, சிந்தாமணி விளம்பர பீடம், த. பெ. இல; 1257 கொழும்பு-12.

## ரஷியர்கள்தேவை

கொழும்பில் உள்ள முஸ்லிம் ஹோட்டலுக்கு 5 வருட அனுபவமும் நேர்மையும் உள்ள கஷியர்கள் தேவை. 15 ஆம் 16 ஆம் திகதிகளில், காலை 9 முதல், மாலை 5 மணிவரை ஹோட்டல் டி இக்பால், 240, பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12. எனும் முகவரிக்கு அடையாள அட்டையுடன் நேரில் வரவும். தகுதி இருப்பின் உடன் தொழில்.

வி. இ:- 041242

## வலம்புரிச் சங்கு

சிறந்த வலம்புரிச்சங்குகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும், மேஜர் டி சொய்சா 188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு-13 போன்: 33325

வி. இ:- 040800

## பெண்களுக்கு

பெண்களின் மாதவிடாய் எவ்வளவு தாமதமானாலும் உடன் நிவாரணம் பெறுவதற்கும், பாதுகாப்பான சிகிச்சை பெறுவதற்கும் சந்தியுங்கள் பூரண சுகத்தின் பின் பணம் செலுத்தலாம். சிகிச்சை நிலையம் இரவும் திறந்திருக்கும். சிசிராஸ் கிளினிக் மரதன்கடவல.

வி. இ: 167250

## யுனானி வைத்தியம்

சிறுபிள்ளை, தாய்மார் நோய்களுக்கும், மூத்திரகோசத்தில் மணல் - கல், ஆறாத நாள்பட்ட இரணம் போன்ற உபாதைகளுக்கும், அதிநம்பகமான யுனானி வைத்திய முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிகிச்சை நேரம் :- காலை 8.30 முதல் மாலை 6.30 வரை (வெள்ளிக்கிழமை மட்டும் மூடியிருக்கும்.) "த யுனானி மெடிக்கல் கிளினிக்" 396, நீர்கொழும்பு ரோடு கந்தானை. தொலைபேசி: 536387.

வி. இ:- 082516

## ஜோதிட கணிப்பு

* பிறந்த - குறிப்பு - 25/-
* பிறந்த ஜாதகக் குறிப்பு - 55/- (புத்தக வடிவில்) * திருமணப் பொருத்தம் - 30/- * தற்போதைய பலன் அறிய - 15/- * எண் ஞானக் குறிப்பிதழ் - 55/-(நடந்த 4 - நடப்பது 5 வருடம்) இலவச கடிதத் தொடர்போ... வி. பி. பி. ஆடரோ அனுப்பக்கூடாது. மணியோடருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோதிட தத்துவஞானி P. K. சாமி 33, இணச்சந்தை - நுவரெலியா.

வி. இ: 167249

## மலையாள மாந்திரீகம்

ஆரம்பக் கல்வி முதல் பட்ட... சட்டப்படிப்பு மாணவர்களின் ஞாபக சக்தி - திறமைச் சித்தி போன்ற அனைத்தும் கைகூட கல்வி ஞானக் கலசம், மற்றும் ஆண், பெண், வசியம், வியாபார விருத்தி யந்திரம் இவைகளுக்கு 130/- மட்டுமே. இலவசத் தொடர்புகளில்லை, மணியோடருடன் தொடர்பு கொள்க. நேரில்... வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் வருக. சோதிட தத்துவ ஞானி, பி. கே. சாமி, 33, இணச்சந்தை, - நுவரெலியா.

வி. இ: 167249

## ஆங்கில புத்தகம்

ஆங்கிலத்தை இலக்கிய, இலக்கண ரீதியாகப் பயின்று பிறர் உதவி இல்லாமலேயே எளிதாக பேசவும், எழுதவும் (எவரும் படிக்கக் கூடிய வகையில் ஆங்கில மொழி உச்சரிப்புக்கள் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன.)

"A DIRECT METHOD ENGLISH COURSE"

விலை 13/- வி. பி. பியிலும் பெறலாம்.

S. Kalidas, B.A., No. 21, 2nd Floor, Bristol Building, Colombo-1.

வி. இ: 040759

## தேவை

கொழும்பில் உள்ள முஸ்லிம் ஹோட்டலுக்கு ரொட்டி, அப்பம், சோட்ஈட்ஸ் தயாரிக்கத் தெரிந்தோர் இம் மாதம் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் ஹோட்டல் டி இக்பால், 240, பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12. எனும் முகவரிக்கு நேரில் வரவும். உடன் தொழில் உண்டு.

வி. இ:- 041243

## ஆட்டுக்கல்

அம்மி, ஆட்டுக்கல், உரல், திருகை வேண்டுமா, கருங்கல்லில், கைதேர்ந்த கலைஞர்களால் கடையப்பட்டது ஹோட்டலுக்குத் தேவையான பெரிய அளவுகளிலும் கிடைக்கும். வியாபாரிகட்கு விசேஷ கமிஷன் உண்டு. தொடர்புகொள்க, சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.

## நியூமரலாஜி

நியூமரலாஜி அபிமானிகளின் பேராதரவுடன் எமது சேவையைத் தொடர்கிறோம். தங்களது பிறந்த திகதிக்கேற்ற பெயரையும், வாழ்க்கையின் இன்னோரன்ன பல அம்சங்களையும் அதிர்ஷ்டமாக்கிக் கொண்டு - மகிழ்ச்சிகரமாக வாழ விரும்புவோர் எமக்கு எழுதலாம்.

Sulfika Buhary, 86. Horana Road, Eluwila — Panadura.

வி. இ: 081913

## மருந்து

இதோ இரகசிய மருந்து மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. (ஆடவர்களுக்கு மட்டும்) ஆடவர்களே! உங்கள் அந்தரங்கமான உறுப்பில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் நிவர்த்தி கொள்ள விபரங்களுக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி. அரசாங்க பதிவு பெற்ற பி. எம். திசாநாயக்கா குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிருந்து மாவத்தை, புறக்கோட்டை.

வி. இ: 040576

## யந்திரம் மந்திரம்

யாருக்கும் சொல்ல முடியாத சொல்லியும் பலன் கிடைக்காத மனக் கஷ்டங்களா? காதலர்களுடைய பாசம் மாறுமல் இருக்க வேண்டுமா? தலைவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா? கிரக தோஷமா? செய்வினை சூனியமா? ஆகியவற்றிற்கு நிவாரணம் அளிக்கப்படும். விபரங்களுக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அரசாங்க பதிவு பெற்ற பி. எம். திசாநாயக்கா குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர், (நான்கு தேவாலய பிரதம தர்ம கர்த்தா) 55, மிருந்து மாவத்தை புறக்கோட்டை. போன்: 33955

வி. இ: 040576

## கட்டழகு

பெண்கள் கட்டழகுடன் திகழ, தனது உயரத்திற்கும் பருமனுக்கும் ஏற்ற மார்பகங்கள் அல்லாத மெலிந்து தளர்ந்து போன பெண்களுக்கு அழகான பருமனான மார்பகங்களையும் தோற்றத்தையும் பெற இரும்பவும் தைலம் தயாரிக்கப்பட்டுள்ளது. விபரங்களுக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அரசாங்க பதிவு பெற்ற லீலாவதி அத்தநாயக்க 55, மருந்து மாவத்தை புறக்கோட்டை.

வி. இ: 040576

## சிங்கள புத்தகம்

"SINHALA COURSE"

அப்புத்தகத்தின் மூலம் தமிழைக் கொண்டு இலகுவாக சிங்களம் பேசவும், எழுதவும் இலக்கணத்தோடு கற்றுக் கொள்ளலாம். விலை 13/50 வி. பி. பியிலும் பெறலாம்.

Rajeswary, G. S., 32, Nelson Place, Wellawatte, Colombo-6

வி. இ: 040759

## பில்கிளாக் தேவை

கொழும்பு நகரில் உள்ள முஸ்லிம் ஹோட்டலுக்கு அனுபவமுள்ள பில் கிளார்க்குகள் தேவை. 15 ஆம் 16 ஆம் திகதிகளில் அடையாள அட்டையுடன் ஹோட்டல் டி இக்பால், 240 பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12. எனும் முகவரிக்கு நேரில் வரவும், உடன் தொழில் உண்டு.

வி. இ:-041244

## விளையாட்டுச் சாமான்கள்

இறக்குமதி செய்த அழகான பொம்மைகள், பிளாஸ்டிக் திராட்சை பழக் கொத்துகள், பட்டரி கார்கள், இங்கிலீஸ் பின்னல் நூல், பின்னல் ஊசிகள், பேபி கொட்சீட் முதலியவை மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். ஸ்டேன்லீஸ், 192, மெயின் வீதி, கொழும்பு - 11.

வி. இ. 117440

## தலைமுடி அழகு

முடி உதிருகின்றதா? பூச்சிக் கடியா?, நரைக்கின்றதா? சொட்டைத் தலையா? RAJARANI ஸ்பெஷல் வாசனை மருந்தால் சீக்கிரம் சுகமடையும். விபரங்களுக்கு இன்றே முத்திரைக் கவரொன்றை அனுப்பிக் கேளுங்கள். ராஜா வைத்தியர் 120, கொஸ்கம, KOSGAMA

வி. இ:- 040944

## மாந்திரீகம்

ரூபாய் 3.50 க்கு முத்திரையும் பிறந்த திகதியையும் அனுப்புகிறவர்களுக்கு கஷ்டம் அதிர்ஷ்டம். ஆண், பெண் வசியம் தொழில் கிட்ட வியாபாரம் தொழில் முன்னேற இலவச விபரத்துடன் பரிகாரம் செய்து அனுப்பப்படும். முகவரி, ஏ. வேல்ஜா, 95, தோபொட ரோட், மத்துகம.

வி. இ: 082001

## அதிர்ஷ்ட சோதிடம்

பிறந்த திகதியை எழுதி ரூபாய் 3.50க்கு முத்திரை அனுப்புகிறவர்களுக்கு கஷ்டம் அதிர்ஷ்டம், வாழ்க்கை முன்னேற்றம் பற்றி இலவசமாக ஜோதிடம் எழுதி அனுப்பப்படும். லக்ஷ்மி ஜோதிடநிலையம் புலக்பிடிய.

வி. இ: 040600

## வைத்தியம்

தலைமயிர் நரைக்கிறதா? உதிர்கிறதா? உடல் மெலிவுண்டா? ஊக்கம், சக்தி குறைவா? சொறி, தேமல் உண்டா, உடல் கருமையா? இலவச விபரம் அறிய ரூபா 3/50 க்கு முத்திரை அனுப்பி மருந்து பெற்றுக் கொள்ளவும், வைத்தியர், ஏ. வேல்ஜா தெல்ஒழுவ தெகிபோவிற்ற

வி. இ:-040600

## மந்திர சக்தி

வசியம், மூன்று நாட்களுக்குள் பலன், நீங்கள் விரும்பும் ஒரு இதயத்தை வெல்ல; உங்களை விட்டுப் பிரிந்தவர்கள் மீண்டும் உங்களை நாடிவர; பெரியவர்களின் நன்மதிப்பைப் பெற, பெயர்களுடன் எழுதுக. இது ஒரு தெய்வ அன்பளிப்பு. ஆகையால், கட்டணம் ரூ. 26/50 மட்டுமே. வி. பி. பி. ஆடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும் — பாரத தேவ மந்திரய, திம்பிரிகஸ்கட்டுவ.

வி. இ: 041249

## ஜின்செங் வில்லைகள்

கிழக்குக் கொரியாவில் தயாரிக்கப்பட்டது. கொரிய செய்யப்பட்ட விசேஷ ஜின்செங் செடியின் வேரிலிருந்து உண்டாக்கப்பட்டது. பல நூறு வருடங்களுக்கு மேலாக மேற்கத்திய, கிழக்கு நாடுகளில் உபயோகத்தில் இருந்து வருகிறது. ரத்த அழுத்தத்தை சீராக்குகிறது. நீரிழிவு நோயின் தன்மை குறைக்கிறது. உடலுக்கு உற்சாக சக்தியைக் கொடுத்து மயக்கம் முதலிய அபாயங்களையும் போக்குகிறது. 50 வில்லைகள் கொண்ட போத்தல் ஒன்றுக்கு ரூ 110/-வி. பி. பி. யில் அனுப்பப்படும். வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. ஏக விநியோகஸ்தர்கள்.

Brite Enterprises, 123, Olcott Mawatha, Colombo-11. தொலைபேசி: 24392

வி. இ: 041208

## இராணுவ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழியில்லை — இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

இது சம்பந்தமாக அரசாங்கத்துக்குச் செய்யப்பட்ட சிபார்சு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

வடக்கில் உள்ள இராணுவ முகாம்கள் எல்லாவற்றிலும் நவீன ஆயுத வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது.

இதற்கிடையில் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இருந்து கொள்ளையிடப்பட்ட மூன்று எக்ஸ்புளோடர் கருவிகளைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் நாசவேலைகளில் ஈடுபடக் கூடும் என பொலீஸார் கருதுகின்றனர்.

அதனால் இப்போது வடபகுதியில் பொலீஸ் முட்டாடை ரோந்துச் சேவைகள் இரவு நேரங்களின் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அரசாங்க அலுவலகங்கள், பாலங்கள் ஆகியவற்றைத் தீவிரவாதிகள் தகர்க்காமல் தடுப்பதில் ஆயுதப் படையினரின் கவனம் திரும்பியுள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் சகல வசதிகளும் கொண்ட நிரந்தர இராணுவ முகாம்களை நிறுவதும் துரித ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

(ஞ—மு)

## கூட்டணி தலைமை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரகாசனையே அதற்கு நியமிப்பது என்றும், அது குறித்து அவரது விருப்பத்தை அறிவது என்றும், அதனை அவர் ஏற்க மறுக்கும் பட்சத்தில் திரு. என். நவரத்தினத்தை (கரிகாலனை) நியமிப்பதெனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

● இதேவேளை முன்னாள் கம்யூனிஸ்ட் பிரமுகரான திரு. வி. பொன்னம்பலம் பொருளாதாரத்துறைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

கட்சிக்கென முதன் முதலாக ஏழுபேர் கொண்ட அரசியல் அதிகாரக் குழுவும் (பொலிட் பீரோவும்) நியமிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய பொதுச் சபைக் கூட்டம் கட்சியின் நல்லூர் காரியாலயத்தில் இன்று (சனிக்கிழமை) காலை கூடியது. பொதுச்சபை உறுப்பினர்களில் சுமார் 70 பேர் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தனர். திரு. மு. சிவசிதம்பரம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

போக்குவரத்துக் கஷ்டங்கள் காரணமாக திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த பொதுச் சபை உறுப்பினர்கள் கூட்டத்துக்கு வரவில்லை. கல்முனையைச் சேர்ந்த திரு. இரா. பன்னீர்ச்செல்வம் கூட்டத்துக்கு வரும் வழியில் வவுனியா பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

புதிய நிர்வாகிகள் தெரிவின் போது திரு. மு. சிவசிதம்பரம் மீண்டும் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அவரது பேரில் இரண்டு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

கட்சியின் செயலாளர் நாயகம் பதவிக்கு திரு. அ. அமிர்தலிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அவரது பேரில் 5 நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

கட்சியின் ஏனைய நிர்வாகிகள் விவரம் வருமாறு:—

சிரேஷ்ட துணைத் தலைவர்: திரு. வே. கயிலாசபிள்ளை.

துணைத் தலைவர்கள்; திருவாளர்கள் இரா. சம்பந்தன், அ. பொ. இரத்தினம், த. இராசலிங்கம், தா. சிவசிதம்பரம்.

அமைப்பு நிர்வாகச் செயலாளர்; திரு. மு. ஆலாலசுந்தரம்.

செயலாளர்கள்; இளைஞர் பேரவை — திரு. இரா. பன்னீர்செல்வம், தொழிற்சங்கம் — திரு. நா. இராசேந்திரன், மகளிர் பேரவை — திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், பொருளாதாரம் — திரு. வி. பொன்னம்பலம், சட்டம் — முடிவில்லை.

இணைப் பொருளாளர்கள்; திரு. வி. தர்மலிங்கம், திரு. வெ. யோகேஸ்வரன்.

செயற்குழு உறுப்பினர்கள்; 1. திரு. ஆ. வேல்முருகு, 2. திரு. பி. வி. கந்தையா, 3. திரு. சி. சம்பந்தமூர்த்தி, 4. திரு. சு. கு. கணபதிப்பிள்ளை, 5. திரு. பொன்வேலுதாஸ், 6. திரு. அ. செ. குலநாயகம், 7. திரு. அ. தங்கத்துரை, 8. திரு. பி. செபமாலை, 9. திரு. என். சி. செல்லத்துரை.

அரசியல் அதிகாரக் குழு (பொலிட்பீரோ): 1. திரு. மு. சிவசிதம்பரம், 2. திரு. அ. அமிர்தலிங்கம், 3. திரு. காசி ஆனந்தன், 4. திரு. மாவை சேனாதிராசா, 5. திரு. என். நவரத்தினம் (கரிகாலன்), 6. திரு. இரா. சம்பந்தன், 7. திரு. தா. சிவசிதம்பரம்.

இம்மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் மன்னாரில் நடக்கவிருக்கும் கட்சியின் மாநில மாநாட்டிற்குக் கொண்டு வருவதற்கான பிரேரணை முன்னறிவித்தல்களை வட்டக் கிளைகள், இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

(ஞ—120)

## கடத்தப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்தில் இருந்து கிரிமலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த மூன்று இளைஞர்கள் சேந்தாங்குளத்தில் பஸ்ஸை நிறுத்தினர், துப்பாக்கியைக் காட்டி பஸ்ஸுக்குள் இருந்த இந்து பிரயாணிகளையும் சாரதி, கண்டக்டர் ஆகியோரையும் கீழே இறக்கி விட்டனர். பின்னர் பஸ்ஸைக் கடத்தி சென்றனர்.

இந்தச் செய்தி கிடைத்ததும் பொலீஸார், இராணுவத்தினர், கடற்படையினர் ஆகியோர் கூட்டாக இணைந்து சம்பவம் நடந்த இடத்தைச் சுற்றியுள்ள பகுதியில் காவலை மேற்கொண்டனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நான்கு மைல் தொலைவில் சன நடமாட்டம் குறைந்த பகுதியில் உள்ள கருகம்பானை ஆலடி மயானத்திற்கு அருகில் பஸ் இன்று சனிக்கிழமை காலை முற்றிலும் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

பிரஸ்தாப பஸ் கோண்டாவில் டிப்போவுக்குச் சொந்தமானதாகும்.

காங்கேசன்துறை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

(த-ப-120-290)

## பாதிக்கப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தார்.

திருமலையில் மக்கள் பாதிக்கப்பட்ட இடங்களையும், அகதிகள் முகாம்களையும் அவர்கள் சென்று பார்வையிட்டனர்.

திருமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன், அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. அ. தங்கத்துரை, நகரசபைத் தலைவர் திரு. இரா. விக்னேஸ்வரன் ஆகியோரை அவர்கள் சந்தித்துப் பேசினர்.

தாம் திருமலை வரும் முன்னர் இங்கு சிங்கள மக்களே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எண்ணியிருந்ததாகவும், ஆனால் நேரில் வந்து பார்த்ததும் ஆச்சரியம் அடைந்ததாகவும் அவர்கள் அப்போது தெரிவித்தனர்.

திருமலையில் பெரும்பான்மையினராக வாழும் தமிழ் மக்கள் அகதிகளாகக் காரணம் என்ன என்றும் அவர்கள் வினவினர்.

பிஷப்மார் ஜனாதிபதிக்குத் தாங்கள் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

(த- ப- 287)

## பகிஷ்கரிப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாலும் பல்கலைக்கழகத்தை மூடிவிட இருப்பதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இந்துப் பல்கலைக்கழகத்தில் மாணவர் பேரவைத் தேர்தலின் போது இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக விசாரணை செய்த ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. ஏ. வி. உடலாகம தலைமையிலான தனிநபர் குழு செய்து கொண்ட சிபார்சின் பேரில் ஆறு சிரேஷ்ட மாணவர்களை பல்கலைக்கழகம் ஆறு மாதங்கள் தொடக்கம் மூன்று வருடங்கள் வரை இடைநிறுத்தம் செய்யத் தீர்மானித்திருந்தது.

இந்தத் தீர்மானத்தை வாபஸ் பெறுமபடி பல்கலைக்கழக மாணவர் பேரவையைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த 6ஆம் திகதி தொடக்கம் வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகின்றனர்.

இந்தப் பகிஷ்கரிப்பு தொடர்பாக பல்கலைக்கழக ஆளுநர் சபை உபவேந்தர் திரு. பீ. எல். பண்டிதரத்ன தலைமையில் கூடி ஆராய்ந்த பொழுது இடைநிறுத்தம் செய்யும் தீர்மானத்தை எப்படியும் வாபஸ் பெறப் போவதில்லை எனவும் —

மாணவர்கள் தொடர்ந்து வகுப்புக்களை பகிஷ்கரித்தால் பல்கலைக்கழகத்தை மூடி விடுவதெனவும் —

விரைவில் நடைபெற இருக்கும் பரீட்சைகளை ஒத்திப் போடுவதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

(த—105)

## இனுவையாவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கப்பட்டது.

காலமானவர் தற்பாதுகாப்புக்காக வைத்திருந்த துப்பாக்கியும் இனம் தெரியாத நபர்களால் அபகரித்துச் செல்லப் பட்டிருக்கிறது.

சிலாபம் பொலீஸார் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

(த—151)

## திருமலை அகதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கர் பகுதியில் 400 ஏக்கர் காணியை காணிக் கச்சேரி மூலம் வழங்குவதற்கு வெளியாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதனை இச் சபை எதிர்த்து, அந்தப் பகுதியில் உள்ள காணியற்ற மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் — இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றும் கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

(ஞ- 120)

## தலா 1 லட்சம் நஷ்ட ஈடு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணத்தில் அண்மையில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்கள் இருவரின் குடும்பங்களிற்கு வெள்ளிக்கிழமை நஷ்டஈடு கிடைத்தது.

எம். ஏ. முத்தையா, சின்னத்தம்பி நிமலர் ஆகியோரின் குடும்பத்தினர் நஷ்டஈட்டைப் பெற்றுக் கொண்டனர்.

தலா ஒரு லட்சம் ரூபா ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது.

முத்தையாவின் ஆறு பிள்ளைகளுக்கும் ஒரு லட்சம் ரூபா பிரித்து வழங்கப்பட்டது, நிமலரின் மனைவியிடம் மற்றைய ஒரு லட்சம் ரூபா ஒப்படைக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா அந்தத் தொகையை மேற்படி குடும்பங்களிடம் நேற்று வழங்கினார்.

(த-ப-1287)

## பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் ஜெருனந்தன்

இன்று (10-07-1983) தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடும் நவிண்டில்-5, இராஜரெட்ணம் பாக்கியசோதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜெருனந்தனை டடி, மம்மி, குமின் அன்ரி, அன்று மாமா, சந்திர மாமா, வேதம் மாமா, குடும்பத்தினர், அப்பம்மா, அம்மம்மா, தாத்தாமார், மற்றும் உறவினர்கள் வளர்மதி போல் வாழ்வில் வளம்பெற வாழ்த்துகிறார்கள்.

வி. இ. [illegible]

# மருதானை—கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் ஆலய மகா கும்பாபிஷேகம்

கொழும்பு, ஜூலை 10

கொழும்பு, மருதானை கப்பித்தாவத்தையில் உள்ள ஸ்ரீகைலாசநாத சுவாமி தேவஸ்தானத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம், எதிர் வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கும், 10.20க்கும் இடையில் மேற்படி மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

இதனை முன்னிட்டு நாளை 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விநாயகர் வழிபாட்டுடன், ஆரம்பக் கிரியைகள் ஆரம்பமாகும்.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை ஆரம்பக் கிரியைகள் தொடர்ந்து நடைபெற்று வரும்.

பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறும்.

யாழ். வளாக இந்து நாகரிகத்துறை பீடத் தலைவர் கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள், ஸ்ரீகைலாசநாத சுவாமி தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ பரமேஸ்வர இராமநாதக் குருக்கள் உட்பட பல பிராம்மணோத்தமர்கள் மகாகும்பாபிஷேகக் கிரியைகளில் பங்குபற்றுவர்.

இவ் வைபவத்தின் போது திருமுறைப் பண்ணிசைமணி, ஓதுவாமூர்த்தி வி. சி. வி. கப்பிரமணியம் பண்ணிசை விருந்தளிப்பார்.

திருவிளங்க நகரத்தார் கும்பாபிஷேக திருப்பணிக் குழுவினரும், ஆலய பரிபாலன சபையாரும் கும்பாபிஷேக வைபவத்துக்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

(ஓ-க)

# பயங்கரவாதத்தை அடக்க பயங்கரவாதத்தை நாடோம்

## பிரதமர் உறுதி மொழி

கொழும்பு, ஜூலை 10

பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த நாமும் பயங்கரவாதத்தில் ஈடுபட முடியாது. அப்படி ஈடுபட்டால் அதில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அனைவரும்தான் உயிர் இழப்பார்கள். அரசாங்கம் இன்றைய நிலையில் மிகவும் அவதானமாக இருக்கிறது.

இப்படி பிரதமர் திரு. ஆர். பிரேமதாச நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சொன்னார்.

திருமலை வன்செயல்கள் தொடர்பாக சபை ஒத்திவைப்புப் பிரேரணை வேளையில் நடந்த விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையிலேயே பிரதமர் அவ்வாறு சொன்னார்.

பிரதமர் மேலும் கூறியதாவது:—

இப்போது எல்லா இடங்களிலும் பலவிதமான பொய் வதந்திகள் பரவுகின்றன. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி நாட்டில் இனக் கலவரத்தைத் தூண்டி விட, சிலர் முயற்சித்து வருகிறார்கள்.

திருமலையில் நடந்த வன்செயல்களில் பாதிக்கப்பட்ட தமிழர், சிங்களவர் பற்றிய புள்ளி விபரங்களை நான் தரலாம். ஆனால் அதற்கு இது சமயமல்ல. முதலில் நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டும். அதன் பின்னர் புள்ளிவிபரங்களைப் பார்க்கலாம்.

தமிழர், சிங்களவர் முஸ்லிம்களாக இருந்தாலும் இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரை நாம் மனித உயிர்களைப் பெறுமதியுள்ளவையாக மதிக்கிறோம்.

நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்க முடிந்த எல்லா முயற்சிகளையும் எடுப்போம்.

அரசாங்கம் இன்றைய நிலையில் மிகவும் அவதானமாக இருக்கின்றது.

பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த நாமும் பயங்கரவாதத்தில் ஈடுபட முடியாது.

அப்படி ஈடுபட்டால் அதில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் அனைவரும்தான் உயிர் இழப்பார்கள்.

உரிய சமயம் வரும் போது திருமலைச் சம்பவங்கள் பற்றிய புள்ளி விபரங்களைத் தருவேன்.

இந்தச் சபையில் இரு தரப்பு அங்கத்தவர்களும் பேசும் போது மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

இந்தப் பேச்சுக்களால் நாட்டில் ஏற்படக் கூடிய விளைவுகளை எண்ண வேண்டும்.

திருமலைச் சம்பவங்களில் சுமார் 200 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன.

அவற்றில் 50 வீதமான வீடுகள் ஓலைக் குடிசைகள்.

அகதிகள் எட்டு முகாம்களில் தங்கியிருக்கிறார்கள்.

சுமார் 1200 அகதிகள் இருந்தார்கள். (வியாழன்) மாலை அவர்களின் எண்ணிக்கை 620 ஆகக் குறைந்திருந்தது.

அகதிகளுக்கு ஜூலை 1ஆம் திகதி முதல் அரிசி பங்கீட்டுக் கிராம் வாரமொன்றுக்கு அரசாங்க அதிபருக்கு உத்தரவிடப்பட்டது.

முதலில் 50 ஆயிரம் ரூபாவை திருமலை அரசாங்க அதிபருக்கு சமைக்க சோறுகள் வழங்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அரசாங்க அதிபர் கேட்கும்போது மேலும் நிதி வழங்கப்படும்.

இப்படி பிரதமர் சொன்னார்.

(க-டா-நு)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் — 1983 ஜூலை 8 இல்.

| | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|
| 100 அமெ. டாலர் | ரூ. 2419.25 | ரூ. 2420.75 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்று விகிதம் — 1983 ஜூலை 8 இல்.

| | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|
| 100 அமெ. டாலர் | ரூ. 2418.60 | ரூ. 2421.40 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. 3732.99 | ரூ. 3753.53 |
| 100 ஜேர்மன் மார்க்ஸ் | ரூ. 938.72 | ரூ. 943.67 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. 313.07 | ரூ. 314.33 |
| 100 ஜப்பானிய யென் | ரூ. 10.0456 | ரூ. 10.0758 |

பாவனையாளர்களுடன், வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப்பிடிக்க மத்திய வங்கி வழங்கும் விகிதம்.

| | ஆகக் குறைந்த வாங்கும் விகிதம் | ஆகக் கூடிய விற்கும் விகிதம் |
|---|---|---|
| 100 ஹொங்கொங் டாலர் | ரூ. 98.48 | ரூ. 98.88 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. 302.87 | ரூ. 304.07 |
| 100 ஈரான் ரியால் | ரூ. 27.91 | ரூ. 28.03 |
| 100 இந்திய ரூபாய் | ரூ. 238.41 | ரூ. 239.39 |
| 100 நேபாள ரூபாய் | ரூ. 166.25 | ரூ. 166.89 |
| 100 பாகிஸ்தான் ரூபா | ரூ. 183.33 | ரூ. 184.09 |

# கமலா கொலை வழக்கு எதிரி விடுதலையானார்

யாழ்ப்பாணம், ஜூலை 9

கல்லூரி மாணவி கமலா கொலை வழக்கில் எதிரியை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே. ஜி. ஆசீர்வாதம் விடுதலை செய்தார்.

எதிர் முதலாம் இரண்டாம் குற்றச்சாட்டுகளுக்கு சுற்றவாளி என ஜூரி சபையினர் ஏகமனதாகத் தீர்ப்பளித்தார்கள்.

இதனை அடுத்தே நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

எதிரியான ராஜன் கந்தசாமி என்பவர் 21ஆம், 22ஆம் திகதிக்கு இடைப்பட்ட பெப்ரவரி 1980ஆம் ஆண்டு ஆனைக்கோட்டை தான் என்னும் இடத்தில் கல்லூரி மாணவி கமலா இராமச்சந்திரன் (வயது 15) என்பவரை கொலை செய்தார் எனவும், அவருக்குச் சொந்தமான ஒரு சோடி காப்பு, ஒரு சோடி ஜிமிக்கி, 5000 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையிட்டார் எனவும் குற்றஞ்சாட்டி பருத்தித்துறைப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மே 9ஆம் திகதி 1983ஆம் ஆண்டு யாழ் மேல் நீதி மன்றத்தில் ஆரம்பமான இந்த வழக்கு விசாரணை வெள்ளிக்கிழமை முடிவடைந்தது.

இவ் வழக்கில் 18 சாட்சிகள் சாட்சியம் அளித்திருந்தனர். தீர்ப்பைப் பார்ப்பதற்காக ஏராளமான கல்லூரி மாணவ, மாணவிகள் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

அரச தரப்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் அரச சட்டத்தரணி எஸ். ஜே. வி. குரூசெட் தம்பையாவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

எதிரி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணிகள் ரி. லிங்கராஜா, ரி. தனராஜசிங்கம், திருமதி குலநாயகி ரட்ணபாலா, ஏ. தெய்வேந்திரன், எஸ். சிவகடாட்சம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

(ஊ-120)

# தமிழ்மொழி மூல முகாமைத்துவ நெறி

## யாழ். பல்கலைக்கழகத்தில்

கொழும்பு, ஜூலை 10

1982/1983ஆம் கல்வியாண்டுக் காலத்தில் தமிழ் மொழி மூலமான முகாமைத்துவ நெறிக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்படுவார்கள்.

இப்படி நாடாளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:—

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு தமிழ் மொழி மூலம் முகாமைத்துவ நெறியில் விரிவுரைகள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுக் கட்டடத்தில் நடைபெறுகின்றன.

இம்மாணவர்கள் 25.10.1982க்குப் பின்னர் யாழ். வளாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

அவர்களுக்கு பல்கலைக்கழக கல்விக்குரிய சகல வசதிகளும் வழங்கப்படும் — இவ்வாறு அவர் கூறினார்.

கொழும்பு மத்தி மூன்றுவது எம். பி ஜனாப் எம். ஹலீம் இஷாக்கின் வாய்மூல வினா ஒன்றினை பிரதி கல்வி அமைச்சரிடம் எழுப்பி இருந்தார்.

அதற்கு பதில் அளிக்கும் வகையிலேயே திரு. வின்சன்ட் பெரேரா இவ்வாறு கூறினார்.

(ஓ-வ-ப)

# அமிர்—மத்தியூ சபையில் லடாய்

கொழும்பு, ஜூலை 10

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூவுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும் இடையில், நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் மோதல் இடம்பெற்றது.

திருமலைச் சம்பவங்கள் குறித்து சபை ஒத்திவைப்புப் பிரேரணை வேளையில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கேள்வி எழுப்பிப் பேசினார்.

அடுத்து கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ பேச எழுந்தார்.

நீங்கள் பதிலளிக்கப் போகிறீர்களா? என்று அவரிடம் கேட்டார் சபைக்குத் தலைமை வகித்த சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார்.

"இல்லை, விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசப் போகிறேன்" என்றார் அமைச்சர் மத்தியூ.

அவர் பேசுகையில், இனக் கலவரத்தில் சிங்கள மக்களும் இறக்கிறார்கள். தமிழ் மக்கள் சிங்கள மக்களைக் கொலை செய்கிறார்கள். வீடுகளை எரிக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் 20 ஆயிரம் சிங்கள மக்கள் இருந்தார்கள். யாழ். பல்கலைக்கழகத்தில் 400 சிங்கள மாணவர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் அங்கிருந்து கலைக்கப்பட்டு விட்டார்கள். திருமலையிலும் அதே நிலையை ஏற்படுத்துவதே சிலரின் நோக்கமாயிருக்கிறது.

சிங்கள மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் விசேஷ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோருகிறேன்.

திருமலையில் இருந்து சிங்கள மக்கள் கலைக்கப்படுகிறார்கள். அங்கு வியாபாரம் செய்யச் சென்ற சிங்களவர்கள் கலைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் நுகேகொடைக்கு வந்து உயிரிழந்தார்.

இனக் கலவரத்தில் இரு தரப்பிலும் உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன என்று சொன்னார்.

எதிர்க் கட்சித் தலைவர் இந்தக் கட்டத்தில் குறுக்கிட்டார்.

அமைச்சர் சொல்வது முற்றிலும் பொய். குழப்பத்தை தூண்டி விடுகிறார், என்று அவர் சொன்னார்.

அமைச்சர் மத்தியூ தொடர்ந்து பேச முற்படுகையில், எதிர்க் கட்சித் தலைவர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்.

திருமலைச் சம்பவங்கள் பற்றி நான் கேள்வி எழுப்பியிருக்கிறேன். பிரதமரிடமிருந்து பதிலை எதிர்பார்த்திருக்கிறேன். முன்னறிவித்தல் கொடுக்காது இந்த விவாதத்தில் அமைச்சர் மத்தியூ குறுக்கிட முடியாது, என்று அவர் சொன்னார்.

"அமைச்சர் இங்கே கற்பனைக் கதைகளைக் கூறுகிறார். யாழ்ப்பாணத்தில் சில வருடங்களின் முன்னர் நடந்ததை இப்போது கூறுகிறார்", என்றும் திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

நான் சொல்வது முற்றிலும் உண்மை என்றார் அமைச்சர் மத்தியூ.

அமைச்சரைப் பேச விடுவது சபைக்கு அவமானம். அவர் பொது மக்களைத் தூண்டி விடுகிறார். அதற்கு சபாநாயகர் அனுமதிக்கக் கூடாது என்றும் திரு. அமிர்தலிங்கம் வேண்டினார்.

சபாநாயகர் அங்கத்தவர்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்.

"நீங்கள் அமைச்சரைப் பேச விடுகிறீர்கள்" என்று சபாநாயகரைப் பார்த்து திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

"நீங்கள் எனக்கு உத்தரவு போட முடியாது" என்று திரு. அமிர்தலிங்கத்தைப் பார்த்து சபாநாயகர் சொன்னார்.

அகலவத்தை அங்கத்தவர் இந்த விவாதத்தில் பேச எழுந்த போது தாம் அவரைத் தடுத்ததாகவும், ஆனால், சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசப் போவதாகச் சொல்லும் போது அவரைத் தம்மால் தடுக்க முடியாது என்றும் சபாநாயகர் கூறினார்.

அமைச்சர் மத்தியூ, யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட நிலை, திருமலையிலும் ஏற்பட இடமளிக்க வேண்டாம் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் அமைச்சர் மத்தியூவுக்குப் பதிலளித்துப் பேசினார்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச இறுதியில் பதிலளித்துப் பேசுகையில், திருமலையில் பாதிக்கப்பட்டோருக்கான புனர் வாழ்வு நடவடிக்கைகள் பற்றி மாத்திரம் இங்கு கேள்வி எழுப்புவதற்கே எதிர்க் கட்சித் தலைவர் முன்னறிவித்தல் கொடுத்திருந்தார். அவர் கேள்வியுடன் நிறுத்தியிருந்தால் சபையில் ஒரு மோதலைத் தவிர்த்திருக்கலாம் என்று சொன்னார்.

எதிர்க் கட்சித் தலைவர் எழுந்து, திருமலைச் சம்பவத்தில் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக நாட்டின் தென் பகுதியில் வதந்திகள் பரவியிருப்பதாலேயே நிலைமையைத் தெளிவுபடுத்த தாம் சில விபரங்களைக் கூறியதாகச் சொன்னார்.

(க-டா-நு)

# தலைமன்னார்துறை பிரயாணிகள் அவதி

பேசாலை, ஜூலை 9

தலைமன்னார் துறைமுகத்தில் குடிதண்ணீர், மலசலகூட வசதிகள் இல்லாததால் பிரயாணிகள் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மலசலகூட வசதியின்றி கடற்கரை ஓரம் அசுத்தமாக்கப்படுவதால் இப்பகுதியில் எந்நேரமும் துர் நாற்றம் வீசுகிறது. இதனால் தொற்று நோய்கள் பரவலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

சில சமயங்களில் தலைமன்னார் துறை ரயில் நிலையப் பகுதியும் அசுத்தமாக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் தலைமன்னார் துறைமுகப் பகுதியில் சுத்தமான போசனசாலை ஒன்று இல்லை. இதனால் பிரயாணிகள் நல்ல உணவு கிடைக்காமலும் அவதியுறுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலைமன்னார் துறைமுகத்தில் குடிதண்ணீர் மலசலகூடம், உணவுச் சாலை போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என பிரயாணிகள் கோருகின்றனர்.

(ஜ-251)

## ஜனாஸா அறிவித்தல்

ஜனாபா எம். எம். பாத்தும்மா அவர்கள் 7. 7. 83 காலமானார். அன்னாரின் ஜனாஸா அப்துல் ஹமீத் வீதி, 111/60, ஆம் இலக்க இல்லத்தில் இருந்து எடுத்து செல்லப்பட்டு மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தகவல் புதுக்கடை ரசூல் மௌலாத் அங்கம் 111/7, அப்துல் ஹமீத் வீதி கொழும்பு—12.


விசேடமாக குறைக்கப்பட்ட விலைகளில்...

சிறிய, பெரிய நெளிவு

**கல்வனைஸ்ட் கூரைத்தகடுகள்**

("டபிள் ஸ்டார்" — பிராண்ட்)

தரமானவை, அழகானவை, நீடித்த பாவனைக்கு உத்தரவாதமுடையவை!

32 கேஜ் சிறிய நெளிவு 6 அடி முதல் 10 அடி வரை ஒரு நீள அடி ரூ. 8/— மட்டுமே

35 கேஜ் பெரியநெளிவு 6 அடி முதல் 10 அடி வரை ஒரு நீள அடி ரூ. 7/— மட்டுமே

மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

**fபெரோ ஸ்டீல்**

28, அப்துல் ஜப்பார் மாவத்தை, கொழும்பு—12.

தொலைபேசி: 35494 — 549548



**ஆண்மைக் குறைவு**

உங்களுக்கு ஆண்மைக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தியின்மை உண்டா? இதன் காரணமாக திருமணம் தடைப்படுகிறதா? அப்படியாயின் உடன் பாவியுங்கள்.

**SEXUAL CREAM**

(Made in Hong Kong)

விலை ரூபா: 74/90

EVENING CAPSULES

விலை: ரூ. 49/90

இந்த இரண்டு மருந்துகளையும் ஒரே சமயத்தில் பாவித்துவரின் விரைவில் குணம்காணலாம்.

மேலை நாடுகளில் பிரபல்யம் வாய்ந்தது. சந்தையில் கிடைக்கும், தரமான சிறந்த மருந்து. செல்வீய தாதுக்களை கட்டுப்படுத்தும் சக்தி கொண்டது. நீடிய இன்பத்தை வழங்கும். அண்டவாயு, ஹேர்னியா போன்ற கோளாறுகளை சுகப்படுத்தும். இளைஞர்களின் சொப்பன ஸ்கலிதங்களை விரைவில் குணப்படுத்தும்.

தமிழ், சிங்கள, விளம்பரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வி. பி. பி. யில் பெற ரூ. 5/— முற்பணம் அனுப்பவும்.

**லீலா ஸ்டோர்ஸ்**

அரச மரத்தடி, கொழும்பு-11.



**ஆண்களுக்கு மாத்திரம்**

ஆண்களின் இரகசிய நோய்களான ஆண்மைக் குறைவு வீரியமின்மை, துரித ஸ்கலிதம் நரம்புத் தளர்ச்சி, இல்லறத்தில் விருப்பமின்மை ஆகிய கோளாறுகளுக்கு 30 வருட அனுபவமுள்ள என்னை நேரில் சந்தியுங்கள். அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளுங்கள். இரகசியங்கள் யாவும் பாதுகாக்கப்படும்.

**Dr. ஏ. முகம்மது**

Regd. No. 6345

கொழும்பு மெடிகல் சென்டர்.

190, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13



**ஆஸ்த்மா**

என் மனைவிக்கு கடந்த 6 வருடங்களாக இருந்த மார்ச்சளி, இழுப்பு, மார்பில் ஏற்படும் "கர் குர்" என்ற சத்தம் ஆகியவற்றை டாக்டர் அப்துல்லா முகம்மது அவர்கள் பூரணமாகச் சுகப்படுத்தி விட்டார். என் மனைவியின் நோய்க்கு நான் செய்யாத வைத்தியமில்லை. காணாத டாக்டர்கள் இல்லை. நன்றி.

திரு. பீ. சாம்தியாப்பிள்ளை
போஸ்ட் மாஸ்டர்
கரவெட்டி.

சிறு வயதில் முதல் எனக்கு தீராது இருந்து வந்த ஆஸ்த்மா நோயை டாக்டர் ஏ. முகம்மது அவர்கள் ஒரே ஒரு மருந்தில் சுகப்படுத்தி விட்டார். என் அன்பு கனிந்த நன்றியுடன், பாராட்டுகிறேன்.

ஜனாப் ஏ. எம். உவைஸ்
30, பஸ்சொரன்னாமட ரத்துகொதராதிவல
அக்குரணை.

எனது மனைவிக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா என்ற மார்ச்சளியை டாக்டர் முகமது அவர்கள் சுகப்படுத்தி விட்டார் நன்றி.

திரு. இ. இராசமாணிக்கம்
8ம் வட்டாரம், புங்குடுதீவு.

அன்புள்ள டாக்டர் முகம்மது அவர்கட்கு, தங்கள் ஆஸ்த்மா மருந்துகளை நான் விநியோகித்து பல பேர்களுக்கு நல்ல சுகம். நன்றி.

திரு. வி. நடராஜா
ப்யாகம இழக்க கூட்டுறவுச் சங்கம்,
அக்கரப்பத்தனை.

கடந்த 7 வருடமாக என் அம்மா ஆஸ்த்மா என்ற இழுப்பு நோயால் பட்ட துன்பமும் கஷ்டமும் எழுத்தில் அடங்காது. நாங்கள் செய்யாத வைத்தியம் இல்லை. கடைசியில் மருந்துகளைப் பாவித்த பின் இழுப்பு பூரணமாக நின்று — நன்றாகச் சாப்பிட்டு நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார். கடவுளுக்கு அடுத்தபடியாக உங்களுக்கு என் நன்றி.

ஒப்பம்: திருமதி லலிதா பழனிதம்பி
லலிதா ஸ்டோர்ஸ், முத்தையன்கட்டு,
வட்டுக்கோட்டை.

புனிதமான விசேஷ மருந்துகள் சுலபமாக ஆஸ்த்மா என்ற மார்ச்சளியை பூரணமாகவும் நிரந்தரமாகவும் குணப்படுத்தப்படுகிறது.

விலை ரூ. 46/—, தபால் 5/—

பின்வரும் வியாதிகள் கோளாறுகள் சீரணக் குறைவு உடல் மெலிவு, பலவீனம், சுவாச வியாதிகள், புண், சொறி சிரங்கு, கசோரம் விரைகள் ஆகிய நோய்களுக்கும் 30 வருட அனுபவமுள்ள டாக்டர் ஏ. முகம்மது அவர்களால் சிகிச்சை அளிக்கப்படும்.

சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு மெடிக்கல் சான்றிதழ் இலவசம்.

**Dr. A. MOHAMED**

Regd No 6347

கொழும்பு மெடிக்கல் சென்டர்.

190, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13


## வானொலி

காலை

5.30 திருப்பள்ளியெழுச்சி
5.35 தோத்திரமாலை
6.00 சைவ நற்சிந்தனை
6.05 கத்தோலிக்க நற்சிந்தனை
6.10 பௌத்த நற்சிந்தனை
6.15 பாமாலை — ஏ. இலகேஸ்வரன்
6.30 செய்திகள்
7.00 ஆங்கிலப் பாடல்
7.30 மாகாணச் செய்திகள்
7.35 இலங்கை கீதங்கள்
8.00 துளிப்பாடற் பயிற்சி
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி
8.45 இசையமுதம்
9.00 உங்கள் பிரச்சினை
9.15 மெல்லிசைப் பாடல்கள்
9.45 அரங்கேற்றம்

பகல்

10.00 சுதும்பல்
10.30 நேயர் கடிதம்
10.45 குங்குமம்
11.15 சிறுவர் மலர்

மாலை

6.00 செய்திகள்
6.20 நோன்பு திறப்பு
6.35 ஞான விளக்கு
7.05 முஸ்லிம் நிகழ்ச்சி

இரவு

8.00 உலகச் செய்திகள்
8.05 இலங்கை நிகழ்ச்சி
8.35 வெளிநாட்டு செய்தி விமர்சனம்
8.50 செய்தி மஞ்சரி
9.00 செய்திகள்
9.30 அபிவிருத்திப் பாதையிலே
10.00 இலங்கை கீதங்கள்
10.30 தாள வாத்தியம்
10.45 கர்நாடக இசை.

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

6.02 "மகா ஹனுல"
6.20 ஜேர்மன் லங்வேஜ்
6.35 வன வாழ்க்கை விவரணச் சித்திரம்
6.50 எக்கடெமிக்ஸ் மேட்டனி
7.00 செய்திகள் — தமிழ்
7.15 ஜெத் சரா
7.45 ரச கத
8.15 செய்திகள் — சிங்களம்
9.30 செய்திகள் — ஆங்கிலம்

### ஐ. டி. என்

9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.45 இந்தியாவுக்கும் மேற்கிந்தியதீவுக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம்
6.30 விதேன் ஒன்
7.00 த கிங் கினாட் ஷோ
7.30 மாட் அன்ட் ஜெனி
8.00 வெஸ்ட் வைட் மெடிக்கல் ஸ்டோரி
9.00 சன்ட் ஆப் ஏடன்
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.45 சன்ட் ஆப் ஏடன் — தொடர்ச்சி

பலரசத் திரட்டு

## போட்டியை காண வந்தவர்களுக்கு விழுந்த வேட்டு

ஜெனிவில், கட்டான் என்னும் இடத்தில் கவலையான ஒரு சம்பவம் நடந்தது.

உதைபந்தாட்டப் போட்டி ஒன்று அங்கு நடைபெற்றது.

போட்டியைக் காண வந்த ரசிகர்களில் சிலர், விளையாட்டு அரங்கு உத்தியோகத்தரின் வீட்டுச் சுவரில் சிறு நீர் கழித்து விட்டார்கள்.

அவர்களை விளையாட்டு அரங்கு உத்தியோகத்தர் கண்டிக்க, அவர்கள் ஆத்திரமுற்று உத்தியோகத்தரின் வீட்டுக்குக் கல்லெறிந்தார்கள்.

உத்தியோகத்தர் அடுத்து என்ன செய்தார் தெரியுமா? தானியங்கித் துப்பாக்கி ஒன்றைக் கொண்டுவந்து ரசிகர் கூட்டத்தை நோக்கி குண்டுமாரி பொழிந்தார்.

ஒருவர் உயிரிழந்தார். 24 பேர் காயமடைந்தார்கள். இந்தச் சம்பவம் நடைபெற்ற போது அந்த மைதானத்தில் 12,000 பேர் திரண்டிருந்தார்களாம். (ர-16)



அழகுப் போட்டியில் மிஸ் கலிபோர்னியா அழகியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டவர் கரோலின் மன்றோ. மறைந்த உலகப் புகழ் பெற்ற மர்லின் மன்றோவுக்கு இவர் ஒரு வகையில் உறவுக்காரியும் கூட. அழகி கரோலின் மன்றோ சிறந்த டி. வி. நடிகையாகவும் திகழ்கிறார். இவர் ஏனோ சினிமாவில் நடிக்க வில்லை, டி. வி. யில் நடிப்பதே பிடித்து இருக்கிறது.

அதற்கு நேரம் சரியாகப் போகிறது என்கிறார். பிடித்த பொழுது போக்கு குளம் குட்டைகளில் நீந்தித் திளைப்பது தூண்டில் போட்டு மீன் பிடிப்பது எனக் கூறும் இந்த அழகி, தான் மட்டும் இன்னும் எந்த ஆணின் தூண்டிலிலும் சிக்க வில்லை என்கிறார். (ர-10)

# பிறப்பை விட ரஷ்யாவில் இறப்பு விகிதம் அதிகம்

வலிமைமிக்க, திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்கிய நாடு ரஷ்யா. அங்குதான் பலர் நீண்டகாலம் — நூறு வயதுக்கும் அதிகமாக வாழ்ந்திருக்கிறார்கள்.

ஆனால் அங்கு இப்போது ஒரு பிரச்சினை.

மதுவினாலும், இருதய நோயினாலும் அங்கு மக்களின் வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. உயிர்ச் சேதம் அதிகமாகியிருக்கிறது.

1964 ஆம் ஆண்டில் அங்கு சாதாரணமாக ஆண்களின் சராசரி வாழ்க்கைக் காலம் 67 வருடங்களாக இருந்தது.

ஆனால் அது இன்று 62 ஆகக் குறைந்துவிட்டது.

அளவுக்கு மீறிய மதுபாவனையால் ஏற்படும் இருதய நோய்கள், விபத்துக்கள் ஆகியவையும் புற்று நோயுமே அங்கு மனிதனின் சராசரி வாழ்க்கைக் காலத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

அங்கு நிகழும் விபத்து மரணங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவற்றுக்கு காரணம் போதைப் பொருள் பாவனையே யாகும்.

ரஷ்யாவில் கடந்த 20 ஆண்டுகளில் இருதய நோயினால் ஏற்படும் மரணங்களின் தொகை நூறு வீதத்தினால் அதிகரித்திருக்கிறது.

ஆனால், அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்தக் கால எல்லையில் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பு 15 சத வீதத்தினால் குறைந்திருக்கிறதாம்.

1976 ஆம் ஆண்டில் மட்டும் மது நஞ்சானதால், 39 ஆயிரத்து 800 பேர் ரஷ்யாவில் உயிரிழந்தார்கள்.

அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில் இது நூறு சத வீதம் அதிகமாகும்.

இந்தக் காலத்தில் அமெரிக்காவில் மது நஞ்சானதால் உயிரிழந்தவர்கள் 400 பேர் மட்டுமே.

மது (அற்கஹோல்) பாவிப்பினால் நோய்க்குள்ளாகுபவர்கள் தொகையும், ரஷ்யாவில் சமீப காலத்தில் வேகமாக அதிகரித்து வருகிறது.

1978 ஆம் ஆண்டு ரஷ்யாவில் உள்ள ஆஸ்பத்திரிகளின் படுக்கைகளில் அரைவாசியை, இத்தகைய நோயாளிகளே நிரப்பியிருந்தார்களாம்.

1980 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி ஆயிரம் ரஷ்யர்களில் 10.3 பேர் ஒரு வருடத்தில் இறக்கிறார்கள்.

இது 1964 ஆம் ஆண்டின் இறப்பு வீதத்தை விட 50 சத வீதம் அதிகமாகும். 1964 ஆம் ஆண்டில் இறப்பு வீதம் ஆயிரம் பேருக்கு 6.9 ஆக இருந்தது.

ரஷ்யாவில் குறைந்த பிறப்பு வீதமும், அதிக இறப்பு வீதமும் காணப்படுவது அங்கு பொருளாதார நெருக்கடி ஒன்றை உருவாக்கக் கூடிய சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

மனித சக்தியின் அளவு குறைந்து வருவது, பொருளாதார சிக்கலைத் தோற்றுவிக்கும் என நிபுணர்கள் அஞ்சுகிறார்கள்.

ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் ரஷ்யாவில் மேற்கொண்ட சில புள்ளிவிவர ஆய்வுகளின் அடிப்படையிலேயே மேற்படி விபரங்கள் தெரியவந்திருக்கின்றன. (க—6)


# கதிர்காமத்திலிருந்து



★ கதிர்காம புனித பூமியில் லட்சம் முறை வசியம் செய்யப்பட்டு பூரண சக்திகொண்ட கதிர்காமம் அதிசிறந்த ஸ்கந்த குமார ஷடாக்ஷர யந்திரம்.

இரண்டு அங்குல கூட்டில் அடைத்து அணிந்து கொள்ளக்கூடியது.

— உங்களுக்கும் —

★ தபால் செலவுக்காக எட்டு ஐம்பது சத முத்திரைகளை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். பணம் அனுப்ப வேண்டாம். தேவை பூர்த்தியானதும் தெய்வத்தின் பெயரால் எமது தேவாலயத்துக்கு ஒரு உதவி செய்வது கடவுள் கட்டளையாகும்.

★ 1983 எசல உற்சவத்துக்கான கடவுளின் கொடுப்பனவாகும்.

## பரீட்சை விண்ணப்பதாரிகளே

ஆண், பெண் ஆகிய எல்லா பரீட்சை விண்ணப்பதாரிகளும் இந்த யந்திரத்தை அணிந்து கொண்டு பரீட்சையில் வெற்றி பெறலாம். எந்தப் பரீட்சையானாலும் சாதி, மத, குலபேதம் இன்றி வயதெல்லை வித்தியாசமின்றி இதை அணிந்து பரீட்சையை வெற்றி கொள்ளலாம். தோற்றப்போகும் பரீட்சை, வயது போன்றவற்றை அறிவித்து யந்திரத்தை தயாரித்து வரவழைத்து அணியுங்கள். 1983 ஆம் ஆண்டின் சகல விதமான பரீட்சைக்கும் இது உகந்ததாகும்.

## திருமண விண்ணப்பதாரிகளே

திருமணம் முடிக்க இருக்கும் ஆண், பெண் இருபாலாரும் எதிர்பார்க்கும் யுவதியையோ, இளைஞனை விரைவில் திருமணம் முடிக்க இருவரினதும் பெயர்களை எழுதி அனுப்பி யந்திரத்தை பெற்று அணிந்து கொள்ளவும். வயது வந்தோர் முதல் வேண்டியவர்களின் விருப்பமும் கிடைக்கும். மணமுடித்துள்ளவர்கள் மத்தியில் கணவன் மனைவி வேற்றுமையை நீக்கச் செய்யும். நல்ல பிள்ளைச் செல்வத்தை பெற்றெடுப்பதற்கு இதனை அணிந்து கொள்வது உகந்ததாகும்.

## ★ சுவீப் ★ தொழில் ★ பரீட்சை ★ விவாகம் ★ மாணிக்கம்


சகல விதமான கிரகங்கள், கண்திருஷ்டி, நாதிருஷ்டி, செய்வினை, கொடிவினை போன்றவை அகலவும், நோய் நிவாரணத்துக்கும், குழந்தைகளின் கிரக தோஷங்கள் அகன்று பாதுகாப்புபெறுவதற்கும், கல்வி முன்னேற்றம் காண்பதற்கும், வீட்டில் தொல்லைகள் அகன்று அமைதி நிலவுவதற்கும், ஒற்றுமை ஏற்படவும், மகிழ்ச்சி கிட்டவும், மேற்கொள்ளும் பிரயாணங்கள் வெற்றி அளிக்கவும், வழக்குகளில் வெற்றி பெறுவதற்கும், ஆண், பெண் இருபாலாருக்கும் நிரந்தர விவாகம் ஒன்றினை ஏற்படுத்தவும், தொழில் வாய்ப்பு பெறுவதற்கும், சுவீப் இரத்தினக்கல் அதிர்ஷ்டம் கிட்டவும், மற்றும் முன்னேற்றத்துக்கும், தேவைப்படும் வெற்றியை அல்லது பொருளை அடைவதற்கு, வர்த்தகர்களுக்கு அதிர்ஷ்டமுள்ள குழந்தைகளைப் பெறுவதற்கும், எதிரிகளை நண்பர்களாக்குவதற்கும், உடல் அழகைப் பெறுவதற்கும், விவசாயமுன்னேற்றத்துக்கும், பாதுகாப்புக்கும், எல்ல பூதங்களின் தோஷங்களில் இருந்து நீங்கவும், தெய்வத்தின் பார்வை கிடைப்பதற்கும் சகல மக்களும் அணியக் கூடியது. மிகவும் உகந்தது. தெய்வ கட்டளையாகும். 50 சதத்து முத்திரைகள் எட்டு மாத்திரமே. பணம் அனுப்ப வேண்டாம். யந்திரத்தை கேட்டு எழுத வேண்டிய முகவரி:—

புண்ணியவான்களே!' உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அவற்றை எழுதி அனுப்பி கூட்டில் அடைத்த கதிர்காம யந்திரத்தை இலவசமாக பெற்றுக் கொண்டு அணியுங்கள். தபால் செலவுக்காக 50 சத எட்டு முத்திரைகளை தவறாமல் அனுப்பி வைக்கவும். வெற்றிக்கான சுவீப் டிக்கட் ஒன்றும் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். உங்கள் தேவை பூர்த்தி அடைவதற்காக எமது தேவாலயத்தில் பூஜை ஒன்று நடத்தப்படும். அதன் மூலம் யந்திரத்துக்கு ஜீவன் ஊட்டப்படும். பாதுகாப்பாக கூட்டில் அடைத்து தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். தேவை பூர்த்தி அடைந்ததும் எமது தேவாலயத்துக்கு ஒரு உதவி செய்யவும். கடவுள் கட்டளை.

கதிர்காம உற்சவம் ஜூலை 10ல் ஆரம்பமாகி 24 வரை நடைபெறும்

முகவரி:—

கதிர்காம தெய்வீக குரு சாஸ்திர பவான் தேவ மந்திராலயம்,
த. பெ. இல: 1
கதிர்காம புனித நகரம்,
கதிர்காமம்.

"பூங்கா" போல் காட்சி அளிக்கும் இவை பூங்காக்கள் அல்ல. வீடுகள்! ஒவ்வொரு வட்டத்திலும் பதினாறு வீடுகள் உள்ளன. இவை இவ்வாறு வட்டமாகக் கட்டப்படுவதால் வீடு கட்டத் தேவையான இடம் பெருமளவு மிச்சப்படுவதோடு வீடுகள் அமைந்த பகுதியில் சாலை வசதி, மின் வசதி, தண்ணீர்க் குழாய் வசதி ஆகியவைகள் அமைக்கும் செலவும் குறைகிறது. அத்தோடு வீட்டின் பின்புறம் குதூகலமாக இருப்பதால், பின்புறம் பாதுகாப்புக்காக காம்பவுண்டுச் சுவர் தேவையில்லை. (ர-10)

# மார்பு நோய்க்கு மருந்து தேனீர்

வேண்டிய அளவு தேநீர் குடியுங்கள். சில கடுமையான மார்பு நோய்களைத் தவிர்க்கலாம்.

சீன டாக்டர் ஒருவர் இப்படி ஆலோசனை சொல்கிறார்.

இந்த டாக்டரின் பெயர் லோ போத்கின். ஒரு பேராசிரியர் இவர். பலரக தேயிலைகளில் இருந்து தாம் ஒருவித பொடியைத் தயாரித்திருப்பதாகவும், சில குறிப்பிட்ட மார்பு நோயாளிகளிடம் அந்தப் பொடியைப் பரீட்சித்துப் பார்த்த போது 80 சதவீதம் குணம் ஏற்பட்டதாகவும் அவர் சீனப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

ஆர்டீரியோ — ஸ்க்லெரோசிஸ் என்னும் மார்பு நோய்க்கு இந்தப் பொடி மிகவும் உகந்தது என்று அவர் கண்டுபிடித்திருக்கிறார். மார்பு நோயாளிகளில் அதிகமானோர் இந்த நோயாலேயே இறக்கிறார்கள்.

தேயிலையில் காணப்படும் ஒருவித வர்ணப் பசையில் நோய்த் தடுப்புத் தன்மை காணப்படுகிறது. இரத்த ஓட்டத்தையும் இது சீராக்குகிறது.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தேநீர் அருந்தி வருபவர்கள் சீனர்கள். ஆரம்பத்தில் அவர்கள் தேநீரை மருந்தாகவே கருதி அருந்தினார்கள். (ர)

# எதிரியைக் காப்பதற்கு நீதிமன்றத்தில் பொய் சொன்னவருக்கு சிறை

ஸ்மைவன் கிரேஸ் (26 வயது) என்பவர் லண்டனில் ஒரு ஹோட்டலில் "குக்" ஆகப் பணி புரிகிறார்.

அவர் தமது வாரச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வீடு திரும்புகையில் வீதியில் நீல் குக் (22 வயது) என்பவன், அவரை வழிமறித்துத் தாக்கி அவருடைய சம்பளத்தைப் பறித்துச் சென்றான்.

விவகாரம் பொலீஸுக்குச் சென்று பின்னர் நீதிமன்றத்துக்கும் சென்றது.

நீல் குக்கை பொலீஸார் பிடித்து வந்து நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

இதற்கிடையில் குக்கின் தாயார் கிரேஸுக்கு போன் செய்தார். தமது மகன் மீது இரக்கம் காட்டும்படி மன்றாடினார்.

தாயுள்ளத்தின் பாசத்தைக் கண்டு நெகிழ்ந்த கிரேஸ், தம்மைத் தாக்கியவரைக் காப்பதற்காக நீதிமன்றத்தில் தவறான தகவல்களை வெளியிட்டார்.

அவர் பொய் சொல்கிறார் என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது.

பிறகு என்ன நடந்தது தெரியுமா? எதிரியைக் காக்க முனைந்த கிரேஸுக்கு ஒன்பது மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ர)



அவள்:— என்ர செல்ல மருமகனே ஒரு பொண்ணு பெத்துத் தாறன் கட்டிக் கொள்ளுவியா.........

சிறுவன்:— இனிப் பெத்துத் தரும்வரை காத்திருக்க முடியுமா, உங்கட மூத்த மகளைக் கட்டி வைக்கிறதுன்னுச் சொல்லுங்க.

# இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள வந்த இறந்தவர்

உங்கள் இறுதிக் கிரியைகளில் (மன்னிக்க வேண்டும்) கலந்து கொள்ள உங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தால்......... என்ன அபத்தமான கற்பனை இல்லையா?

அப்படியான ஓர் அரிய வாய்ப்பு இந்தியாவில் ஜெய்ப்பூர் என்னும் இடத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கிடைத்தது.

சுவாரஸ்யமான கதை அது.

ஜெய்ப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தரான கோவர்த்தன் லால் என்பவர், வீதிவழியே நடந்து செல்கையில் மயங்கி விழுந்து மாண்டதாக கலெக்டர் லக்ஷ்மி சாந் குப்தாவுக்குத் தகவல் கிடைத்தது.

அவரும், மற்றும் அலுவலக உத்தியோகத்தர் சிலரும் இறந்தவரை அடையாளம் காட்டி, அவருடைய உடலை அவரது சொந்தக் கிராமத்துக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தனர்.

உடலை அனுப்புவதற்கு முன் கலெக்டரும், மற்றவர்களும் கூடி நின்று இறந்த சக ஊழியருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அப்போதுதான் அந்த அச்சரியம் நிகழ்ந்தது.

இறந்ததாக இவர்கள் கருதிய கோவர்த்தன் லால் தமது சொந்த சைக்கிளை உழக்கிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார்.

அங்கு நிலைசாக்கிய அச்சரியத்தைச் சொல்லவும் வேண்டுமா?

உண்மையில் நடந்தது என்ன தெரியுமா?

கோவர்த்தன் லாலுடைய அதே தரத்தைச் சேர்ந்த ஒருவர் வீதியில் மயங்கி விழுந்து மாணிக்க, அவரிடம் இருந்த அடையாளக் கார்ட் போன்ற ஆவணங்களைப் பார்த்து கோவர்த்தன் லால்தான் இறந்துவிட்டதாகப் பொலிஸார் முடிவு செய்து கலெக்டருக்கு அறிவித்து விட்டார்கள். இதில் விசேஷம் என்னவென்றால், இறந்தவரின் பெயரும் கோவர்த்தன் லால்தான். அவரும் இந்த கோவர்த்தன் லாலை ஒத்த தோற்றத்தையே கொண்டிருந்தார்.

இறந்ததாக எண்ணி, உயிருடன் திரும்பிய கோவர்த்தன் லாலுக்கு மகத்தான வரவேற்பு. மேலும் பல்லாண்டு அவர் வாழ கலெக்டரும், சக ஊழியர்களும் வாயார வாழ்த்தினர்கள். (ர)



இங்கிலாந்து நாட்டுக்காரர் டெப்பி, பணக்காரர்; விஞ்ஞானி, குழந்தை குட்டி இல்லை பொழுது போவதற்கு ஒரு வாத்தைச் செய்து, அதில் சில கருவிகளைப் பொருத்தி உள்ளார். இந்தக் கருவிகள் "ரிமோட் கண்ட்ரோல்" மூலம் வாத்தை ஆட்டு விக்கின்றன. இவர் வசிக்கும் இடத்தில் உள்ள ஆற்றில் இந்த வாத்தை மிதக்க விட்டு வேடிக்கை காட்டுகிறார். இதைப் பார்க்க சிறுவர்கள் கூட்டம் ஏராளமாக வருகிறது. இதில் ஆத்ம திருப்தி அடைகிறார் டெப்பி. (ர-10)




ஒரு ஜோடி எலிகள் ஓராண்டில் 127 குட்டிகளைப் போடுமாம்.

ஒரு நாளைக்கு ஒரு எலிக்கு 30 கிராம் தானியமும், ஒரு கிராம் நீரும் தேவைப்படுகின்றன.

நாற்றுஐம்பது எலிகள் ஒரு வருடத்தில் உண்ணும் உணவின் எடை என்ன தெரியுமா? அரை தொன்!

இந்தியாவில் மொத்த தானியத்தில் 15 சத வீதம் எலிகளால் நாசமாக்கப்படுகின்றன.

எலிகள் உண்ணும் தானியத்தைப்போல 20 மடங்கு தானியங்கள் அவைகளின் சிறுநீர், மலம் முதலிய அசிங்கங்களால் பாழாகின்றன.

அவைகளின் பற்கள் உளி போன்று கூர்மையானவை. பிறந்த பத்து நாட்களுக்குள் பற்கள் முளைத்துவிடும்.

பிறந்த நான்காவது மாதத்தில் இன விருத்தி செய்வதற்குத் தயார்!

குட்டிபோட்ட மறுநாளே தாய் எலி இனச் சேர்க்கைக்கு "ரெடி"!

உணவின்றி ஒரு வாரமும் நீரின்றி இரண்டு நாட்களும் எலிகள் சமாளிக்கும். (ர-10)

## 20,000 பேர் அதிகரிப்பு

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவின் சனப் பெருக்க வேகம் என்ன தெரியுமா?

ஒரே மாதத்தில் அங்கே சனத்தொகை 20,065 ஆல் அதிகரித்தது. டோக்கியோவில் ஜூன் 1ஆம் திகதி சனத்தொகை 11,736,214 ஆகும், 5,920,797 ஆண்களும் இந்த எண்ணிக்கையில் அடங்குவர். (ர)

## பலரசத் திரட்டு

### திருட்டுப் பூனைக்கு சிறுமி தண்டனை

இங்கிலாந்தில், ஹல் என்னும் இடத்தில் லேம்ப் என்பவர் ஒரு பூனையை வளர்த்து வந்தார். கெவி என்பது அதன் திருநாமம்.

ஒரு நாள் அது வீட்டிலிருந்த தின் பண்டங்களைத் திருடித் தின்று விட்டது. லேம்பின் இரண்டு வயது மகளான வின்ட்சி லேம்ப் என்ன செய்தாள் தெரியுமா?

துணி துவைக்கும் இயந்திரத்துக்குள் கெவியைத் தள்ளி பொத்தானையும் தானே அமுக்கி இயந்திரத்தை இயங்கச் செய்து விட்டாள்.

நல்ல வேளையாக வின்ட்சியின் தாயாருக்கு இயந்திரம் இயங்கும் சத்தம் கேட்டது. அவர் வந்து பூனையை மீட்டார்.

அடுத்து வின்ட்சி மற்றொரு காரியம் செய்தாள்.

துணி துவைக்கும் இயந்திரத்துக்குள் விழுந்து ஈரம் படிந்த பூனையை உலர்த்துவதற்காக "அவன்" அடுப்பில் அதனைப் போட்டு அந்த அடுப்பையும் பொத்தான் அழுத்தி இயங்கச் செய்தாள்.

இம் முறையும் நல்லவேளையாக திருமதி லேம்புக்கு சத்தம் கேட்க, அவர் வந்து பூனை வறுபட்டு இறப்பதற்கு முன்னதாக அதனைக் காப்பாற்றினார்.

இரண்டு வயது வின்ட்சி இப்படிப்பட்ட பொல்லாத காரியங்களைச் செய்வாள் என்று நான் கனவிலும் கருதவில்லை. எனது கண்ணிலிருந்து அவளை ஒரு விநாடி கூட இப்பால் அப்பால் நகர அனுமதிக்க முடியாதிருக்கிறதே. இப்படி வின்ட்சியின் தாயார் ஆச்சரியப்பட்டார். (ர)



# அவுஜா!

அம்பிளிபயர், மைக்ரபோன் ஒலிபெருக்கி உபகரணங்கள் தரத்தில் மிகச்சிறந்தவை!

தற்போது விலைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.
இப்போது பலவித ரகங்களில் ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.
230 V ஏசி அல்லது 12 V கார் பட்டரியில் பாவிக்கக் கூடியது

★ 25 வாட்ஸ்
★ 30 வாட்ஸ்
★ 40 வாட்ஸ்
★ 60 வாட்ஸ்
★ 125 வாட்ஸ்

சகல மொடல்களும் மின்சாரத்திலோ பாட்டரியிலோ இயங்கக்கூடியன



யூனிற
அம்பிளிபயர்
லவுட் ஸ்பிக்கர்



ஹோர்ன்
மெகபோன்
மைக்ரபோன்

சகல அவுஜா உபகரணங்களும் ஒரு வருட உத்தரவாதமுடையன.
சகல உதிரிப்பாகங்களும் எப்பொழுதும் எம்மிடம் கைவசம் உண்டு.

★ கோவில்களுக்கு
★ பள்ளிவாசல்களுக்கு
★ தேவாலயங்களுக்கு
★ பள்ளிக்கூடங்களுக்கு

விசேஷ கழிவு உண்டு.

ஏக இறக்குமதியாளர்கள்:

## றெபேட் ஏஜென்ஸீஸ் லிமிட்டெட்

(என். எச். எம். அப்துல் காதர் ரோட்)
88, றெக்கிளமேசன் ரோட், கொழும்பு — 11.
போன்: 21009



# காரி சோபர்ஸ் பிடி தவற விடவே மாட்டார்!
# அவருக்கு எப்போதும் பிடித்தது
# நெஷனல்



கிரிக்கெட் பந்து பிடிப்பதில் சர் காரி சோபர்ஸ் தவறுவதேயில்லை. அதே போல், நெஷனல் தரும் நற்பயன்களைப் பெறவும் அவர் தவறுவதில்லை.

பல்லாண்டு காலப் பயிற்சியாலும் சிரத்தையாலும் கிரிக்கெட் மன்னராகத் திகழ்கிறார் சோபர்ஸ்.

பல்லாண்டு கால ஆராய்ச்சியாலும் ஆக்கத் திறனாலும் மின்னியக்கத் துறையில் உலகின் மன்னனாகத் திகழ்கிறது நெஷனல்.


தரத்தின் உயர்வைத் தாரணிக்கு நிலைநாட்டிக் காட்டும் இரண்டு சாதனை வீரர்கள்.

சர் கார்பீல்ட் சோபர்ஸ் சொல்கிறார்:

"நான் எப்போதும் நம்பும் நாமம் நெஷனல் - மின்னியக்கப் பொருள் எதுவாயினும், ஒலி, ஒளிக் கருவிகளாகட்டும் மனைச் சாதனங்களாகட்டும், எப்போதும் நான் வாங்குவது நெஷனல்".

அதன் தன்னிகரின்மையைப் பாராட்டுகிறார் ஒரு தன்னிகரற்றவர்.

NV 300 — US $ 430



National

## இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிப்பது நெஷனல்!

ஏக பிரதிநிதிகள்:

**யுனி-வாக்கர்ஸ் லிமிட்டெட்**

கிடைக்குமிடம்:

**நெஷனல் காட்சிச் சாலை**

84, பிரதான வீதி, கொழும்பு 11. தொலைபேசி: 36259, 27970.

SG 250W — US $ 230



அரசியல்

# கூட்டணி கொழும்பு கிளையினர் நீதிமன்றம் செல்ல ஆலோசனை

## மன்னார் மாநில மாநாடு தடைப்படலாம் என அச்சம்

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கொழும்புக் கிளையின் நீண்ட கால உறுப்பினர்கள் சிலருக்கும் தலைமைப் பீடத்தின் ஆசீர்வாதத்துடன் சமீபத்தில் வந்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியவர்கள் சிலருக்குமிடையே பூசல் ஏற்பட்டு விட்டது.

அது கொழும்புக் கிளையைப் பிளவுபடுத்தி இரு கூறுகளாக்கு மளவுக்கு வளர்ந்து விட்டது.

நீண்ட கால உறுப்பினர்கள் சிலர் நீதியை நிலைநாட்டவும் தமது உரிமையை உறுதிப்படுத்தவும் நீதிமன்றம் செல்வது தான் ஒரே வழி என்றால் அதற்கும் தாம் தயார் என்று மார் தட்டுகிறார்கள்.

கொழும்புக் கிளையின் நீண்ட கால உறுப்பினர்களில் எவரேனும் நீதிமன்றம் சென்றால் அவர்கள் வெல்வார்களா, தோற்பார்களா என்பது வேறு விஷயம்.

எதிர்வரும் 23, 24-ஆம் திகதிகளில் குறித்தபடி மன்னாரில் மாநில மாநாட்டை நடத்த முடியாது போய் விடுமோ என்பதுதான் கூட்டணியினர் பலரின் கவலை.

கொழும்புக் கிளை முறையாக அமைக்கப்படவில்லை. அந்தக் கிளையின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்வது சட்ட விரோதம். ஆகவே இந்தப் பிரச்சினையில் ஒரு தீர்வு காணும் வரை மாநாடு நடத்தக் கூடாது. நீதிமன்றம் மாநாட்டை நடக்காது தடுத்து வைக்க வேண்டும் இப்படி நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தாலே போதும். மாநாடு நீதிமன்றத்தால் தடை செய்யப்படலாம்.

மாநாடு தடை செய்யப்பட்டால் எம். பிக்களின் இராஜினாமா விஷயத்தில் முடிவு செய்வது எப்படி?

எம். பிக்களின் பதவிக் காலம் இம்மாதம் 21-ஆம் திகதி முடிகிறது.

கூட்டணி எம். பிக்கள் தாம் முன்னர் அறிவித்தபடி 21-ஆம் திகதியுடன் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு மீண்டும் தேர்தலுக்கு நிற்க வேண்டும்.

பதவியை இராஜினாமாச் செய்யும் எண்ணமும் மீண்டும் தேர்தலுக்கு நிற்கும் துணிச்சலும் கூட்டணி எம். பிக்களுக்கு இன்று இல்லை.

அதனால், அவர்கள் இராஜினாமா விஷயம் குறித்து மாநில மாநாட்டில் ஆராய்வோம் என்கிறார்கள்.

இன்றைய நிலையில் பதவியை இராஜினாமாச் செய்வதால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை மாநாட்டில் எடுத்து விளக்குவோம்.

மாநாட்டுப் பிரதிநிதிகள் நமது விளக்கத்தை ஏற்று நாம் இராஜினாமாச் செய்யத் தேவையில்லை என்று முடிவு செய்வார்களேயானால் அது தமிழினத்துக்கு நன்மையாக அமையும்.

நாம் இராஜினாமாச் செய்து விட்டு மீண்டும் தேர்தலுக்கு நிற்க வேண்டும் என்று மாநாடு தீர்மானித்தால் அந்தத் தீர்மானத்துக்கு கட்டுப்பட்டு நடக்க நாம் சித்தமாக இருக்கிறோம் என்கிறார்கள் எம். பிக்கள்.

இந்த நிலையில் நீதிமன்றத் தடை உத்தரவு காரணமாக மாநாடு நடக்க முடியாது போகுமானால் அது கூட்டணி எம். பிக்களுக்கு மிகவும் வாய்ப்பாக இருக்கும்.

நீதிமன்ற விவகாரம் முடிந்து மாநாடு நடக்கும் வரை எம். பிக்கள் தமது இராஜினாமா விவகாரத்தைப் பின்போடலாம் அல்லவா?

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தைக் கூட்டணி எம். பிக்களுக்கு வழங்குவது புத்தியா?, கொழும்புக் கிளையின் நீண்ட கால உறுப்பினர்களில் ஒரு சிலர் இப்படியும் சிந்திக்கிறார்கள்.

நீண்டகால உறுப்பினர்கள் தமது கொழும்புக் கிளைக் கூட்டத்தைக் கொழும்பு பார்லிமெண்ட் வீதியில் உள்ள அரசாங்க எழுது வினைஞர் சங்க அலுவலகக் கட்டடத்தில் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் மேற்கண்ட சிந்தனைக்கு உருவம் கொடுத்துப் பலர் கருத்துப் பரிமாறிக் கொண்டார்கள்.

ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக நடந்த கொழும்புக் கிளை கூட்டம் இது.

### கொழும்புக் கிளை கூட்டம்: 1

முதல் கூட்டம் கடந்த 2-ஆம் திகதி சனிக்கிழமை நடந்தது.

அந்தக் கூட்டம் கொழும்புக் கிளைப் புனரமைப்புக் கூட்டம். கொழும்பில் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரத்தின் இல்லத்தில் அவர் முன்னிலையில் பாரிஸ்டர் கே. சண்முகம் தலைமையில் நடந்தது.

கொழும்புக் கிளை அமைப்பாளர் திரு. எஸ். நவரத்தினம் (கரிகாலன்) கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

கூட்டத்துக்கு நீண்ட கால உறுப்பினர்கள் பலர் அழைக்கப்படவில்லை என்றும் —

கிளையின் செயற்குழு கூடி எதுவித முடிவையும் எடுக்காத நிலையில் அமைப்பாளர் புனரமைப்புக் கூட்டத்தைக் கூட்டியது முறைகேடு என்றும் —

திருமலை பற்றி எரிந்து கொண்டிருக்கும் போது அங்குள்ளவர்களுக்குக் கஷ்ட நிவாரணம் அளிப்பது பற்றிச் சிந்திப்பதை விடுத்துப் புனரமைப்புக் கூட்டம் நடத்திக் கொண்டிருப்பது அழகல்ல என்றும் கூட்டத்தில் திரு. ஐ. தி. சம்பந்தன் கூறினார். கூட்டத்தை பின்போடுமாறும், அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அவருடைய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. உடனே அவரும், அவரைத் தொடர்ந்து மற்றும் சிலரும் வெளிநடப்புச் செய்தனர்.

எனினும் கூட்டம் தொடர்ந்து நடந்தது.

கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த பாரிஸ்டர் சண்முகமே கிளைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பழுத்த அரசியல் அனுபவம் உடையவர் பாரிஸ்டர் சண்முகம். சட்டத் துறையில் வல்லவரும் கூட. தமக்குச் சரியென்று பட்டதை எந்த இடத்திலும் ஒளிவு மறைவின்றி அப்படியே எடுத்துக் கூறும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்.

அவர் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் இன்றைய அரசியல் நிலைமையை விளக்கினார்.

தமிழ் மக்களின் இன்றைய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் தமிழ்த் தலைவர்கள் என்று இன்று இருப்பவர்கள் தமிழினத்தை வழி நடத்தல் கூடாது. அவர்கள் விலக வேண்டும். தலைமை மாற வேண்டும் என்றார் சண்முகம்.

அவர் இப்படியாகப் பேசிய போது கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் குறுக்கிட்டார்.

கொழும்புக் கிளை தலைவர் சண்முகத்துக்கும் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரத்துக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. கூடியிருந்தவர்களில் சிலரும் அதில் பங்கு கொண்டார்கள்.

கூட்டணி எம். பிக்கள் தமது எம். பி. பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்றார் சண்முகம்.

நீண்ட காலம் தமிழினத்துக்காகப் பணியாற்றி வரும் இன்றைய எம். பிக்கள் இராஜினாமாச் செய்தால் மீண்டும் அவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்தலில் வருவதற்கு வாய்ப்பு உண்டா?

அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள் தமிழ் மக்கள். எம். பிக்கள் அல்ல. தமிழ் மக்கள் தாம் யாரை விரும்புகிறார்களோ அவர்களை எம். பிக்கள் ஆக்குவார்கள். முன்னர் இருந்தவர்கள் தான் மீண்டும் பதவிக்கு வர வேண்டும் என்பதில்லையே.

அப்படியானால் கூட்டணியின் நிலை? விடுதலை இயக்கத்தை அழிந்து போக விடுவதா?

விடுதலை இயக்கத்தில் குறை இல்லை. அது தொடர்ந்து இருக்க வேண்டும். தலைமையில் தான் பழுது. அது மாற வேண்டும். அல்லது மாற்றி ஆக வேண்டும். அமிர்தலிங்கம் தலைமைப் பதவியிலிருந்து நீங்க வேண்டும். புதியவர்கள் அந்த இடத்துக்கு வர வேண்டும்.

வேறு எங்கேனும் இப்படி நடந்தது உண்டா? இந்தியாவில் தானும் நடந்ததா?

இப்படிக் கேள்வி எழுந்ததும் பாரிஸ்டர் சண்முகம் இந்தியாவில் சமீபத்தில் நடந்திருக்கிறதே என்று உதாரணத்தோடு விளக்கினார்.

சமீபத்தில் இந்திய கிரிக்கெட் கோஷ்டியின் தலைமையில் செய்யப்பட்ட மாற்றத்தையும் புதிய தலைமையில் அந்தக் கோஷ்டி பெற்ற வெற்றியையும் சுட்டிய உலகப் புகழையும் எடுத்துக் காட்டினார் பாரிஸ்டர் சண்முகம்.

### இந்திய கிரிக்கெட் கப்டன் மாற்றம்

சுனில் கவாஸ்கர் நீண்ட காலமாக இந்திய டெஸ்ட் அணியில் அங்கம் வகித்து வருபவர். தடுப்பாட்டத்தில் பல சாதனைகளைப் புரிந்தவர். டெஸ்ட் ஆட்டங்களில் அதிகளவு செஞ்சரிகளை அடித்தவர்கள் வரிசையில் உல

காண்டீபம்

கில் இரண்டாவது இடத்தைப் பெறுபவர்.

இந்தியாவின் வெற்றிக்கு பல சந்தர்ப்பங்களில் வழி சமைத்தவர்.

சுமார் நான்கு ஆண்டு காலமாக இந்திய டெஸ்ட் அணிக்கு அவர் தலைமை தாங்கியவர். கடந்த பெப்ரவரியில் அவரிடமிருந்து காப்டன் பதவி பறிக்கப்பட்டது.

கடைசியாக பாகிஸ்தானுடன் நடைபெற்ற டெஸ்ட் தொடரின் போது இந்திய அணிக்கு அவர் தலைமை தாங்கியிருந்தார். அந்த டெஸ்ட் தொடரின் போது சரியான முறையில் காப்டனாக அவர் இயங்கவில்லை என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

பந்து வீச்சாளர்களை மாற்றும் ஒழுங்கில் பல தவறுகளைச் செய்தார், அவற்றில் அசிரத்தையாக இருந்தார் என்றும் —

தன்னுடைய தடுப்பாட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறார், தனது அணியின் நலனைக் கவனிப்பதை விடுத்து தனக்குப் புகழ் சேர்ப்பதிலேயே கண்ணாக இருக்கிறார் என்றும் — அவர் மீது குற்றம் சுமத்தி கிரிக்கெட் வட்டாரங்களில் பேசப்பட்டது.

அதனாலேயே கடந்த பெப்ரவரியில் அவரிடமிருந்து காப்டன் பதவி பறிக்கப்பட்டது.

அதை அடுத்து —

இளைஞரான கபில் தேவ் இந்திய அணிக்கு புதிய காப்டனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கபில்தேவ் காப்டனாகி 5 மாத காலத்தில் பிரிட்டனில் நடந்த உலக கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இந்தியக் கோஷ்டி இமாலய சாதனை ஒன்றைப் புரிந்தது. உலக கிண்ணத்தை அது தனதாக்கிக் கொண்டது.

உலக கிண்ண சுற்றுப் போட்டியின் பல கட்டங்களில் காப்டன் கபில்தேவ் தனி ஒருவராக நின்று இந்திய அணியின் சரிவைத் தடுத்து நிறுத்தி, வெற்றி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

இப்படிச் சண்முகம் இந்திய கிரிக்கெட் கோஷ்டியின் தலைமை மாற்றத்தை உதாரணம் காட்டினார். இலங்கைத் தமிழினத்தின் காப்டன் அமிர்தலிங்கத்துக்குப் பதிலாக இன்னொருவர் பொறுப்பை ஏற்றால் இங்கும் வெற்றி நிச்சயம் என்றார் சண்முகம்.

கேட்டுக் கொண்டு இருந்தவர்களில் பலர் தம்மை அறியாமலே தலையை அசைத்தார்கள். அவர் சொன்னதில் என்ன தவறு என்று ஒரு சிலர் குசுகுசுத்துக் கொண்டார்கள்.

சண்முகத்தின் இந்தப் பேச்சு அவருக்கு அங்கே ஒரு "பலோயிங்" (Following) ஏற்படுத்தியது.

### கொழும்புக் கிளை கூட்டம்: 2

கடந்த சனிக்கிழமை ஐ. தி. சம்பந்தன் தலைமையில் நடந்த கொழும்புக் கிளைக் கூட்டத்துக்கும் பாரிஸ்டர் சண்முகம் அழைக்கப்பட்டிருந்தார்.

அழைப்பை ஏற்று அவரும் கூட்டத்துக்குச் சமுகமளித்தார்.

இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தவர் திரு. எஸ். சிங்காரநாதன் ஆவார்.

கொழும்புக் கிளைப் புனரமைப்புக் கூட்டத்தைக் கடந்த 1982 நவம்பர் 10-ஆம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தவர் சிங்காரநாதன்.

கொழும்புக் கிளை அமைப்பாளராகக் கரிகாலன் நியமிக்கப்பட்ட சமயம் கூட்டணித் தலைமையின் தலையீட்டால் அந்தப் புனரமைப்புக் கூட்டம் குறித்த தினத்தில் நடைபெறவில்லை.

அதனால்தான் கடந்த வியாழக்கிழமைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புக் கிளையின் நீண்ட கால உறுப்பினர்கள் நடத்திய இந்தக் கூட்டத்திலும் பாரிஸ்டர் சண்முகம் உரை நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் கூறியதாவது:-

தமிழ் இனம் இன்று மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கிறது.

தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்.

மேசைக்கு கீழே இருக்கும் நாய்க் குட்டிக்கு எஜமான், "ஜாம்" பூசிய சின்னச் சின்ன பாண் துண்டுகளைப் போட்டு அதனை அடக்கி வைக்கிறார் அல்லவா? அந்த நிலையில்தான் தமிழ்த் தலைவர்கள் இன்று இருக்கிறார்கள்.

சின்னச் சின்னச் சலுகைகளைக் கண்டு அதற்றில் மயங்கி, இலட்சியத்தை அடைவதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் சும்மா இருக்கிறார்கள் தலைவர்கள்.

மாவட்ட அபிவிருத்திச் சபை போன்ற அமைப்புக்கள் நாய்க் குட்டிக்குப் போடப்பட்ட பாண் துண்டுகள் போன்றவைதான்.

இதேவேளை எமது இளைஞர்கள் சித்திரவதைக்குள்ளாகிறார்கள் என்ற விஷயம் நீதிமன்றம் வரை வந்திருக்கிறது.

கூட்டணித் தலைவர்கள் இது வரை தமது இலட்சியமான கோரிக்கைகள் இவைதான் என்று கூறி அவற்றை அரசாங்கத்தின் முன்னால் வைத்திருக்கிறார்களா?

இல்லை.

முதலில் நாம் எம்முடைய இலட்சியமான கோரிக்கை இதுதான் என்று அரசாங்கத்திடம் தெரிவிக்க வேண்டும்.

வட மாகாணத்திலிருந்தும், கிழக்கு மாகாணத்திலிருந்தும் சுயாட்சியும் வழங்க வேண்டும் என்று நாம் முதலில் அரசாங்கத்திடம் கோர வேண்டும்.

இந்தியாவில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதே அதிகாரங்களை நாம் கோரலாம்.

பயங்கரவாதத்திலும் நாம் சுயராஜ்யத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. அஹிம்சை முறையில் சத்தியாக்கிரகம் போன்ற நடவடிக்கைகள் மூலமே நாம் அதனைப் பெறலாம்.

மற்ற விஷயம் கூட்டணித் தலைவர்களை நீக்க வேண்டும். தலைமையை முற்றாக மாற்றி அமைக்க வேண்டும்.

இங்கு நடப்பது கூட்டணிக் கொழும்புக் கிளைப் புனரமைப்புக் கூட்டம் என்று சொல்லப்படுகிறது.

கடந்த சனிக்கிழமையும், இப்படி ஒரு புனரமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட செயற் குழுவுக்குப் போட்டியாக இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்பவர்கள் இயங்கக் கூடாது.

இங்கு புதிய செயற் குழு எதனையும் தெரிவு செய்யாது. அந்த செயற் குழுவை ஏற்று அவர்களுடன் ஒற்றுமையாகிப் போவதே நல்லது.

அதுதான் எனது கருத்து. இப்படி பாரிஸ்டர் சண்முகம் கூறினார்.

கொழும்புக் கிளை அமைப்பாளர் கரிகாலன் ஏற்பாடு செய்த கொழும்புக் கிளைப் புனரமைப்புக் கூட்டத்தில் கிளையின் புதிய தலைவராக பாரிஸ்டர் சண்முகம் தெரிவு செய்யப்பட்டிருப்பதால் அந்த வகையில் அவர் கூட்டணிப் பொதுச் சபையில் இடம் பெறுவார்.

மாநில மாநாட்டுப் பேராளராகவும் கலந்து கொள்வார்.

கொழும்புக் கிளையின் நீண்ட கால உறுப்பினர்கள் சிலர் ஐ. தி. சம்பந்தன் தலைமையில் நடத்திய கூட்டத்திலும் மாநாட்டுப் பேராளர்கள் ஐவர் தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களில் பாரிஸ்டர் சண்முகமும் ஒருவர்.

மற்றொருவர் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மகனும், கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளரும், கூட்டணித் தலைமைக்கு எதிராக எழுதி வரும் சுதந்திரன் பத்திரிகையின் உரிமையாளருமாவார்.

பாரிஸ்டர் சண்முகம் இரண்டு கிளைகளாலும் தெரிவு செய்யப்பட்டிருப்பதால் மாநாட்டில் கலந்து கொள்வதில் அவருக்குப் பிரச்சினை இல்லை.

ஆனால் சந்திரகாசனும் மற்றும் மூவரும் மாநாட்டில் பேராளர்களாகக் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்களா என்பது தான் கேள்வி.

அவர்களை அனுமதிப்பதானால் கரிகாலன் புனரமைப்புச் செய்த கிளையோடு நீண்ட கால உறுப்பினர்கள் உரிமை கொண்டாடும் கிளையையும் கூட்டணித் தலைமைப் பீடம் அங்கீகரிக்க வேண்டும்.

அது நடக்காது. ஆகவே தான் நீண்ட கால உறுப்பினர்கள் சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்து வருகிறார்கள். அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளைக் கருத்தில் கொள்ளுகிறார்கள்.

## தொண்டமான் திருகோணமலை செல்லாதது ஏன்?

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மக்களின் இதயக் குமுறலைக் காண்டீபம் கடந்த வாரம் அனைவரது கவனத்துக்கும் கொண்டு வந்தது.

தமிழ் அமைச்சர்கள் மூவர் இருந்தும் அவர்களில் எவரேனும் இந்த ஆபத்து வேளையில் திருகோணமலைப் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லையே என்று திருகோணமலை மக்கள் புழுங்குகிறார்கள். இதைக் காண்டீபம் எடுத்துக் காட்டியது.

மூன்று தமிழ் அமைச்சர்களில் ஒருவர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான்.

அவர் ஏன் திருமலை செல்லவில்லை என்பதை விளக்கி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரசார இயக்குநரான திரு. என். கிருஷ்ணசாமி சிந்தாமணிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

அவர் தனது கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

இவ்வாரம் (3-7-83) வெளியாகிய "சிந்தாமணியில்" காண்டீபத்தின் அரசியல் விமர்சனத்தில் தமிழ் அமைச்சர்கள் எங்கே என்று வினா எழுப்பி எழுதியிருந்த கருத்துக்களை கண்ணுற்றோம்.

வட, கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்தான் என்று இ. தொ. கா. எப்பொழுதுமே கூறி வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் திரு. அமிர்தலிங்கம் திருகோணமலை சென்று தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளித்தது இயல்பேயாகும்.

அதே வேளையில் அமைச்சர் திரு. தொண்டமான் போன்றவர்கள் நேரடியாக பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்வதால் மக்களின் அவலம் தீர்ந்து விடும் என எண்ணுவதற்கில்லை.

ஆனால் உயர் மட்டத்திலும், அமைச்சர் அவையிலும், அவரும் அவரது ஏனைய தமிழ் அமைச்சர்களும் எடுக்கும் நடவடிக்கைகளின் விளைவாக பாதிக்கப்பட்ட இடங்களில் இன்னல் தீர இடமுண்டு. அந்த வழியிலே நெருக்கடியை அகற்றத் தான் அவர்கள் முயன்று வருகிறார்கள்.

அத்தகைய நடவடிக்கைகள் பயனளிக்காதெனத் திட்டவட்டமாக அவர்களுக்குத் தென்பட்டால், அப்பொழுது அவர்கள் வெளிப்படையாக நடவடிக்கை எடுப்பதில் அர்த்தமுண்டு.

சமீபத்தில் கூட அவர்களின் இந்த நடவடிக்கையின் விளைவாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அமைச்சரவைக்கு

(7-ஆம் பக்கம் பார்க்க)

# சிந்தாமணி இலக்கியபீடம்

## தியாகர் மீது நிந்தாஸ் துதி

கவிதையிலே நிந்தாஸ் துதி என்று ஒரு வகைப் பாடல் உண்டு. ஒருவரை நிந்திப்பது போலப் பாடி அவரைத் துதிப்பது என்பதுதான் இதன் பொருள்.

பெரும் ஆற்றல் வாய்ந்த புலவர்கள் இறைவன் மீது நிந்தாஸ் துதி பாடுவார்கள். இறைவனிடத்துள்ள சிறப்புகளையெல்லாம் சிறப்பாகக் கொள்ளாமல், இழிவு படுத்துவது போலக் கவி அமைப்பார்கள்.

இப்படியான நிந்தாஸ் துதிக் கவிதைகள் வேடிக்கையானவை. சிந்தனையைத் தூண்டுபவை. சிரிப்பூட்டுபவை. இலக்கியச் சிறப்பு வாய்ந்தவை.

திருவாரூர் தியாகராசப் பெருமானுக்குத் திருவிழா நடைபெற்றது. அந்தத் திருவிழாவைப் பார்த்தார் ஒரு புலவர்.

"போயும் போயும் நாம் அறிந்த இந்த தியாகராசருக்கா ஒரு திருவிழா. இவருடைய பூர்வீகம் நமக்குத் தெரியாதா, "புகழ்" தெரியாதா? இவ்வளவு கேவலமானவருக்கா திருவிழா எடுப்பது?" என்று கேட்க வேண்டும் போலிருந்தது புலவருக்கு. கேட்டே விட்டார்.

இந்த தியாகராசருடைய (அதாவது சிவபெருமானுடைய) மைத்துனன் யார்? கிருஷ்ணன் அல்லவா? அவர் ஒரு துணி கூடச் செல்வம் (மாடு) இல்லாததால் உண்பதற்கு எதுவுமின்றி உலகத்து மண்ணை அள்ளித் தின்றார்.

தியாகராசருக்கு ஒரு நரைத்த மாடு (வெள்ளை ரிஷபம்) உண்டு. அப்படியிருந்தும் உழுது உண்ண மாட்டாத இந்தச் சோம்பேறி நஞ்சை உண்டார்.

இவருடைய மனைவியான பார்வதியிடம் இரண்டு நாழி நெல் இருக்கிறது. இவருக்கு உழைக்கக்கூடிய கணபதி, முருகன் என்று இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் இவர் ஊரெல்லாம் பிச்சை எடுத்து உண்டவராவார்.

இப்படிப்பட்ட செங்கு மலைத் தியாகராசருக்கா ஒரு திருவிழா! கேவலம், கேவலம்! — என்று பாடுகிறார் அந்தப் புலவர். புலவர் பெயர் தெரியவில்லை. நிந்தாஸ் துதிக்கு ஓர் அருமையான எடுத்துக் காட்டு இந்தப் பாடல்.

இப்போது பாடலைப் பார்ப்போம்:-

ஒரு மாடும் இல்லாமல்
மைத்துனனார் உலகமெல்லாம்
முழுதே உண்டார்,
நரைமாடோ ஒன்றிருக்க
உழுதுண்ண மாட்டாமல்
நஞ்சை உண்டார்,
இரு நாழி நெல்லிருக்க
இரண்டு மைந்தர் தாமிருக்க
இரந்தே உண்டார்!
இருநாளும் உண்டாச்சே
செங்கமலைப் பதிவாழும்
தியாகரே!

## கவிதாயினி

"கவிஞன்" என்ற சொல்லுக்கு பன்மை "கவிஞர்" என்று சொல்லலாம். கவிஞன் ஒருவனாக இருந்தாலும், அவனுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமானால், அவனைக் "கவிஞர்" என்று அழைக்கலாம். கவிஞர் கண்ணதாசன் என்பதைப் போல.

கவிஞன் என்பது ஆண்பால். ஒரு பெண் கவிதை பாடினால் அவரை அழைப்பது எப்படி? கவிஞை என்று சொல்லலாமா அல்லது கவிஞர் என்றே சொல்லி விடலாமா?

கவிஞை காமாட்சி, கவிஞர் சௌந்தரா — இதில் எது சரி?

மலையாளப் பெண்மணியான கமலா தாஸ் என்பவர் ஆங்கிலத்தில் நல்ல கவிதைகளை எழுதி வருகிறார். அவரைக் குறிப்பிடும்போது ஒரு இந்தியப் பத்திரிகை கவிதாயினி கமலா தாஸ் என்று குறிப்பிட்டிருக்கிறது. கவிதாயினி என்பது அழகாகத்தான் இருக்கிறது. பெண் கவிஞர்களுக்கு இந்தச் சொல்லையே வைத்துக் கொள்ளலாமா?

நண்பன் என்ற பதத்துக்கு பெண்பால் கண்டுபிடிப்பதிலும் இந்தப் பிரச்சினை உண்டு. ஒரு சிலர் நண்பி என்கிறார்கள், இது சரியான பிரயோகம் அல்ல என்கிறார்கள் பண்டிதர்கள். அப்படியானால் நண்பனுக்குப் பெண்பால் என்ன? நண்பாயினி என்போமா?

## கார்மேகம் தரும் திருத்தம்

கடந்த வாரம் சிந்தாமணி இலக்கிய பீடத்தில் எழுத்தாளர் — பத்திரிகையாளர் திரு. எஸ். எம். கார்மேகத்துக்கு நடந்த பாராட்டு விழா பற்றிய குறிப்பை வெளியிட்டமைக்கு அவர் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியிருக்கிறார்.

ஆனால், அந்தக் குறிப்பில் தரப்பட்டிருந்த விவரங்களில் சிலவற்றை அவர் மறுத்திருக்கிறார்.

திருச்சி, பொன்மலைப் பகுதியில் நிலம் வாங்கிச் சொந்த வீடு கட்டியிருக்கிறார் திரு. கார்மேகம் என்பது உண்மை அல்லவாம். "ஏழைத் தமிழ்ப் பத்திரிகையாளன் நான். இங்கே வாடகைக்குக் குடியிருக்கவே வழியில்லை. இந்தியாவில் தமிழகத்தில் சொந்த வீடா?" என்று கேட்டிருக்கிறார்.

"வீரகேசரியின் நிரந்தர சேவையிலிருந்து விலகிக் கொண்டேனே தவிர, அப் பத்திரிகையுடனான என் உறவையோ, மலையக எழுத்தாளர் மன்றச் செயலாளர் பொறுப்பினையோ, இந் நாட்டினையோ, கைவிட்டு நான் செல்லவில்லை. நான் இந்தியக் குடிமகன் அல்லன். இந்தியா எனது தாயகமும் அல்ல" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில் அவர் தற்காலிகமாகக் குடியேறுவதற்கான "தக்க" காரணத்தைக் குறிப்பிடுகையில் பின்வருமாறு அவர் கூறியிருப்பது மிக உணர்ச்சிகரமாக இருக்கிறது:—

"சின்ன வயதிலிருந்தே பேய், பிசாசு என்றும், கண்டாக்கு, கணக்கப்பிள்ளை, சின்ன துரை, பெரிய துரை என்றும் கண்டவனுக்கெல்லாம் பயந்து, நியாயமான உரிமைகளுக்குக் கூட குரலெழுப்ப முடியாதவனாக நாம் வளர்ந்தது போதும். நமது பிள்ளைகளாவது சுதந்திரக் காற்றினை அனுபவித்து, தம் இனத்தின் விடிவுக்காகப் போராடும் வல்லமையுள்ளவராக வரட்டுமே என்ற பெரு விருப்பால் அவர்களைத் தமிழகத்தில் படிக்க வைத்திருக்கிறேன்."

— இப்படிக் கூறியிருக்கிறார் திரு. கார்மேகம்.

## இலங்கையில் வசந்தகுமாரி

தென்னிந்தியாவில் மட்டுமல்லாது, சர்வதேச அரங்குகளிலும் புகழ்பெற்று பத்மபூஷண், பத்மஸ்ரீ, சங்கீத கலாநிதி போன்ற பல விருதுகளைப்பெற்ற திருமதி எம். எல். வசந்தகுமாரியின் சங்கீதக் கச்சேரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பில், தமிழ்ச்சேவைப் பணிப்பாளரான திருமதி பொன்மணி குலசிங்கத்தினால் இலங்கையின் பல பாகங்களிலும் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

சங்கீத மேதை ஜி. என். பாலசுப்ரமணியத்தின் பிரதம சிஷ்யையான பத்மபூஷண் எம். எல். வசந்தகுமாரி, ஜி. என். பாலசுப்ரமணியத்தின் சங்கீதப் பாரம்பரியத்தைக் கட்டிக் காப்பதில் பல ஆண்டுகளாகத் தனது அயரா உழைப்பினால் வெற்றி கண்டுள்ளார்.

திருமதி வசந்தகுமாரியின் இனிமையான குரலும் தெளிவான உச்சரிப்பும் அபூர்வராகங்களைக்கூட சரளமாகப் பாடும் லாகவமும் சேர்ந்து அவரை இன்றைய காலத்தின் தலைசிறந்த கலைஞர்களில் ஒருவராக்கி நிலைவைக்கின்றன.

ஜி. என். பாலசுப்ரமணியத்தினால் முதன் முதலாகப் பாடப்பட்ட "சிவசக்தி" என்ற ராகம், காமரப்பிரியாமேளா என்ற ராகத்தை அடிப்படையாகக் கொண்டது. ஜி. என். பாலசுப்ரமணியத்துக்குப் பின்னர் இதனை திருமதி வசந்தகுமாரி ரசிகர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி வந்துள்ளார்.

# ஒலி ஒளி உருவம்



## சாருவின் பாடல் அருமை

கடந்த 28-6-83 ரூபவாஹினி கலையரங்கத்தில் இசைக் கச்சேரியில் சாருமதி ராமச்சந்திரன் பாடினர்.

"அபராத...", "கார்த்தி கேய...", "பாயும் ஒளி நீயெனக்கு" ஆகிய மூன்று முத்தான பாடல்களைப் சுத்தானதாகவே வழங்கினர் சாருமதி.

அலைமணி நேரம் விரைவாகப் போனதே தெரியாமல் அருமையான ஆலாபனையும் அமைதியாகவே பாடிப் பரவசப்படுத்தினர்.

பாரதியாரின் "பாயும் ஒளி நீயெனக்கு" பாடலை ராகமாலிகையில் சாரு துடிப்போடு இனிமையாக வழங்கினர்.

இப்பாடலை ரசித்துக் கொண்டிருந்த பொழுது ஏற்கனவே இப்பாடலைப் பாடியவர்களையும் ரசிக உள்ளங்கள் நினைவு கூராமல் செய்தன.

அப்பொழுது நிச்சயமாக எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் குரலும் ரசிகர்களின் காதுகளிலே ரீங்காரமிட்டே செய்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஏனென்றால் இப்பாடலை அவரும் பாடியிருக்கிறார்.

**தயாரிப்பு: சஞ்ஜயன்**



"பாயும் ஒளி" பாடலை ராகமாலிகையில் பாடுகிறார் சாருமதி.

# கூட்டணி கொழும்பு...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி) வரவழைக்கப்பட்டு திருகோணமலை பற்றிய விவரங்கள் கேட்கப்பட்டு புதிய பணிப்புகளும் வழங்கப்பட்டன.

இவையெல்லாம் அமைச்சர்தன் பகிரங்கமாக பத்திரிகைகளில் வெளியிட்டு தமிழ் மக்களின் துயர் துடைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கிறார்கள், என்பதை நாடறியச் செய்ய முடியாது.

இப்படித் திரு. கிருஷ்ணசாமி தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பு:—

காணப்படும் விஷயத்தைச் சுட்டிக் காட்டியதும் தமிழ் மக்கள் உண்மை நிலையை அறிய வேண்டும் என்று அமைச்சர் தொண்டமான் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருப்பது பாராட்டுக்கு உரியது.

மற்ற இரண்டு தமிழ் அமைச்சர்களும் பேச்சு மூச்சின்றி இவைற்றில் போட்ட கல்மாதிரி இருப்பதன் மர்மம் புரியவில்லை.

இப்போது திருகோணமலையில் வன்செயல்கள் நடைபெற்றது போல் சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் அதாவது 1982 ஜூலையில் காலியில் வன்செயல்கள் நடந்தன.

காலி வன்செயல்களால் முஸ்லிம்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

உடனே போக்குவரத்துத் துறை அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது காலிக்கு ஹெலிக்கொப்டர் விமானத்தில் பறந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினர். வேண்டிய உதவிகளையும் செய்தார்.

ஜூலை 28 ஆம் திகதி காலியில் வன்செயல்கள் வெடித்த செய்தி கேட்டதும் அமைச்சர் முகம்மது 29 ஆம் திகதியே அங்கு சென்று விட்டார்.

கொழும்பில் இருந்தவாறு அரசாங்க உயர் மட்டத்திலும் அமைச்சரவையிலும் காரியம் பார்க்க முடியாதவர் அல்லர் அமைச்சர் முகம்மது. முதலில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று பார்த்து அவர்களுக்கு ஆறுதலும், தேறுதலும் கூறித் தெம்பும் ஊட்டி விட்டுத் தான் அமைச்சர் முகம்மது மற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

மூத்த அமைச்சரான முகம்மது இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் நடந்து கொண்ட விதம் தொண்டமானுக்குத் தெரியாமல் போனது விந்தை.

## நவம்

## இராஜினமா செய்வாரா?

சாவகச்சேரி எம். பீ. திரு. வி. என். நவரத்தினத்தின் இராஜினமா பற்றி நீண்டகாலமாகப் பேசப்பட்டு வருகிறது.

அவரும் பல தடவைகளில் இது பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார்.

உண்மையில் எதிர் வரும் 21 ஆம் திகதி அவர் தனது எம். பீ. பதவியை இராஜினமாச் செய்வாரா?

இந்தச் சந்தேகம் இப்போது பலருக்கும் எழுந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நவம் தமது சாவகச்சேரித் தொகுதிக் கூட்டணிக் கிளைகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிகழ்த்திய உரை சந்தேகத்தை வலுப்படுத்தியிருக்கிறது.

ஆறு ஆண்டுகள் பதவி வகிப்பதற்காகவே 1977 பொதுத் தேர்தலில் எல்லா எம். பீக்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

ஆறு ஆண்டுப் பதவிக் காலம் எதிர்வரும் 21 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

ஆனால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்திப் பதவிக் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகள் நீடித்துவிட்டது அரசாங்கம்.

நீடிக்கப்பட்ட காலத்தில் பதவியில் இருப்பது சரியில்லை. அது ஜனநாயக விரோதச் செயல். தேர்தலுக்கு நின்று மக்கள் தெரிவு செய்தால் மட்டுமே மீண்டும் பதவி வகிக்கவேண்டும் என்பது கூட்டணி எம். பீக்களின் கருத்தாக இருந்தது.

கூட்டணியின் முடிவும் அது தான்.

அதனால் கூட்டணி எம். பீக்கள் அனைவரும் பதவியை இராஜினமாச் செய்வது என்றும் பின்னர் தேர்தலுக்கு நிற்பது என்றும் முடிவு செய்தார்கள்.

கூட்டணி எம். பீ.க்களில் பலர் இந்த முடிவில் உறுதியாக நிற்கவில்லை. ஆனால் சாவகச்சேரி நவம் மட்டும் இராஜினமாச் செய்து தேர்தலுக்கு நிற்கவேண்டும் என்று அடிக்கடி கூறி வந்தார்.

ஆனால் மற்றக் கூட்டணி எம். பீக்களில் பலர் இராஜினமா பற்றி நீண்ட காலம் வாய் திறக்காமலே இருந்து விட்டார்கள்.

கடைசியில் மாநில மாநாட்டைச் சாட்டினர்கள்.

இராஜினமாச் செய்யவேண்டுமா? செய்யத் தேவையில்லையா? மாநில மாநாடு தீர்மானிக்கட்டும். அந்தத் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு நடப்போம் என்று இருக்கிறார்கள்.

கூட்டணி எம். பீக்கள் இன்றைய அரசியல் சூழ்நிலையில் பதவியை இராஜினமாச் செய்து விட்டுத் தேர்தலில் நிற்பது புத்தியல்ல என்று மாநில மாநாடு தீர்மானம் நிறைவேற்றுவதற்கு வேண்டிய காரணங்கள் நடப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இத்தனைக்கும் மத்தியில் எம். பீக்கள் உடனே இராஜினமாச் செய்யவேண்டும் என்று வற்புறுத்தும் வகையில் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கும் ஒரு சாரார் முழு மூச்சாக முயற்சி செய்து வருகிறார்கள்.

மாநாட்டுத் தீர்மானம் எப்படி இருந்தாலும் எம். பீ. பதவி முடியும் நாள் இம்மாதம் 21 ஆம் திகதி. மாநாடு தீர்மானம் நிறைவேற்றப்போவது 24 ஆம் திகதி.

இராஜினமா பற்றி அடிக்கடி அதிகம் பேசிவந்த நவத்துக்கு இது ஒரு சிக்கலான விஷயம்.

அதிலிருந்து விடுபட அவர் வழி கண்டு பிடித்துவிட்டார்.

21 ஆம் திகதியிலிருந்து தாம் நாடாளுமன்றம் செல்லப்போவதில்லை என்று அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது தொகுதிக் கிளைகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் அறிவித்திருக்கிறார்.

இராஜினமாச் செய்தால் உடனே பதவி போய்விடும்.

நாடாளுமன்றத்துக்குச் செல்லாமல் விட்டால் மூன்று மாதங்கள் வரை பதவிக்கு பழுதில்லை. லீவு பெறாது மூன்று மாதங்களுக்கு மேல் செல்லாமல் விட்டால்தான் பதவி பறிபோகும்.

21 ஆம் திகதியிலிருந்து நாடாளுமன்றம் செல்லாமல் விட்டால் மூன்று மாத காலத்தில் அரசியல் சூழ்நிலையை அனுசரித்து ஒன்றில் பதவியைத் துறக்கலாம் அல்லது பாதுகாத்துக் கொள்ளலாம்.

21 ஆம் திகதி இராஜினமாச் செய்தால் அந்த வசதி கிடையாது.

இராஜினமாச் செய்தால் ஒரு மாத காலத்துள் கட்சிச் செயலாளர் நாயகம் இன்னொருவரைச் சாவகச்சேரி எம். பீயாக நியமிக்க வேண்டும்.

தவறினல் தேர்தல் ஆணையாளர் இடைத் தேர்தல் நடத்துவார்.

எல்லாச் சிக்கல்களையும், சிரமங்களையும் மிகச் சாதுரியமாகத் தவிர்த்து விட்டார் நவம்.

கூட்டணியில் இன்னும் எத்தனையோ சட்டத்தரணிகள் இருக்கத்தான் செய்கிறார்கள், அவர்கள் நவத்துக்குக் கிட்ட வர முடியுமா?

## தடுப்புக்காவலில் தருமர்—கோவை

திருமலை வன்செயலைக் கண்டித்து கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழ் ஈழ விடுதலை அணி ஏற்பாடு செய்த ஹர்த்தால் தொடர்பாக மேற்படி அணியின் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கமும், செயலாளர் கோவை மகேசனும் கைது செய்யப்பட்டு இப்போது அவர்கள் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் இருவரையும் விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தைக் கோருபவர்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிடத்தக்கவர்.

இத்தனைக்கும் தமிழ் ஈழ விடுதலை அணி, தமிழர் விடுதலைக் கூட்டணிக்குச் சதா தலையிடி கொடுத்து வரும் ஓர் எதிரணி ஆகும்.

கோவை மகேசனை ஆசிரியராகக் கொண்ட சுதந்திரன் கூட்டணித் தலைமையை வெகுவாகக் கண்டிக்கும் பத்திரிகை.

ஒரு காலத்தில் அண்ணன் அமிராகவும், அருமைத் தம்பி கோவையாகவும் இருந்தவர்கள் இப்போது அரசியலில் கீரியும், பாம்புமாக இருக்கிறார்கள்.

அரசியலில் போட்டி போடுபவர்கள் ஒருவரை ஒருவர் விழுத்தப் பார்ப்பார்கள். விழுந்தவரை எழுப்பி விட்டால் தமக்கு ஆபத்து என்று நினைப்பார்கள். இதுதான் பொதுவான நிலை.

ஒருசிலர் நல்ல பிள்ளைப் பட்டம் வாங்குவதற்காக விழுந்தவனை எழுப்புவதாகப் பாசாங்கு செய்து கொண்டு தமது பலம் முழுவதையும் கூட்டி அவனை மறைவாக அமுக்குவார்கள்.

இன்னொரு சாரார் உண்மையிலேயே கருணை உள்ளம் கொண்டவர்கள் நடந்தவை எல்லாவற்றையும் மறந்து எதிரி விழுந்து கஷ்டப்படும் போது கை கொடுத்து உதவுவார்கள்.

தருமரையும், கோவையையும் விடுவிக்க அமிர் ஜனாதிபதியை நேரில் சந்தித்துக் கேட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது.

அமிர் மேற்படி மூன்று வகையினரில் எந்த வகையைச் சேர்ந்தவர் என்பதைத் தமிழ் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

தருமரையும், கோவையையும் விடுதலை செய்யக் கோரிச் சில குழுவினர் வடக்கில் அரசாங்க அலுவலகங்களை முற்றுகை இடுவதிலும், பொருள்களை அடித்து நொருக்குவதிலும் கதவுகளை மூடிச் சீல் வைப்பதிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

பஸ் எரிப்பு, குண்டு வைப்பு போன்ற செயல்களும் இடம் பெறுகின்றன.

இப்படியான வன்செயல்கள் நடந்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இருவரும் விரைவில் விடுதலையாகும் வாய்ப்பு ஏற்படுமா?

மாறாக இருவரும் நீண்ட காலம் தடுத்து வைக்கப்படுவதற்கே அந்த வன்செயல்கள் வழிசெய்யும்.

இதை அறிந்தும் தொல்லை கொடுக்காமல் இருவரும் இன்னும் இரண்டு மூன்று வாரமாவது உள்ளே இருந்து விட்டு வரட்டும் என்று ஒருசிலர் வேண்டுமென்றே இந்தச் செயல்களில் ஈடுபடுகிறார்களோ என்ற சந்தேகம் தமிழ் ஈழ விடுதலை அணியினர் பலருக்கு உண்டு.

அமைதி காப்பவர்கள்தான் உண்மையில் இருவரதும் விரைவான விடுதலைக்கு உதவுபவர்கள்.

## தூகம்தீர தண்ணீர்

கடந்த 6-7-83 புதன் கிழமை இரவு ரூபவாஹினியில் "ரங்க தாரா" என்னும் அரை மணி நேர இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் அமரதேவா, டெஸ்மன்ட் டி சில்வா, நீலா விக்ரமசிங்க, ராஜ் செனிவிரட்ன, ஏ. ஈ. மனோகரன், டல்ரீன் சூபி, விக்டர் ரெட்னயக்கா ஆகியோர் பாடி வாஹினி ரசிகர்களை மகிழ்வித்தார்கள்.

ராஜ் செனிவிரட்ன ஆங்கிலத்திலும், ஏ. ஈ. மனோகரன் தமிழிலும் பொப்பிசை வழங்கினர்கள்.

தமிழில் பொப்பிசை என்றதும் தமிழ் ரசிகர்களுக்கு ஏ. ஈ. மனோகரனின் ஞாபகமே வரும் என்பதற்கேற்ப, சுப்பர் ஸ்டாரின் வாத்திய இசையின் துணையுடனே அழகாகவே அவர் பாடினர் மனோகரன்.

அவரது தோற்றம் அசல் "ஒன் த மற்" மல்யுத்த வீரனைப் போலவே இருந்தது.

கடந்த வருடம் 26-12-82இன் "நந்தன வித்தன" நிகழ்ச்சியில் "கோழிக்கறி சமைத்த" மனோகரன் இம் முறை "தாகம் தீரத் தான் தண்ணீர்" என்று பாடினர்.

இப்பொழுது காட்சியளிக்கிறது

முருகன்
2.00, 6.00, 9.30

கொன்கோட்
10-00, 2-00, 6-00, 9-30

சுபராஜ்
(மட்டுநகர்)
2.30, 6.00 9.30

விஜிதா
(முட்டூர்)
2-00, 6-00, 9-30.

பாக்கியராஜா அம்பிகா நடித்த

அந்த ஏழு நாட்கள்

(ஈஸ்ட்மென் கலர்)
கதை வசனம் – டைரக்ஷன் பாக்கியராஜா

வெள்ளித் திரைகளில்

மகத்தான 2வது வாரம்!

செல்லமஹால்
2.00, 6.00, 9.30

ஈரோஸ்
2.00, 6.00, 9.30

வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00, 9-30.

சினி சிட்டா
(நுவரெலியா)
2-30, 6-00, 9-30.

பிரதாப், ஷோபா, மோகன் நடித்த

மூடுபனி

(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் எக்காட்சியிலும் அனுமதிக்கப் படமாட்டார்கள்

8வது வாரம்!

ஜெஸிமா
(கிராண்பாஸ்)
10.00, 2.00, 6.00, 9.30

ராணி
(யாழ்நகர்)
10.30, 2.30, 6.30, 9.30

நியூ சிகிரி
(கண்டி)
10-30, 2-30, 6-00, 9-30.

நியூ இம்பீரியல்
(இரத்தினபுரி)
10-00, 2-00, 6-00, 9-30

சாரதா
(அக்கரைப்பற்று)
2-30, 6-00, 9-30.

கமலஹாசன் – அம்பிகா சில்க் சுமிதா, ரவீந்தர், துளசி நடித்த



ஏவி. எம்மின்

சகலகலா வல்லவன்

(கலர்)
டைரக்ஷன் எஸ். பி. முத்துராமன்
என். எப். ரி. 978

3வது வாரம்!

லிடோ
(யாழ்நகர்)
10.30, 2.30, 6.00 9.30

ஜெமினிகணேசன், அஞ்சலிதேவி, ராஜசுலோசன கிரிஜா நடித்த

மணாளனே மங்கையின் பாக்கியம்

(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி)

10வது வாரம்

சமந்தா
2.00, 6.00, 9.30

அயன்
(மன்னார்)
2.00, 6.00 9.30

மனோகரா
(யாழ்நகர்)
10.30, 2.30, 6.00 9.30

சம்பிகா
(இங்கிரிய)
6-00, 9-30.

கமலஹசன் ஸ்ரீதேவி, ஸ்ரீபிரியா, அம்பிகா, மனோரமா. பாலாஜி நடித்த





(கலர்)

(வயது வந்தவர்களுக்கு மிக உகந்தது).

9வதுவாரம்!

சாந்தி
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30.

ராஜேஸ்வரா
(மட்டுநகர்)
2.00, 6.00, 9.30

மொடர்ன்
(பதுளை)
10-30, 2-30, 6-00, 9-30.

நிந்தவூர் சினிமா
(நிந்தவூர்)
2.00, 6.00, 9.30

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், வி. கே. ராமசாமி, லட்சுமி, நாகேஷ், மனோரமா, படாபட் ஜெயலட்சுமி நடித்த





(கலர்)

மீனவர்களின் வாழ்க்கையை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டு, தமிழகத்தில் நூறு நாட்கள் ஓடிய வெற்றிச் சித்திரம்

இசை:– இளையராஜா

4வதுவாரம்!

கெயிட்டி
2.00, 6.00 9.30

ஹரன்
(யாழ்நகர்)
10.00, 2.00, 6.00, 9.30

துஷிதா
(பேராதெனிய)
6-00, 9-30.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். (இரட்டை வேடம்) ஜெயலலிதா அசோகன் மனோகர் நடித்த

நீரும் நெருப்பும்

(கலர்)
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய கொப்பி)

6-வது வாரம்!

ராஜா
(யாழ்நகர்)
10.30, 2.30, 6.30, 9.30

சிகிரி
(பண்டாரவளை)
6-00, 9-30.

சிவாஜிகணேசன், சாவித்திரி, கே. ஆர். விஜயா நடித்த

சரஸ்வதி சபதம்

(புத்தம் புதிய கொப்பி)

விளம்பரமின்றி வியாபாரமில்லை

அழகுக்கு அழகு தருவது!



உங்களின்
முக அழகுக்கு
மேன் மேலும்
அழகூட்ட
இன்றே விஜயம்
செய்யுங்கள்.

NEW MUTTHUMEENACHI JEWELLERY தொலைபேசி: 33164
152 B, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

# பேசாலையில் மின் விநியோகம் விரைவில் ஆரம்பம்

பேசாலை, ஜூலை 9

தெரு விளக்குகள் பொருத்தப்பட்டதும் பேசாலைப் பகுதிக்கான மின்சார விநியோகம் ஆரம்பித்து வைக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபை துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

ஆரம்பத்தில் மின்சார இணைப்பிற்கான கட்டணத்தைச் செலுத்திய 25 குடியிருப்பாளர்களுக்கே முதலில் மின்சாரம் வழங்கப்படும்.

மாதம் ஒன்றுக்கு 12 யூனிட் மின்சாரத்தைப் பாவிக்கும் குடியிருப்பாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு 51 ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

மேலதிகமாகப் பாவிக்கப்படும் ஒவ்வொரு யூனிட் மின்சாரத்திற்கும் 4 ரூபா 25 சதம் அறவிடப்படும்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பேசாலை உப அலுவலக குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கே. கிருஷ்ணராஜா இதனைத் தெரிவித்தார்.

(ஜ-251)

நகை அலங்காரம்!



நவீன டிசைன்களிலான
தங்கப்பவுண் நகைகளுக்கு

நியூ முத்துமீனாட்சி ஜுவெல்லரி

உத்தரவாதம் மிக்கது.

152 B, செட்டியார் தெரு,
கொழும்பு — 11.
தொலைபேசி: 33164.

# பலஸ்தீன விடுதலை இயக்க ஐக்கியம்

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஐக்கியத்தைக் காப்பாற்றுவதற்கு இறுதி நேரத்திலாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

பிளவுபட்டிருக்கும் பலஸ்தீன விடுதலை இயக்க கெரில்லாக்கள், தமக்குள் நடைபெற்று வரும் யுத்தத்தை நிறுத்த இணக்கம் தெரிவித்துள்ளனர்.

டெலிலிருந்து சிரியாவுக்கு வருகை தந்த உயர்மட்ட சமாதானக் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து யுத்த நிறுத்தத்துக்கு இணக்கம் காணப்பட்டது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத், தன்னிச்சையாக நடந்து கொள்கிறார் என்று கூறி ஒரு பிரிவினர் இயக்கத்துக்குள் புரட்சி செய்தனர்.

இதனால் சிரிய எல்லையில் நிலை கொண்டிருக்கும் பலஸ்தீன விடுதலை இயக்க கெரில்லா முகாம்களில் கொந்தளிப்பும், மோதல்களும் ஏற்பட்டன என்பது தெரிந்ததே.

யாஸிர் அரபாத்தை எதிர்க்கும் கெரில்லாப் பிரிவினர் விடுத்த நிபந்தனைகளுள் சில வற்றை வழங்க சமாதானக் குழுவினர் விருப்பம் தெரிவித்தனர்.

இந்தச் சலுகையின் அடிப்படையிலேயே யுத்த நிறுத்தத்துக்கு இணக்கம் காணப்பட்டது.

தன்னிச்சையான முடிவுகள் எடுக்காமல், எல்லோரையும் கலந்து ஒருமித்த முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இதன் மூலமே பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்குள் ஒற்றுமையை நிலைநாட்ட முடியும் என கெரில்லா இயக்கத் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரவேலுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை யாஸிர் அரபாத் அண்மைக் காலத்தில் தளர்த்தி விட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி றேகனின் சமாதானத் திட்டம் தொடர்பாக ஜோர்தான் மன்னர் ஹுஸைனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் நேரத்தைச் செலவழிக்கிறார் எனவும் சில புரட்சிவாத கெரில்லாத் தலைவர்கள், யாஸிர் அரபாத்துக்கு எதிராகக் குற்றம் சுமத்தியுள்ளார்கள்.

ஜோர்தான் நதியின் மேற்குக் கரையிலும், ஹாஸாவிலும் ஜோர்தானுடன் இணைந்து பலஸ்தீனர்களுக்கு சுயாட்சி வழங்குவதே றேகனின் திட்டமாகும்.

ஆனால், பலஸ்தீனர்களுக்குத் தனிநாடு வேண்டும் என்பதே அரபு நாடுகளினதும், பலஸ்தீன விடுதலை இயக்கத்தினதும் கோரிக்கையாகும் எனவும், புரட்சிக் கெரில்லாக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சமாதானக் குழுவின் விஜயத்தை அடுத்து, கெரில்லா முகாம்களில் அமைதி நிலவுவதாக சிரிய வானொலி அறிவித்தது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் ஐக்கியம் நிலைபெற்று பலஸ்தீனர்களின் விடுதலைக்கு வழி வகுக்க வாய்ப்பு ஏற்பட்டிருப்பது அமைதி விரும்பிகளுக்கு மகிழ்ச்சி தருவதாகும்.

## ஷுல்ட்ஸின் இந்திய விஜயம்

கடந்த வார இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் பி. ஷுல்ட்ஸ் புதுடில்லியில் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை, என்று தெரிகிறது.

இவரது விஜயத்தின் பயனாக புதுடில்லியிலிருந்து கூட்டறிக்கையோ அன்றி வேறேதேனும் அறிக்கையோ வெளியாகாததன் மூலம் இத்தோல்வி வெளிப்படுத்தப் பட்டுள்ளது என அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஷுல்ட்ஸ் தமது விஜயம் நன்று என்று நிருபர்களிடம் கூறியுள்ளபோதிலும், சர்வதேச விவகாரங்கள், இருபக்க உறவுகள், உப கண்ட நிலைமைகள் குறித்து அமெரிக்க, இந்திய கண்ணோட்டங்கள் மிகவும் மாறுபட்டிருந்ததாகத் தெரிகிறது.

இருபக்க உறவுகளின் முக்கிய அம்சங்கள், இப் பிராந்திய நிலை, அணிசேரா இயக்கத்தின் கொள்கை, பிரதான உலக அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்தும் இரு நாடுகளும் கொண்டுள்ள நிலைப்பாடுகளை பரஸ்பரம் புரிந்து கொள்ள முயலுகின்றோம் என்றும் ஷுல்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தியத் தலைநகரில் உள்ள அரசியல் அவதானிகள், ஷுல்ட்ஸ் வெளியிட்ட கருத்தின் தொனியை நன்கு புரிந்து கொண்டுள்ளனர். இரு நாடுகளும் பொதுக் கண்ணோட்டம் கொள்ளக் கூடியதாக மிக மிக சில விவகாரங்களே இருந்தன.

பூலோக சஞ்சாரம்

'சுதாசி'

அத்துடன் இந்தியாவை அதன் அணிசேராக் கொள்கையிலிருந்தும் சமாதான சகவாழ்வு, பொருளாதாரத் தன்னிறைவு ஆகியவற்றிலிருந்தும் பிரிக்க முடியாது போன பின்னர், பொருளாதார, ராணுவ நிர்ப்பந்தங்களை அமெரிக்கா, இந்தியா மீது கொண்டுவரும் என்பதையும் புதுடில்லி அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஏனெனில், இந்தியாவின் நலன்களையும், அதன் கருத்துக்களையும் புரிந்து கொள்வதில் அமெரிக்கா அக்கறை காட்டவில்லை. மாறாக தனது நலன்களையும் அபிலாஷைகளையுமே இந்தியா மீது திணிக்க முயலுகிறது.

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை அமெரிக்கா கணக்கில்லாது அளித்து வருவதன் மூலம் இந்தியாவின் ஸ்திரத்தன்மையை அது குலைக்க முயலுவது தெரிந்ததே. டல்லஸ் காலம் முதலே, இந்திய – அமெரிக்க உறவுகள் நேர் சீராக இருந்ததில்லை. காரணம் இந்தியாவின் சுதந்திரமான கொள்கைகளும் கருத்துக்களும் அமெரிக்காவுக்கு உடன்பாடற்றவையாக இருந்தமைதாம்.

இது போதாதென்று, இந்தியப் பிரிவினைவாதிகளுக்கு அமெரிக்கா அடைக்கலம் கொடுத்து உற்சாகப்படுத்தி வருகிறது என்று இந்திரா காந்தி பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த நிலையில் ஷுல்ட்ஸின் இந்திய விஜயம் வெற்றியளித்திருக்கும் என்று கூற முடியுமா?

## ரஷ்யாவில் ஹெட்மட்

அமெரிக்க ஏவுகணைகளை மேலதிகமாக அமைக்க மேற்கு ஜெர்மனி இடமளித்தால், பதிலாக, பலத்த இராணுவ எதிர்ப்பு ஒன்றை அது எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகும் என்று சோவியத் ஜனாதிபதி யூரி ஆந்திரபோவ் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துள்ள மேற்கு ஜெர்மனியின் அதிபர் ஹெல்மட் ஹோலுடன் மாஸ்கோவில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

90 நிமிடங்கள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, ஐரோப்பிய மண்ணில் அமெரிக்க ஏவுகணைகளை நிறுவும் விவகாரமே பிரதான இடம் பெற்றதாகத் தெரிகிறது.

மேற்கைரோப்பிய நாடுகளும் கிழக்கைரோப்பிய நாடுகளும் அணுவாயுத உற்பத்தியை முடக்கி வைக்க வேண்டும் என்று கடந்த வாரம் வார்ஸா ஒப்பந்த நாடுகள் விடுத்த கோரிக்கையின் குரல் அடங்கு முன்னரே, மேற்கு ஜெர்மன் தலைவர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வார்ஸோ நாடுகளது மாஸ்கோ மாநாடு ஆக்கபூர்வமானது என மேற்கு ஜெர்மனி அதிபர் கருதுவாராயின், ஆயுதப் போட்டியைக் கட்டுப்படுத்துவதற்காக கிழக்கைரோப்பா மேற்கொண்ட நடவடிக்கைகளை மேற்கு ஜெர்மனியின் நேட்டோ சகபாடிகள் மறுப்பதற்கு ஏதாவது காரணங்கள் உண்டா?

மேற்குக்கும் கிழக்குக்கும் ஆயுத பலத்தில் இப்போதுள்ள சமநிலையை மாஸ்கோவும் அதன் நேச நாடுகளும் விரும்புகின்றன. இச் சமநிலையிலிருந்து, ஆயுதக் குறைப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதே அவற்றின் கருத்து. இன்னும் தெளிவாகக் கூறுவதாயின் மாஸ்கோவும் அதன் நேச நாடுகளும், மேலதிகமாக எந்தவொரு அணுவாயுதத்தையோ அன்றி அணுவாயுத விநியோக வாகனத்தையோ விரும்பவில்லை என்பது தெளிவாகிறது.

ஆனால் இதுவரை காலமும் இந்நாடுகளின் கோரிக்கைகள், அழைப்புக்கள் யாவும் மேற்குலகில் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தன. ஆயுதப் போட்டிக்கு விரைவில் முடிவு கட்டுவதில் காலம் தாழ்த்த வேண்டாம் என்றே மாஸ்கோவும் அதன் சார்பு நாடுகளும் வார்ஸோவையும் நேட்டோ நாடுகளையும் வலியுறுத்தி வந்துள்ளன.

ஒருவரை ஒருவர் பயமுறுத்தாத நிலையில் இருந்து, நாடுகளின் பாதுகாப்பு உத்தரவாதப் படுத்தப்படல் வேண்டும். இதனைத் தொடர்ந்து சகல அணுவாயுதங்களையும், ராணுவச் செலவுகளையும் ஒட்டு மொத்தமாகக் குறைக்க வேண்டும். அடுத்தது, வார்ஸோ ஒப்பந்த நாடுகளிலும் பார்க்க மேலாதிக்க நிலையை அடைய எடுக்கும் எந்த முயற்சியும் தோல்வியடையவே செய்யும்.

இவைதாம் கிழக்கு நெடுகிலும் வலியுறுத்தி வரும் கோரிக்கைகள். அது மட்டுமல்ல, தற்கொலைக்கொப்பான அணுவாயுதத்தை அனுமதிக்காதிருப்பது, முதல் அணுத் தாக்குதலைத் தொடுக்காதிருப்பது, தற்போதுள்ள சம நிலையிலிருந்து ஆயுதக் குறைப்பை மேற்கொள்வது, இராணுவப் போட்டியைத் தவிர்ப்பது போன்றவற்றையும் கிழக்கைரோப்பிய நாடுகள், ஆயுதப் போட்டிக்குக் கடிவாளமிடும் நடவடிக்கைக்கு அடித்தளங்களாகக் காட்டியுள்ளன.

மேற்கு ஜெர்மன் அதிபருக்கு மாஸ்கோ, இவை குறித்து நன்கு விளக்கியிருப்பதுடன், அமெரிக்க ஏவுகணைகளை மேலதிகமாக வைக்க, தான் இடமளிக்கப் போவதில்லை என்றும் மாஸ்கோ திட்டவட்டமாகக் கூறியுள்ளது. (ம)

## கண்டன அறிக்கை

கொழும்பு, ஜூலை 10

பேராதனை பல்கலைக்கழகத்தில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம் பெற்ற குழப்பநிலை பற்றி விசாரணை செய்த குழுவின் சிபார்சுகள் அநீதியானவையாகும்.

இவ்வாறு கூறும் அறிக்கை ஒன்றை பேராதனை பல்கலைக் கழக மாணவர் பேரவை வெளியிட்டுள்ளது.

மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அணி திரளுமாறும் மாணவர் பேரவை தனது அறிக்கையில் கேட்டிருக்கிறது.

(ஊ- 16)

குறைந்த அறுவடை செலவு!
ஏக்கருக்கு ரூ.113/-

உறுதியான நன்யூயி NANYUE அறுவடை இயந்திரம் மூலம்..



மொடல்
4 ஜீ - 1.3
வெட்டும் அகலம் 1.3 மீ
விலை ரூ 39,750/- *

பல வேலைகளில் ஈடுபடுத்தக்கூடிய இந்த இயந்திரம் ஒரு நாளைக்கு 7 ஏக்கருக்கு மேல்நெல்லை அறு வடை செய்யும். இதன் மூலம் வேகமான அறுவடை கிடைப் பதுடன் தொழிலாளர் கூலியும் சிக்கனப்படுத்தப்படு கின்றது. அத்தோடு உங்கள் அயலவருக்கும் வாடகைக்கு அளிப்ப தன் மூலம் பணத் தையும் ஈட்டலாம்.

மொடல்
4 ஜீ - 1.6
வெட்டும் அகலம் 1.6 மீ
விலை ரூ 57,000/-

துணை உறுப்புகள்



* அறிமுகப்படுத்தப்பட்ட விலைகள் 31.08.83 வரை மட்டுமே அமுலில் இருக்கும்.

உங்கள் பிராந்தியத்தில் செய்து காட்டும் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
விபரங்களுக்கு, ஏக முகவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள

லேட் எஞ்சினியரிங் இன்டஸ்ட்ரீஸ்
127, கொட்டாஞ்சேனை வீதி, ... – தொலைபேசி 552090

பிராந்திய விநியோகத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பிராந்திய விநியோகிப்போர்;

அம்பாறை —
பார்வதி இண்டஸ்ரீஸ்
முதலியார் தெரு,
அக்கரைப்பற்று

மட்டக்களப்பு —
எஸ். எ. செல்வநாயகம் அன் சன்ஸ்
திருகோணமலைத் தெரு
மட்டக்களப்பு

இலங்கையிலும் இந்தியாவிலும் கடந்த
83 ஆண்டுகளாக வெற்றியுடன் வீறுநடை போடுகிறது
எமது ரிஷி மருந்துகள்



ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்

தலைமயிரை பாதுகாப்பது. ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம் ஓர் திருப்பம். ஓர் பார்வை அவளுடைய அழகிய கேசம் உங்கள் மனதில் அழியா இடம் பெறுகிறது. பிறகு "இவ் அழகிய கேசம் எனக்கிருந்தால்" என நினைக்கிறீர்கள். உங்கள் எண்ணம் ஈடேற பாவியுங்கள் "ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்" உங்கள் தலைவலி, பீனிசம், கேச உதிர்வு மற்றும் சிரசு சம்பந்தமான ரோகங்களை உடனடியாக குணப்படுத்துவது.

6 அவுன்ஸ் ரூ. 38/- 12 அவுன்ஸ் 20/-

ரிஷி பற்பொடி

வண்ண வண்ண பற்களுமல்ல, காவி படிந்த பற்களுமல்ல, தூய வெண்மையான முத்துப் போன்ற பற்களுக்கு பாவியுங்கள் ரிஷி பற்பொடி, வாய் நாற்றம், பற்கூச்சம், முரசு கரைதல் முதலியன வரவொட்டாது பற்களை பாதுகாக்கும். டின் விலை ரூ. 14/50 பக்கட் விலை -/50 சதம்.

ரிஷி பாம்

டாக்டர் மதுரம் அவர்களின் தயாரிப்பு இந்த ரிஷி பாம். இதனை தேய்க்கும் பொழுதே வாதம், தலையிடி, இடுப்புப் பிடிப்பு, நெஞ்சுத் தடிமல்,வயிற்றோட்டம், அடிகாயம், முழங்கால் வலி, விதை வீக்கம் கட்டிகள் குணமாகும். விலை ரூ 12/50

என்னிய வண்ணமே ஆபரேஷன் இன்றியே மூலவியாதியை குணப்படுத்துவது.

ரிஷி லேகியம்

இதிலுள்ள போசாக்கான மருந்துகள் மூலச் சூட்டை தணித்து மலச்சிக்கலை அகற்றி மலத்தை கருங்குப்பண்ணி குணமாக்குகிறது. இரமட்டுமன்றி குன்மம், வயிற்றுவலி, அஜீரணம், நெஞ்செரிவு, வாய்வு, புளியேப்பம், மலச்சிக்கல் இவற்றை அகற்றி நான் கோரும் நிலைவான முறையில் மலத்தை வெளியாக்குகிறது விலை. ரூ. 20/-, 35/- தபால் செலவு 10/75 சதம் மட்டுமே.

ரிஷி அஜமாமிச லேகியம்

தீய பழக்கத்தால் ஏற்படும் நரம்பு தளர்ச்சி, ஆண்மை குறைவு, வீரியமின்மை, நித்திரையின்மை, ரத்தக் குறைவு, ஆஸ்மா, க்ஷயம், விந்து சிறு நீருடன் கழிதல், கனவுகளின் மூலம் உண்டாகும் விந்து நஷ்டம், முஸ்டிமைதுனம் இவற்றால் வாழ்க்கையில் வெறுப்புற்று மனைவியுடன் முகம் சுழித்துத் தவிக்கும் அன்பர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். இது வாலிபர்களின் உடலுக்கும், உள்ளத்துக்கும் உறுப்புகளுக்கும் புதிய பலத்தையும், புத்தம் புதுப்புதுமை உணர்ச்சியை தந்து நீடித்த இன்பத்தையும், வாழ்வில் உல்லாசத்தையும் தரவல்லது.

ஒரு மூக்கல் 95/- அரை மூக்குல் 50/-

பாவிக்கும் விபரம்; ஒரு தேக்கரண்டி காலையிலும், மத்தியானமும், இரவிலும், ஆகாரத்திற்கு முன்பும் வாயிலிட்டு பால் அருந்தவும்.

ரிஷி ஸ்தம்பன தைலம்

இதை தளர்ச்சியுள்ள நரம்புகளின் மேல் தடவி வந்தால் அதற்குச் சக்தி உண்டாகும். இழந்தவைகளிலும், கெட்ட நடவடிக்கைகளாலும் சோர்வடைந்த நரம்புகளுக்கு பலத்தை கொடுப்பதுடன், கோணலை நேராக்கி மனதிற்கு நீண்ட உல்லாசத்தையும் அளிக்கவல்லது. மேலும் ஸ்தம்பன சக்தியுடன் ஆண்மையும் கிட்டுகிறது. புட்டி 1க்கு விலை ரூபா. 10/50 தபால் செலவு ரூ. 10/35

வி. பி. பி. மூலமும் பெற்றுக் கொள்ளலாம்

DR. T. D. மதுரநாயகம்
(D.A.M. (Cey.) M.A.C. F. (Cey.) B.S.H. (India)

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு — 11.

தொலைபேசி: 83392
நித்திய கல்யாணி
நகை மாளிகை
257, காலி வீதி, வெள்ளவத்தை.

சிந்தாமணி ஆரம்
இல. 712 CHINTAMANI MAGAZINE SECTION 10—7—1983

NITHIYAKALYANI JEWELLERS
No. 232, GALLE ROAD, WELLAWATTE
TELEPHONE: 83392

# மக்களை தண்டிக்கலாமா?

— சிகுநா —

ஜனநாயக ஆட்சி நிலவும் ஒரு நாட்டில் வாழும் மக்கள் என்றும் அமைதியான வாழ்க்கையையே விரும்புவார்கள். தங்களுடைய அன்றாடக் கருமங்கள் தடையின்றி நடைபெற வேண்டும் என்பதில் குறியாக இருப்பார்கள்.

மக்களால் தெரிவு செய்யப்படும் அரசாங்கமும் நாட்டில் ஸ்திரமான நிலை நீடித்திருக்க ஆவன செய்ய வேண்டும்.

எந்த ஒரு நாட்டை எடுத்துக் கொண்டாலும் பெரும் பகுதி மக்கள் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடப்பவர்களாகவே இருப்பர். ஆட்சியில் தவறு இருந்தாலும் அதைவிட்டு அலட்டிக் கொள்ளாமல் அடங்கி வாழ்பவர்கள் அவர்கள்.

ஆனால் ஆட்சிக்கு எதிராகக் குரல் எழுப்புவோர் சிலரே ஆவர். அதிலும் வன்செயல்கள் மூலம் தங்கள் குறிக்கோளை அடைய முயலுவோர் மிகச் சிலரே.

அண்மைக் காலமாக நாட்டில் வன்செயல்கள் அதிகரித்திருக்கின்றன. இந்த வன்செயல்களால் அரசாங்கத்துக்கு பொருட் சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் அப்பாவிப் பொது மக்களுக்கு நேர்ந்த அசௌகரியங்களோ எண்ணில் அடங்காதவை.

"யாழ்தேவி" கடுகதி ரயில் நிர்மூலமாக்கப்பட்டது. அதனால் கோடிக் கணக்கில் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது உண்மைதான். ஆனால் அப்பாவி மக்களின் பிரயாணக் கஷ்டமோ அதைவிட மோசமாக இருக்கிறது.

நாட்கணக்கில் ரயில்கள் ஓடவில்லை. பின்னர் உயர் மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு, ரயில் ஓடத் தொடங்கிய போது மற்றொரு ரயில் நிலையத் தாக்குதல் சம்பவம். இதனால் மீண்டும் ரயில் சேவை நிறுத்தம்.

நிலைமை இப்படியே தொடர்ந்தால் வன்செயலாளர்களுக்கு அல்லவா வெற்றி என்றாகிவிடும். ஒரு சிலரின் செய்கைக்காக லட்சக்கணக்கான அப்பாவி மக்களைத் தண்டிக்கலாமா?

"அவ்ரோ" விமானம் சில வருடங்களுக்கு முன் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அந்த விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. தேசிய ரீதியில் உள்ளூர் விமான சேவை நடைபெறாததால் நாட்டின் அபிவிருத்தியில் தான் எத்தனை தடை! தனியார் விமான சேவைக்கு கொள்ளை கொள்ளையாகப் பணத்தை அள்ளிக் கொடுக்கச் சாதாரண மக்களால் இயலுமா? இது விஷயத்திலும் "எய்தவர் இருக்க அம்பை நொந்த" கதையாகத்தான் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன.

அரசாங்கத்துக்கு பூரணமான விதத்தில் மக்கள் ஆணை கிடைத்திருக்கிறது. வன்செயல்களை ஒழித்துக் கட்ட சகல அதிகாரங்களும் அளிக்கப்பட்டு இருக்கின்றன. இது விஷயத்தில் அரசாங்கம் தளர்ந்து போவதை மக்கள் வரவேற்கவே மாட்டார்கள்.

பொலீஸ் நிலையம் தாக்குதலுக்குள்ளானால் உடனே மூடு விழா. வங்கி கொள்ளையிடப்பட்டால் பின்னர் அதன் இயக்கமே முடக்கம், ரயில் நிர்மூலமாக்கப்பட்டால் போக்குவரத்து சேவை துண்டிப்பு — இப்படி நிலைமை தொடர்ந்தால் அரசாங்க நிர்வாகமே ஆட்டம் கண்டு விட்டது என்றுதானே கூற வேண்டும்.

மிகச் சிறு எண்ணிக்கையினரான வன்செயலாளர்களின் செய்கைகளுக்காக நாட்டு மக்கள் அசௌகரியங்களுக்குள்ளாவது வரவேற்கத்தக்கதல்ல. அப்பாவி மக்களைத் தண்டிக்காமல் அவர்களை அரவணைத்து, அன்புடன் நிர்வாகத்தை நடத்தி சமூகத்தில் ஏற்பட்டுள்ள குறைகளைக் களைந்து அதன் மூலம் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதுதான் ஆக்கபூர்வமானது.

# வேல்வடிவில் விளங்கி வினைதீர்க்கும் முருகன்

## கதிர்காம உ[illegible] இன்[illegible] ஆரம்பம்

முருகன் அன்புரு வானவன். மூத்த தமிழர்க்குத் தெய்வமாய் தத்துவத்தின் பொருளாய் விளங்குபவன்.

அஞ்சித் தவிப்போருக்கு அபயம் அளிப்பவன். பக்தர் துயர் தீர்ப்பவன். அருள்மாரி பொழிபவன்.

"முருகு" என்பது இளமை, அழகு, நறுமணம் என்ற பல்வேறு பொருளைத் தருகிறது.

இயற்கை மணமும், மாறா இளமையும், குன்றாத அழகும், கடவுள் தன்மையும் பொருந்திய இறைவனை நாம் "முருகன்" என்கிறோம்.

அன்புத் தெய்வமாய் — அழகுத் தெய்வமாய் — தமிழ்த் தெய்வமாய் விளங்கும் முருகன், வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயவிரும்பி பல்வேறு தோற்றங்களிலே எழுந்தருளி அருள் பாலிக்கிறான்.

கந்தன், கடம்பன், கார்த்திகேயன், காங்கேயன், கந்தவரோதயன், குகன், குமரன், ஆறுமுகன், ஷண்முகன், சரவணபவன், சுப்பிரமணியன், வள்ளி மணாளன், வடிவேலன், சேவற்கொடியோன், மயில்வாகனன், மயூரன் என அவனுக்கு நாமங்கள் பல.

தன்னை நாடி வந்து சரணடைந்த பக்தர்களுக்கு நெறி தந்து, உணர்வளித்து, வழிகாட்ட முருகன் எழுந்தருளியது அறுபடை வீடுகளிலாகும்,

ஞானப் பழமாம் மாம்பழத்தை இழந்ததனல் அவன்



ஆண்டியின் கோலமுற்று அமர்ந்த பழனி மலை —

தந்தைக்கு உபதேசம் செய்து தான் கொண்ட சுவாமிமலை —

சீறு கொண்டெழுந்த வேலவன், சூரபத்மனை சங்காரம் செய்த பின் கோயில் கொண்டமர்ந்த திருச்செந்தூர் —

தேவர் குல தெய்வானையை குலமகளாக்கித் திருமணக் கோலம் கொண்டமர்ந்த திருப்பரங் குன்றம் —

தென்னு தமிழ் குற மகள் வள்ளியை ஆட்கொண்டு அமர்ந்த திருத்தணிகை —

மயிலாடும் சோலையிலே வள்ளி, தெய்வானை கோலம் கொண்டு எழுந்தருளிய பழமுதிர் சோலை —

இதுதான் அந்த அறு படை வீடுகள் ஆகும்.

பக்திச் சிறப்பு மிக்க இந்த அறுபடை வீட்டிலும் அமர்ந்த முருகன், வேல் வடிவில் அமர்ந்த ஏழாவது படை வீடு கதிர்காமத் திருத்தலமாக இலங்கையில் அமைந்துள்ளது.

"கதிர்" என்றால் ஞான ஒளி.

"காமம்" என்பது விருப்பம், இன்பம், அவா ஆகியவற்றைக் குறிக்கிறது. ஞான ஒளியை விரும்பும் பக்தர்கள் வந்தடையும் இடம் "கதிர்காமம்".

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்று, காட்டினுள் வானளாவிய மரங்களின் மத்தியில் இயற்கை அழகுடன் [illegible]கும் திருப்பதி [illegible]

வரலாற்று [illegible] வாய்ந்த புனித கதிர்காம க்ஷேத்திரத்தின் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன்

— வித்தி —

பக்திபூர்வமான சூழ்நிலையில் ஆரம்பமாகிறது.

பக்தர் குழாம், "கந்தனுக்கு அரோஹரா, கதிரமலையானுக்கு அரோஹரா, கதிர்காம வேலனுக்கு அரோஹரா" என்று கோஷமிட பக்தி பரவச நிலையில் உற்சவம் இனிதே ஆரம்பமாகும்.

முருகனும் அடியார்களின் மனதை மகிழ்விக்கும் முயில்வாகனப்பெருமானின் அருளைப் பெறுவதற்காக நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இன்று கதிர்காமத்தில் வந்து கூடுவர்.

இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் அனைவரும் சாதி, மத, இன பேதமின்றிக் கூடுவதே இந்த தலத்தின் பெருமைக்கு ஒரு சான்றாகும்.

"யார் யார் எந்தெந்த வடிவங்களிலே என்னை வழிபடுகிறார்களோ அந்த வடிவங்களிலே நான் அவர்களுக்கு அருள் பாலிக்கிறேன்" என்று பகவத் கீதையிலே பார்த்தனுக்கு உபதேசித்தான் பரந்தாமன்.

இந்து மதம் போற்றும் சமய சமரசம் இதுதான்.

அந்த சமய சமரசம் ஆண்டவனின் சந்நிதானத்திலே நிலவுவதை அனுபவபூர்வமாக உணர்வதற்கு கதிர்காமத் திருத்தலம் வழிகாட்டுகிறது.

[illegible] அழைப்பதில்லை.

உற்சவ [illegible] குள் என்ன [illegible] லும் — தெரிந்[illegible] வர் எல்லோரையும் — [illegible] என்றே அழைப்பார்கள்.

"சின்னச் சாமி", "பெரிய சாமி", "சாமி" என்று ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்வதை நாம் அங்கு கேட்கக்கூடியதாக இருக்கும்.

இவ்வேளையில் கதிர்காமக் கந்தனின் சந்நிதானத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ள பௌத்தர்களின் கிரி விகாரையிலும், முன்புறமாய் அமைந்துள்ள இஸ்லாமிய மக்களின் பள்ளி வாசலிலும்கூட உற்சவங்கள் நடைபெறுவதையும் நாம் காணலாம்.

மும் சமயத்தவரும் தங்களது [illegible] உற்சவங்களுக்காக இங்கு ஒன்று கூடுகிறார்கள். இந்தத் தலத்தின் மற்றைய புனித சிறப்பு இதுவாகும்.

இத் தலத்தில் உறைந்த முருகனை வழிபட்டு உய்வடைந்த பக்தர்கள் பலர்.

அவர்களுள் ஒருவரான அருணகிரிநாதர் இந்தத் திருத்தலத்தில் அமர்ந்த முருகக் கடவுளை —

"கதிர் காம வெற்பில் உறைவோனே [illegible]

என்று பாடிப் பரவசமடைகின்றார்.

"நெஞ்சில் ஒரு கால் நினைக்கில் இருகாலும் தோன்றும் முருகா வென்றோதுவார் முன்" என்றார் நக்கீரர்.

அவர் கூறிய வழியில், கதிர்காமக் கந்தனின் கொடியேற்ற தினமான இன்று முருக நாமம் ஜெபித்து அவன் அருள் வேண்டி நிற்போம்.



# கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி

[பிரபல தமிழறிஞரும், பரமேஸ்வராக் கல்லூரி முகாமையாளரும், முன்னாள் தபால் அமைச்சருமான அமரர் சு. நடேசபிள்ளை இயற்றிய "கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி" பாடல்களில் இரண்டு இன்று வெளியிடப்படுகின்றன. மிகுதிப் பாடல்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் தினபதியில் வெளியிடப்படும்.]

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

திருவரு வாமென விடிந்தது காலை
திகழொளி பரப்புசெங் கதிரவனெழுந்தான்
குருகுகள் மதுமொழி மலர்வனத் திடையிற்
கூடிநற் கீதங்க ளியம்பின கேளாய்
உருகிநெந் தடியவ ருன்புகள் கூறி
ஒளிவளர் கழலினைத் தொழுதிட வணைந்தார்
கரிமிகு பயில்கிரிக் கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே

*

மாயைசேர் பேரிருள் மறைந்தது மாந்தர்
மணிதிகழ் கங்கைவந் தனுகினர் இரண்டு
வெயமை தோளினர் வீணைமென் கரத்தர்
விரும்பியுன் மெய்ப்புகழ் பாடிட விரைந்தார்
சேயநின் பொன்னடிக் கதிரொளி பரப்பிச்
சுருதிக ளியம்பின சூரிய னெழுந்தான்
பாய்மறை பலதிரி கதிரையிற் குமரக்
கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.

# காற்று மேடையின் நாட்டிய ராணிகள்

## உலக இலக்கியங்களில் மலர்களும் மங்கையரும்

மலர்களையும் மங்கையரையும் பற்றிப் பாடாத கவிஞர்களே உலகில் இலர் எனக் கூறுவர். அந்த அளவிற்கு மலர்களும், மங்கையரும் உலக இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளனர்.

மலர்களைக் காணும் போதெல்லாம் கவிஞர்களுக்கு மங்கையரே ஞாபகத்திற்கு வந்



திருக்கின்றார்கள், மங்கையரைப் பார்க்கும் போதெல்லாம் அவர்களின் ஒவ்வொரு அழகிற்கும் பல்வேறு மலர்களே உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

இதனால் தான் "மலரும் — மங்கையும் ஒரு ஜாதி" என்று கூறும் அளவிற்கு இந்தக் கலாருபங்கள் கவிஞர்களின் கற்பனையைக் கவர்ந்திருக்கின்றன.

இயற்கையின் எழிற் கோலங்களாக மலர்ந்து, இனிய மணம் பரப்பிக் கொண்டிருக்கும் இந்த மலர்கள், காற்றில் ஊஞ்சலாடும் காட்சியைப் பார்த்த ஒரு கவிஞன் "காற்று மேடையின் நாட்டிய ராணிகளே!" — என்று அழைத்தான்.

அதன் வெண்மையான இதழ்களில் விழுந்து கிடக்கும் பனித் துளிகளைக் கண்டதும் "முக்காடு போடத் தெரியாத மலர்க் கன்னிகளின் மூக்குத்திகளா இவை?" — என்று கேட்டான்.

பாடித் திரியும் பறவைகளைப் பார்த்த போது "சிறகுத் துடுப்புகளைச் செலுத்திப் பறக்கின்ற படகுப் பறவைகளின் பாட்டரங்கம் பூமரங்கள்". — என்று மலர்களைப் பூத்துச் சொரியும் காரணத்தால் மரத்தையே மகிமைப்படுத்தினன் ஒரு கவிஞன்.

புலவர்களோ ஒரு படி மேலே சென்று விட்ட காட்சிகளோ பல.

பூத்துப் புன்னகை புரிந்த ஒரு சிறிய மலரைக் கொய்து எடுத்த காதலன், அதைத் தன் காதலியின் கூந்தலிலே சூட வந்த போது — திடீர் என அந்தச் சின்ன மலரை அவள் காலடியில் போட்டு விட்டான்.

காரணம் என்ன?

அந்தச் சிறிய மலரை தன் காதலியின் கூந்தலிலே சூடினால், அதன் பாரத்தைத் தாங்காது அவளது சின்ன இடை ஒடிந்து போய் விடுமாம். புலவர் புகழேந்தியின் நளவெண்பாவில் வருகின்ற அந்தப் பாடல் இது:

"தொய்த மலரைக்
கொடுங்கையி லேணைத்து
மொய்குழலிற் சூட்டுவான்
முன்வந்து — தையலாள்
பாதார விந்தத்தே
சூட்டினன் பாவையிடைக்
காதார மில்லா தறிந்து."

— விஷ்ணுவர்த்தன் —

இப்படி மலர்களையும் மங்கையரையும் பாடிப் பரவசமடைந்த கவிஞர்களில் மதுவையும், மங்கையையும் பற்றிப் பாடிய ஒரு பாரசீகக் கவிஞன்:
"மாதவிப் பூங்கொடி நிழலில்"

மணிக்கவிதை நூல் ஒன்றும்
சிதறு செந்தேன் மதுவும்
திங்களியும் பக்கத்தே
காதலி நீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடுவையேல்
ஏதும் இனிக் கவலையில்லை,
இது ஒன்றே பரமபதம்."

என்று பாடிப் பரவசமடைந்தான்.

இப்படி மலர்களையும், மங்கையரையும் பற்றிப் பாடிய கவிஞர்களிலே பழந்தமிழ்ப் புலவர்களோ —

— இப்படி மலர்களை வைத்தே மங்கையரை மகிமைப்படுத்திய மனோரம்யக் கற்பனைகளில் மகிழ்ந்திருக்கின்றார்கள் நம் புலவர்கள்.

புகழ் பூத்த இப் பூக்களை தமிழ் இலக்கியங்கள் மூன்று வகையாக வகுத்துள்ளன. அவை:- கோட்டுப் பூ, கொடிப் பூ, நீர்ப்பூ இப்படி வகுக்கப்பட்ட இப் பூக்களால் ஆன மாலைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது தார், சரம், ஆரம், கண்ணி, தோடை என்பர்.

இப்படி பூமாலைகளைக் குறிப்பிட்டுக் கூறப் பல சொற்கள் இருந்த போதிலும் அந்த மாலைகள் அணிவதிலும் பல்வேறு வகைகளை நாம் காணலாம்.

கழுத்தில் அணியும் மாலைக்குத் தார் என்று பெயர். நெற்றியில் அணியும் மாலைக்கு இலம்பகம் என்றும், சடையில் அணியும் மாலைக்கு சூட்டு என்றும், தலையில் அணியும் மாலைக்கு தொடையல் என்றும் – கோத்த மாலை கோவை, பின்னிய மாலை பிணையல் என்றும் வெவ்வேறு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியத்தில் ஐம்பெரும் காப்பியங்கள் இருப்பது போல மலர்களிலும் ஐந்து வகை உள. அவையாவன: முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பன. இவை ஐந்தும் ஐந்திணை ஒழுக்கத்திற்கு அடையாளமாகக் கூறப்படுகின்றன.

காதல் உணர்வுகளைத் தூண்டி விடுபவன் மன்மதன். இவனது அழகுத் திருக்கரங்களில் உள்ள கரும்பு வில்லில் நாணேற்றித் தொடுத்து விடுவதோ ஐந்து வகை மலர்க்கணைகள்.

அவை:— தாமரை, மா, அசோகு, முல்லை, நீலோற்பலம்



என்பன. இவை ஐந்து மலர்க்கணைகளும் ஐவகைக் காதல் உணர்வுகளை ஊட்ட வல்லன என்று கூறுவர்.

மலர்களுக்கும், மங்கையர்க்கும் அக்காலம் முதலே நெருங்கிய தொடர்பு உண்டு. மலராத மலரும் மங்கையர் தொட்டால் பூக்கும் என்பது ஓர் இலக்கிய மரபு.

ஒரு பெண் கவைத்தால் மகிழம் பூவும், நட்புச் செய்தால் ஏழிலைப் பாலை மலரும், நிந்தித்தால் பாதிரிப்பூ பூக்கும், நகைத்தால் முல்லைகள் மலரும், ஆடினால் புன்னை மலர்கள் பூத்துச் சொரியும், அணைத்தால் குராவும், பாடினால் குருக்கத்தியும், நிழல் பட்டால் செண்பக மலரும் பூத்துச் சொரியும் என்று கூறுவர்.

உலகப் பிரசித்தி பெற்ற மலர்களில் ரோஜா மலரைத்தான் பூக்களின் ராஜா என்று சிறப்பாக கூறுகின்றனர்.

ஆசியஜோதி என்ற புகழுக்குரிய நேருஜியின் நெஞ்சம் கவர்ந்த மலர் சிவப்பு ரோஜா வாகும். இந்த ரோஜா மலர்களில் தானும் எத்தனை எத்தனை...

முல்லையும், மல்லிகையும் தமிழ் நாட்டுக்கே உரிய நறுமலர்கள், இந்த இரு வகைப் பூக்களும் பழந்தமிழர் காலத்தில் இருந்தே அவர்கள் வாழ்வோடு கலந்து வந்துள்ளன.

மண விழாக்களிலும், மங்கள வைபவங்களிலும் இம்மலர்கள் நறுமணம் வீசுவன.

தமிழர் மத்தியில் தாமரை மலருக்கு ஒரு தனியிடம் உண்டு.

கற்புக்கு உவமையாக முல்லை மலரைத்தான் குறிப்பிடுவார்கள். தமிழ் நாட்டு வள்ளல்களில் ஒருவரான பாரி வள்ளல், இந்த முல்லை மலர்களின் அழகிலே மயங்கி, தன்



மணிநெடுந் தேரையே முல்லைக்கும் கொடுத்த வரலாறு நம் முடையது. இதனால் தான் முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி

(16-ஆம் பக்கம் பார்க்க)

# பெண்மையின் சிலிர்ப்பு

சிறு கதை

— எஸ். ஐ. நாகூர்கனி —

நோன்புப் பெருநாள் மாதம் வந்து விட்டால் போதும், அந்த இளம் தம்பதியினிடையே ஒரு நோய் போல அந்தப் பிரச்சினை தோன்றி விடும்.

ஹஜ்ஜுப் பெருநாளை விட வளமார்ந்த ரமழானின் நோன்புப் பெருநாள்தான், அவர்களிடையே முரண்பாட்டை — சண்டை சச்சரவை — பெருநாள் மறைந்தும் மாறாத மனக் கசப்பைத் தந்து விடும்.

அப்படி என்ன தலை போகிற பிரச்சினை?

எல்லாம் இந்தப் பெண் ஜென்மத்தால் வந்து விடியும் வினை தான்.........

ஜமால் கமருனை கரம் பிடித்த புதிதில் பூத்த தலைப் பெருநாளிலேயே இந்தத் "தலைவலி" தலை நீட்டவே செய்தது. அப்போது ஜமால் அதைக் கவலையாக எண்ணவும் இல்லை; எடை போடவும் இல்லை.

மறு வருடத்திலும் தலைவலி வரத்தான் செய்தது. அப்போது முதல் முத்தினை பெண்மை ஏந்தி நின்ற நிலையில், தலைவலியைப் பொருட்படுத்தவில்லை இந்த ஜமால்.

நாட்கள் நகர்ந்தது. வருடங்கள் வளர......... வளர, பூமழலைகள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கெனப் பெருகப் பெருக தலைவலி புரிய ஆரம்பித்து, தாழ்ப்பாளையும் அது உடைத்துக் கொண்டு வெளியே வந்த தன் விளைவுதான் —

ஜமால் — கமருன் தம்பதியரிடையே புனித ரமழானில் முரண்பாடுகளும், வாதப் பிரதிவாதங்களும், பிரசவிக்கும் மனக் கசப்புகள்......

மணஞ் செய்த நாளிலிருந்து படிப்படியாக வளர்ந்து, கடந்த எட்டாண்டு கால இல்லறத்தில் ஏற்ற உருவெடுத்து, இந்த ஒன்பதாவது ஆண்டிலும் மாற்றம் ஏதுமின்றி, கோடரி போட்டு வெட்டும் அளவுக்கு மரமாக வளர்ந்துள்ள அந்தப் பிரச்சினைக்கு இம்முறை ஒரு முற்றுப் புள்ளி வைக்கவே விரும்பினான் இந்த ஜமால்.

அவனுடைய விருப்பத்திலும் நியாயம் கண் சிமிட்டத்தான் செய்தது. இந்த நியாயத்தை அவன் மனைவி கமருனும் அறிவாள். ஆனால் அவள் புரிந்து கொண்டாளா?

புரிந்து கொண்டாளோ, இல்லையோ, புரிய வைத்து விட வேண்டும் என்ற துடிப்பில்தான் ரஹ்மத்தென்னும் அல்லாஹ்வின் அருட் கொடைகளை அள்ளி வரும் ரம்மியமான ரமழான் வருவதற்கு இரு வாரங்களுக்கு முன்னமே அழகாகக் கூறிவிட்டான்.

அதற்கான வாய்ப்பைக் கூட இந்தக் கமருன்தான் வசதியாக ஏற்படுத்திக் கொடுத்தான்.

ஜமால் சிந்தனையில் ஒரு கவிஞனைப் போல, நாளைய பொழுது எப்படி விடியும் என்ற எதிர்பார்ப்பு ஏற்படுத்திய எண்ணங்களின் வண்ணங்களை உருப் போட்டுக் கொண்டிருந்தான். அப்போது —

"இங்க பாருங்க. நோன்பு மாசம் வருது. வழமை போல வின் பலாய் முசிபத்தை உண்டாக்காம வாங்கித் தந்திடுங்க" என்றாள் கமருன்.

தூக்கத்திலிருந்து திடுதிப்பென விடியலை பார்த்து விட்ட விழி இதழ்களின் விரிப்பில்.

"கமருன், நீங்க என்ன சொல்றீங்க?" என ஜமால் கேட்டான்.

"அதுதான் நம்ம பிள்ளைகளுக்குப் புதிய சட்டை, புடைவை வாங்கித் தார சமாச்சாரம்" என கமருன் சாவகாசமாகப் பதில் தந்தாள்.

"ஓகோ... அந்தக் கதை ஆரம்பமா?" எனக் கூறி அவ்விடம் விட்டெழுந்து போன ஜமால், போகும் போதே......

"ம்...... ஹ்ம்...... இந்த வருடம் இது எதிலே போய் முடியுமோ?" எனப் பெருமூச்சு விட்டான்.

"எங்கே போறீங்க? வாயைத் திறந்தா போதும், பூனை மாதிரி நழுவிடுவீங்க" கமருனின் வார்த்தைகளில் கடுகளவு காரத்தின் வர்ணம்.

"உண்மையை நல்லா உணர்ந்தும், அதைப் புரிந்திக்க முடியாதவங்க மத்தியிலே மௌனஞ் சாதிப்பதும், நழுவுவதும் வாழ்க்கைப் படகை ஆடவிடாமல் பார்த்துக் கொள்கிற உத்திகள் கமருன்."

"இந்தத் தத்துவம் எல்லாம் சோறு போடாது. நான் கேட்கிற புடைவை திணுசுகளை வாங்கித் தந்திடுங்க...... மத்ததை நான் கவனிச்சிக்கிறேன்."

"வாங்கித் தருவதிலே ஆட்சேபனையே இல்லை கமருன். ஆனால் வாங்கனுமே...... அதுக்குத் தேவையான பணம்?"

பாவம் ஜமால்......! கேள்விக் குறியாக வளர்ந்து போய் நிற்கிறான். ஆமாம், தற்சமயம் அதுவும் — முன்னைய வருடங்களைப் போல் இல்லாமல், இம்முறை அவனது வாழ்க்கையே ஒரு கேள்விக் குறியாக வளர்ந்து தான் போயிற்று.

புதுப் பொழுது விடியாதா?, என்று அலைந்து செவிகள் பூபாளத்தைக் கேட்கத் துடிக்கின்றன, அந்தப் புதுப் பொழுது எப்போது விடியும்?, மற்றவர்களைப் போல புனித ரமழானில் சக்காத் எனும் ஏழை வரியை — ஏழையருக்குரிய பங்கைக் கணக்கிட்டுக் கொடுக்கும் அந்தப் புதுப் பொழுது எப்போது விடியும்?

திடீர் மின்னல் என்ற முடிவின் தாக்குண்டு, "ஜொப்லெஸ்" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட புதுக் கவிதையாக நிற்கும் இந்த ஜமால், புது அனுபவங்களைத் தினந்தோறும் எதிர் நோக்கும் நிலையைப் புரியாத நேரிளமையாளாக இதோ பட்டியல் போடுகிறாளே கமருன்.




"தலை நோன்பு இரவுக்குப் போட ஜெஸீலா குட்டிக்கும், வசீலா குட்டிக்கும் சித்தைப் புடைவைகள் ரெண்டு திணுசுலே வாங்கனும், பன்னிரெண்டாம் இரவுக்கு அதுமாதிரி வேறு டிசைன் புடைவை வாங்கனும், அப்புறம் பத்து ஹைனாத்கள் இரவுக்கும், லைலத்துல் கதர் இரவுக்கும் சாதாரண சித்தைப் புடைவைகள், பெருநாளைக்கு குளிச்சதும் போடுறதுக்கு ஒன்று, பகலில் சாப்பிட்ட பிறகு அணியரதுக்கு பஜாரிலே போய் சிங்கப்பூர் சூட் வாங்கினால் போதும்."

"ஜெஸீலா குட்டிக்கும், வசீலா குட்டிக்கும் இந்த லிஸ்ட். ரெண்டாவது மகன் நக்டார் ராஜாவுக்கும், நாலாவது பயன் முனீர் ராஜாவுக்கும் வேறு லிஸ்ட்டா?" மூர்ச்சித்து விழுந்திடாத தைரியசாலி ஜமால் கேட்டான்.

"ஆம்பிளை பிள்ளைகளுக்கு நான் சொன்ன நல்ல இரவுகளிலே போடுறதுக்கு நாலு விதமான உடைகளை நீங்க வாங்குங்க......"

அப்பாடா...... கமருன் சொல்லி முடித்து விட்டாள்.

இந்த வருடத்து ரமழான் மாதத்து டிரஸ் லிஸ்ட்டைச் சமர்ப்பித்து விட்டாள். இனித்தான் தம்பதியரிடையே சண்டையின் சாயல் படிந்த வாதங்கள் பரிமாறப்படும்.

கமருன் நல்ல சில குணங்களின் நாயகிதான். பெண்மைக்குரிய பொலிவு அவளிடமும் இல்லாமல் இல்லை. ஆனால் உடை விஷயத்தில் மட்டும் இப்படி அலாதியானதோர் பிடிவாதம் அவளது பிறவிக் குணமாகவே ஆகிவிட்டது.

பெரு நாளில், தான் புத்தாடை புனையா விட்டாலும் பரவாயில்லை. தனது மணாளர் எப்படியாவது சமாளித்துக் கொள்ளட்டும். ஆனால் தன் பிள்ளைகள் — ஏழு வயது எல்லையை எட்டிப் பிடிக்காத அந்த நான்கு மழலைச் செல்வங்களுக்கும் நாலு விதமான நல்ல புனித இரவுகளில் — நாலு விதமான புத்தாடைகளை அணிந்து, நாலு வீட்டுப் பிள்ளைகளின் நடுவில் நல்ல மதிப்போடு உலா வர வேண்டுமென்ற உத்வேக உணர்ச்சி தான் இந்தக் கமருனுக்கு.

பெண் என்றாலே உணர்ச்சிகளின் கலவைதானே. அந்தவகையில் இந்த உணர்ச்சி தேவை தான். ஆனால், அளவு கடந்து கரை தாண்டிப் போகலாமா? அதனால்தானே ஆபத்தே ஆரம்பமாகிறது.

"கமருன்...... நீங்க சொன்ன மாதிரி எனக்கும் நம்ம பிள்ளைகளுக்கு வித, விதமான புத்தாடை புனைந்து பார்க்கிறதிலே மகிழ்ச்சிதான். ஆனால் என் நிலைமை தெரியாதா கமருன்? இன்று நான் வேலை வெட்டி இல்லாம, கடை கடையா ஏறி இறங்கி, தினமும் என்னால் இயன்ற மட்டும் நாலு காசு தேடித் தாரேனே. இந்த நிலையிலும் நீங்க......"

என கமருனின் சிந்தனைக்கு விருந்து கொடுத்து விட்டு, தன் வீட்டின் அருகில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட அந்தப் பிரகாசமான பள்ளிவாசலை

(14 ஆம் பக்கம் பார்க்க)

# பாழடைந்த குடிசை!

மாஸ்டர் சிவலிங்கம்

— 2 —

முரடர்களால் பிடிக்கப்பட்ட மணியம் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தான். தான் யார் என்பதை அவர்களுக்கு விளக்கிவிட வேண்டும் என்று முயற்சித்தான் மணியம். ஆனால் அந்த முரடர்கள் மணியத்தின் வாயை ஒரு துணியால் இறுக்



கி கட்டி விட்டார்கள்.

"இந்த இடத்தில் இனி நாம் தாமதிக்கக் கூடாது. இரகசியப் பொலீஸாரின் நடமாட்டம் வர வர அதிகரித்து வருகிறது. இவன் தனியாக வந்திருக்க முடியாது. இவனுடன் மற்றும் சிலர் வந்திருக்கக் கூடும்"

இவ்வாறு கூறிய முரடர் தலைவன் தனது விரல்களால் மணியத்தின் கழுத்தில் தட்டிவிட்டான். அடுத்த கணம்...!

மணியம் அறிவு கலங்கிய நிலையில் சாய்ந்தான். அதே நேரத்தில் அந்தக் குடிசையை நோக்கி ஓடி வந்தான் ஒரு முரடன்.

ஓடி வந்த அந்த முரடன் தலைவனிடம் தணிந்த குரலில் ஏதோ கூறினான்.

அந்தச் செய்தியைக் கேட்டதும் பரபரப்புடன் செயல்பட ஆரம்பித்தான் முரடர் தலைவன்.

எல்லோரையும் கடற்கரைக்குச் செல்லும்படி உத்தரவிட்ட தலைவன், மொட்டைத் தலை முரடனை அருகில் அழைத்து பொலீஸ் நடமாட்டம் எங்காவது தென்படுகிறதா என்று அவதானித்துக் கொண்டு இரு! என்று அனுப்பி வைத்தான்.

பின்பு மணியத்தின் வாய்க் கட்டை அகற்றினான்.

"டேய் தம்பி! உன்னோடு அதிகம் பேசுவதற்கு இப்போது எனக்கு நேரம் இல்லை. நீ என்னுடைய கூட்டத்துடன் சேர்ந்து செயல்பட்டால் பெரு நன்மை அடைவாய், என்ன சொல்கிறாய்...?" என்று மிரட்டும் தொனியிலே கேட்டான் முரடர் தலைவன்.

திடீரென முரடர் தலைவன் இப்படிக் கேட்டதும் என்ன பதில் சொல்வதென்று புரியாமல் ஒரு கணம் தயங்கினான். மறுகணம் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "சரி உங்கள் கூட்டத்துடன் சேர்ந்து விடுகிறேன்" என்று தடுமாறியபடி கூறினான் மணியம்.

"பலே, பலே! நீ புத்திசாலி தான்..." என்று மணியத்தின் முதுகிலே தட்டிக் கொடுத்த முரடன், "தப்பிச் செல்ல முயன்றால் விரைவாக உன் உயிர் போய் விடும்" என்று எச்சரித்தான்.

எப்படி இந்த முரட்டுக் கூட்டத்திலிருந்து தப்பிச் செல்வது என்ற சிந்தனையில் ஆழ்ந்தான் மணியம்.

"அது சரி, உனது பெயரைக் கேட்க மறந்து விட்டேனே... உன்னுடைய பெயர் என்ன?" என்று கேட்டான் முரடர் தலைவன்.

"எனது பெயர் சுப்பிரமணியம். எல்லோரும் என்னை மணியம் என்றே கூப்பிடுவார்கள்"...

மணியம் பேச்சை முடிப்பதற்குள், "சரி என்னைப் பின்பற்றி வா" என்று கூறி விட்டு கடற்கரையை நோக்கி விரைந்தான் முரடர் தலைவன். அவனைப் பின்பற்றியபடி ஓட்டமும் நடையுமாகச் சென்றான் மணியம்.

"மெதுவாகப் பாய்ந்தோடித் தப்பி விட்டால் என்ன" என்று சிந்தித்தபடி பின் பக்கம் திரும்பிப் பார்த்தான் மணியம். அவனைப் பின்பற்றி ஒரு முரடன் துப்பாக்கியுடன் வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் முரடர் தலைவனைப் பின்பற்றி விரைவாக நடக்க ஆரம்பித்தான் மணியம். அப்போதும் மழை தூறிக் கொண்டுதான் இருந்தது.

கடற்கரையை அடைந்ததும் கற்பாறை ஒன்றின் மீது ஏறினான் முரடர் தலைவன். மணியமும் அவனைப் பின்பற்றி ஏறினான்.

கற்பாறையில் நின்றபடி கடலை நோட்டமிட்டான் முரடர் தலைவன். சற்றுத் தொலைவில்...!

ஒரு படகு வந்து கொண்டிருந்தது. அந்தப் படகில் சிறு வெளிச்சம் ஒன்று அணைந்து அணைந்து எரிந்து கொண்டிருந்தது.

முரடர் தலைவன் தனது சட்டைப் பையில் இருந்து இரு டோர்ச்லைட்டுகளை எடுத்தான், ஒன்று பச்சை நிறமுடையது. மற்றது சிவப்பு நிறமுடையது. பச்சை நிறக் கண்ணாடி போடப்பட்ட டோர்ச் லைட் ஒளி மூலம் தொலைவில் தென்பட்ட படகுக்குச் சைகை செய்தான் முரடர் தலைவன். அதையடுத்து...!

அந்த இயந்திரப் படகு கரையை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்தது.

"என்னைப் பின்பற்றி வா" என்று கூறியபடி கற்பாறையிலிருந்து இறங்கி கடற்கரையை நோக்கி ஓடினான் முரடர் தலைவன், மணியமும் அவனைத் தொடர்ந்து ஓடினான்.

கடற்கரையில் சில முரடர்கள் காணப்பட்டார்கள். அவர்களுள் இருவர் துப்பாக்கி ஏந்தி நின்றனர்.

விரைந்து வந்த படகு கரைக்குச் சற்றுத் தொலைவில் நிறுத்

## சிறுவர் சிந்தாமணி

தப்பட்டு விட்டது. கரையில் நின்ற முரடர்கள் நீரில் பாய்ந்தபடி அப் படகை நோக்கிச் சென்றனர்.

"மணியம்! என்ன பார்த்துக் கொண்டு நிற்கிறாய்? நீயும் அவர்களுடன் சென்று படகில் உள்ள பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு வந்து அதோ அந்தப் பற்றைகளின் மறைவில் நிறுத்தப்பட்டிருக்கும் லொறிக்குள் ஏற்றி விடு" என்று உத்தரவிட்டான் முரடர் தலைவன். அப்போது அவனுடைய கையிலே கைத் துப்பாக்கி ஒன்று மின்னிக் கொண்டிருந்தது.

மந்திரத்தால் கட்டுப்பட்டவனைப் போல மணியம் நீரிலே பாய்ந்தபடி அந்தப் படகை நோக்கிச் சென்றான். அப்போது அவனுடைய உடல் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

முரடர்கள் இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருந்தனர். படகிலிருந்த பெட்டிகளைத் தூக்கிச் சென்று லொறியிலே ஏற்றிக் கொண்டிருந்தனர்.

படகின் அருகில் மணியத்தைக் கண்டதும் படகில் இருந்த முரடர்கள் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தனர்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? புதிதாக நமது கூட்டத்திலே சேர்ந்திருக்கிறான் இந்தப் பொடிப் பயல். அவன் தலையிலும் பெட்டியை ஏற்றி விடுங்கள்" என்று கரகரத்த குரலிலே கூறினான் துப்பாக்கியுடன் காணப்பட்ட மொட்டைத் தலையன்.

மணியத்தின் தலையில் ஒரு பெட்டி ஏற்றப்பட்டது. அந்தப் பெட்டி மிகவும் பாரமாக இருந்தது. இதற்குள் அப்படி என்னதான் கனமான பொருள் இருக்கும் என்று எண்ணியபடியே லொறியை நோக்கி நடந்தான் மணியம்.

லொறியில் காணப்பட்ட மூன்று முரடர்கள் மணியத்தைக் கண்டதும் சந்தேகக் கண்ணுடன் அவனை நோக்கினர்.



"வீணாகச் சந்தேகப்படாதீர்; இவனும் நமது கூட்டத்தைச் சேர்ந்தவன்தான்" என்றான் பெட்டி சுமந்து வந்தவன் ஒருவன்.

"அடடே! அப்படியா?" என்று கேட்டபடி மணியம் தூக்கி வந்த பெட்டியை லொறியில் ஏற்றினான் அந்த முரடன்.

பெட்டிகள் ஏற்றப்பட்டதும் அந்த லொறி விரைவாகச் சென்று மறைந்தது. பெட்டிகளுடன் வந்த இயந்திரப் படகும் வந்த வழியே திரும்பிச் சென்று கொண்டிருந்தது.

பாறைகளுக்கு மறைவில் காணப்பட்ட இயந்திரப் படகு ஒன்றிலே முரடர் தலைவனும் சில முரடர்களும் ஏறிக் கொண்டனர். மணியமும் ஏற்றப்பட்டான். படகு மின்னல் வேகத்தில் எங்கோ விரைந்தது.

கடலின் மத்தியிலே உள்ள தீவு ஒன்றை படகு அடைந்ததும் அனைவரும் இறங்கிக் கொண்டனர்.

முரடர் தலைவனிடம் மணியத்தைச் சுட்டிக் காட்டி ஏதோ கூறினான் ஒரு முரடன்.

"சரி இழுத்து வாருங்கள் இந்தப் பொடிப் பயலை" என்று சத்தமிட்டபடி அங்கு காணப்பட்ட விடுதியொன்றில் நுழைந்தான் முரடர் தலைவன். மொட்டைத் தலையனும் அவன் பின் சென்றான்.

ஒரு முரடன் மணியத்தை இழுத்துச் சென்று தலைவன் முன் நிறுத்தினான். மணியத்தின் உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது.

(தொடரும்)

## பொழுதுபோக்கு



வர்ணம் தீட்டிப் பாருங்கள்

சினிமா

# கார்த்திக் நடிக்கும் வேளையில் காதல் வருவதுண்டா?

கார்த்திக் இளைஞர், பல அழகு நடிகைகளுடன் நெருக்கமாக நடிக்கிறார். அப்படி நடிக்கும் வேளையில் அவருக்குக் காதல் வருவதுண்டா? அவரே அதற்குத் தக்க விளக்கம் அளிக்கிறார்.

நியூவேவர்ஸ் தயாரிக்கும் "ஆயிரம் நிலவே வா" என்ற படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பு. இதன் கதை வசனம் டைரக்‌ஷன் பேராசிரியர் ஏ. எஸ். பிரகாசம். இதில் காதல் ஜோடி கார்த்திக் — சுலக்சனா

ஒரு காதல் காட்சியில் இருவரும் கட்டி அணைத்தவாறு, இறுகத் தழுவி நடிக்க டைரக்டர் சொல்லிக் கொண்டிருக்க, கடுமையான வெயில் காரணமாக காதல் ஜோடிக்கு வியர்த்துக் கொட்ட, சிறிது ஓய்வு அளிக்கப்பட்டது.

இந்த நேரத்தில் கார்த்திக்கிடம் நிருபர் சில கேள்விகள் கேட்டார். அவற்றிற்கு கார்த்திக் சுவாரஸ்யமாகப் பதில் அளித்தார்.

கேள்வி:- குளுமையான நேரத்தில் காதல் காட்சியில் நடிப்பதுதானே சுகமானது?

பதில்:- (குபீர் என்று சிரித்துக்கொண்டே) உண்மையான காதல் ஜோடி, நிலவு, பூஞ்சோலை, கடற் கரை, தோட்டம் என்று தேடலாம். இங்கே அப்படி முடியாதே! வெயிலாவதென்ன! குளிரானுலென்ன! இது தொழில்.

கேள்வி:- உங்களைக் காதல் கதைகளிலேயே பெரும்பாலும் பயன்படுத்துவது ஏன்?

பதில்:- இளம் வயதுதானே! அதனால் இருக்கலாம். இப்போது கொஞ்சம் முதிர்ச்சி அடைந்துள்ள பருவம். அதுதான் காதலுடன் சுடும் மோதலும் கலந்து கொடுக்கிறார்கள். இனி, படத்துக்குப் படம் வேடம் மாறுபடும்.

கேள்வி:- நடிக்கும் வேடம் இருக்கட்டும். உங்களுடன் ஜோடியாக நடித்த எந்த நடிகையுடனாவது உண்மைக் காதல் உருவாகி உள்ளதா?

பதில்:- (ஆழ்ந்து யோசித்துவிட்டு) இல்லை. இல்லவே இல்லை. அப்படி நான் பழகியதும் இல்லை. பழகுவதும் இல்லை.

கேள்வி:- ராதாவுடன் ஜோடியாக நடிக்கவே நீங்கள் விரும்புகிறீர்களாமே!

பதில்:- இப்படித்தான் ஒவ்வொரு நடிகையுடன் இணைத்துப் பேசுவதாக கேள்விப்படுகிறேன்.

கேள்வி:- உங்களுடன் ஜோடியாக நடித்த நடிகைகள் பற்றி மனம் திறந்து சொல்லுங்கள்!

பதில்:- ராதாவுடன் அதிக படங்களில் நடித்தேன். நல்ல பொண்ணு. ஜி. ஜி. புத்திசாலி, சுஹாசினி எனக்கு பிடித்த "ஆர்ட்டிஸ்ட்" (நடிகை). அருணா, விஜி அமைதியானவர்கள். கலைஞை எந்தப் பிரச்சினைக்கும் இடம் இல்லாத நடிகை.

கேள்வி:- இளைஞரான நீங்கள் நீச்சல் குளத்தில் ஒருவடன் விளையாடுவதுபோல முத்தக் காட்சி கிடைத்தால், அதிலும்...!

பதில்:- நீச்சல் குள காதலையே விரும்பாதவன் நான்! முத்தத்தை நாடுவேனு? குண சித்திர நடிகனுக உயரவேண்டும். அதுவே, எனது குறி.

— இப்படிக் கூறினர் கார்த்திக். (ம-10)



வயது ஏற ஏற அனுபவமும் பெருகும். அழகிலும் புதுமெருகு ஏற்படும் என்பது உண்மை தான். லட்சுமியும் சிவகுமாரும் அதனை இங்கு உறுதிப்படுத்துகிறார்கள். "இன்று நீ நாளை நான்" படத்தில் இந்தக் காட்சி. (ம-10)



அழகின் கன்னத்தோடு கன்னம் தேய்த்து விஜயகாந்த் இவ்விதம் காதல் செய்யும் போது யாரை சாட்சி வைத்துக் கொண்டு காரியத்தில் இறங்கினரோ தெரியாது. "சாட்சி" படத்தில் வரும் காட்சி. (ம-10)

## சினி வாசகர் கருத்துகள்

### இதழ் தாகம்

தேனுண்ணும் வண்டு நிகர்த்த காதலர்களே "இளமைக் காலங்கள்" இவ்வுலகில் அங்கிங்கென்னுதபடி எங்கும் பொங்கும் பூரிப்பிலாழ்த்தி வருகிற தென்பதற்கு மோகன் - சசி ஜோடியின் இதழ்த் தாகம் தீர்க்கும் மோகத் தோற்றம் பிரமாதம் போங்கள். (ஜி. ஜெகநாதன், பெரியகடை, யாழ்ப்பாணம்.)

### தேக வனப்பு

வனப்பதனை வாளிப்பான தேக மதில் வடித்து நின்ற வனிதையின் தனியழகுத் தோற்றம், முற்றும் துறந்த முனிவரையும் கலக்கமுறவிடம் அடிமைப் படுத்தவே செய்யும். (த. வீராசாமி, வத்தளை.)

### தழுவும் தணல்

சிலுக்கைக் கண்டதும் நெருப்புக்கும் ஒரு ஜிலு ஜிலுப்பு போலும். தழுவ வந்த தணலை அணைத்து விட்டபடியால் தப்பினர் சிலுக்கு. (ப. லிங்கசிங்கம், நாரம்மலை.)

### அங்கங்கள்

"செக்ஸ் ஜோக்ஸ்" அழகுப் பதில் இன்பம் காணும் கலைஞனின் சுந்தரத் தோற்றம் கண்டால், ஜோக்கை மட்டுமா ரசிக்க முடியும்? செக்ஸ் அங்கங்களையுமல்லவா கண்டு ரசித்திக்க முடியும்? (ச. கனகராசா, மட்டக்குளி.)

### அகங்காரம்

"என்னை வெல்ல எவனும் இல்லை" என்ற பெயரில் பிரபு நடிக்கும் படப் பெயர், தன்னை விட ஆளில்லை என்ற அகங்கார, தற்பெருமைப் பெயராக அல்லவா அமைந்துள்ளது. (க. அம்பிகாபதி, கல்கிசை.)

### தூக்கு தூக்கி

கலைக்குலைவைத் தூக்குமளவுக்குக் கார்த்திக் துணிந்து விட்டார் என்றால், கிளைமாக்ஸில் கார்த்திக் காலை வாரி விட்டார் என்று தான் அர்த்தம். (எம். ஏ. கே. ரஷீட், வைத்த மூலை.)



ரயில் பெட்டிகள் ஒரே திக்கில் தண்டவாளத்தில் சென்றால் தான் ரயில் நகரும். லட்சுமி - பிரசன்ன ஜோடி மாதிரி எதிர் எதிர்த் திசைக்கு இழுத்தால் என்ன நடக்கும்? "ஜிகு ஜிகு ரயில்" படத்தில் வரும் காட்சி. (ம-10)

## திரைக்கு வரும் லட்சுமி படம்

லட்சுமி கதாநாயகியாக நடித்த படம், ப்ரூபூன் மூவிஸ் "உண்மைகள்" வாழ்க்கையில் நடைபெறும் சில உண்மை சம்பவங்களை உள்ளடக்கிய கதை அம்சம் கொண்ட படம் இது.

இதில் செருப்பு தைக்கும் பட்டதாரி வாலிபனாக ராஜ்குமார் நடிக்கிறார். சூழ்நிலை காரணமாக விபசாரியாக மாறும் பெண்ணாக நடிக்கிறார், வனிதா, ஸ்ரீநாத் டில்லி கணேஷ், வி. கோபாலகிருஷ்ணன், கவுண்டமணி, கல்லாப் பெட்டி சிங்காரம், ராக்கெட் ராமநாதன், ஓரல் மோகன், குள்ளமணி நடிக்க எம். எஸ். விசுவநாதன் இசை அமைக்கிறார்.

திரைக்கதை வசனம் டைரக்‌ஷன்: ஆர். சி. சக்தி. ஒளிப்பதிவு: சி - செல்வராஜ். தயாரிப்பு கே. எஸ். போஸ். "உண்மைகள்" படப்பிடிப்பு முடிவடைந்தது. இந்த மாதம் திரைக்கு வரும் என்று தெரிகிறது. (ம-10)

## பங்களாவில் வளரும் "ஏதோ மோகம்" படம்

எம். எஸ். சண்முகம் அளிக்கும் பரணி சினி ஆர்ட்சின் "ஏதோ மோகம்" படப்பிடிப்பு தொடர்ந்து 15 நாட்களாக சென்னை மற்றை வெளியில் உள்ள ஒரு பங்களாவில் வேகமாக நடந்தது.

இந்தப் படத்தின் வெளிப்புறக் காட்சிகள் மைசூர், கொடைக்கானலில் படம் ஆக்கப்படும்.

கதாநாயகனாக சுரேஷ் நடிக்கிறார். தேங்காய் சீனிவாசன், மூர்த்தி, ஜூனியர் பாலையா, குமரி முத்து, லட்சுமி கலா, புதுமுகம் பானு பிரியா, நார்ஜுனான், தாம்பரம் லலிதா நடிக்கிறார்கள்.

கங்கை அமரன் கதை, பாடல், இசை அமைத்து டைரக்‌ஷன் மேற்பார்வையிட டி. கே. மணியன் கதை திரைக்கதை எழுதி டைரக்ட் செய்கிறார்.

ஒளிப்பதிவு சபாபதி, மோகன் தயாரிப்பு நிர்வாக பொறுப்பு ஏற்க வளருகிறது "ஏதோ மோகம்". இந்தப் பெயர் மாற்றப்படும் என்று தெரிகிறது. (ம-10)

## பட உலகில் புகழ் பெற்ற "தேங்காய்" சிகிச்சை!

நடிகர் தேங்காய் சீனிவாசன் ஒரு குணசித்திர நடிகர். அவருடைய குண நலன்களும் விசித்திரமானவை.

"தேங்காய்" படப் பிடிப்புக்குச் சென்ருல், ஒரு "சூட்கேஸை"யும் தவறாது எடுத்துச் செல்லுவார். அதில் வயிற்று வலி, தலை வலி, மூட்டு வலி, வாந்தி, மயக்கம், இரத்தக் கொதிப்பு உட்பட 40 வகை நோய்களுக்கு உரிய மாத்திரைகள், மருந்துகள் இருக்கும்.

யாருக்காவது "திடீர்" என உடல் கோளாறு ஏற்பட்டால் உடனே சிகிச்சை அளிப்பார், தேங்காய். சமீபத்தில் வெளிப்புறப் படப்பிடிப்புக்கு சென்ற வெற்றி சங்கரின் "திடீர்" வயிற்றோட்டம், இந்த "தேங்காய்" சிகிச்சையினுல் சுகப்படுத்தப் பட்டதாம். (ம-10)



"தமிழ்ப்பட உலகில் நான் பெரிய கதாநாயகி ஆகும் நாள் வெகு தூரத்தில் இல்லை" என்கிறரோ நடிகை விஜி? "தூரம் அதிகமில்லை" படத்தில் இவ்விதம் தோன்றுகிறார் அவர். (ம-10)

## சிவாஜி நடிக்கும் படத்தில் சந்திரசேகரன்

"கல் தூண்" படத்தை அடுத்து அருப்புக்கோட்டை எஸ். எஸ். கருப்புசாமியின் எஸ். எஸ். கே. பிலிம்ஸ் சிவாஜி கணேசன் நடிக்க "சிம்ம சொப்பனம்" என்ற படத்தை தயாரிக்கிறது.

இதில் பத்திரிகை ஆசிரியராக வேடம் ஏற்று நடிக்கிறார், சிவாஜி கணேசன். இவருடைய காதலியாக பூர்ணிமா ஜெயராம் நடிக்கிறார். பிரபு-ராதா ஜோடியுடன் நம்பியார், தேங்காய் சீனிவாசன், மேஜர் சுந்தரராஜன், கல்லாப்பெட்டி சிங்காரம் சில்க் சுமிதா, மனோரமா நடிக்கிறார்கள். இதே படத்தில் சந்திரசேகரனும் நடிக்கிறார்.

சிவாஜி கணேசன் நடிக்கும் படம் ஒன்றில் இவர் நடிப்பது இதுவே முதல் முறை.

கல்தூண் படத்தின் கதை வசனம் எழுதிய ஆர். கிருஷ்ணு சிம்ம சொப்பனம் படத்துக்கும் கதை வசனம் எழுத, எஸ். எஸ். கருப்புசாமியும், ஆர். கிருஷ்ணுவும் டைரக்ட் செய்கிறார்கள். ஒளிப்பதிவு பி. என். சுந்தரம். இசை: கே. வி. மகாதேவன். (ம-10)



ரஜினிகாந்த் கையிலுள்ள சிகரெட் புகைவது போல் தலைவருடைய மனதிலும் ஏதோ புகைச்சல் ஏற்பட்டிருக்கிறது என்பதை முக பாவம் காட்டுகிறது தானே! அதனுல் பாவம் ஸ்ரீதேவியும் வாடிப் போய் விட்டார். படம்: "அடுத்தவாரிசு" (ம-10)

## 'தூரம் அதிகமில்லை' பாடல் காட்சி

ராபர்ட் ராஜசேகரன் டைரக்‌ஷனில் உருவாகும் படம் "தூரம் அதிகமில்லை" இந்தப் படத்தில் குருவிக்கரம்பை சண்முகம் எழுதிய "நான் பாடவா நெஞ்சம் தான் வாழ்த்தவா துன்னும் காலமானின் இரவுக்கிடையே ஒரு பாடல் உன்னுள் உலாக் காணுதோ......" என்ற பாடல் இடம் பெறுகிறது. இந்த பாடலுக்கான காட்சி குப்ப கோணத்தை அடுத்துள்ள வேப்பத்தூரில் படமானது.

கார்த்திக் - விஜி ஜோடியாக நடிக்க, சங்கர் - கணேஷ் இசை அமைக்கிறார்கள். இந்த பாடலை பாடியவர் எஸ். ஜானகி (ம-10)

## 'தைரியசாலி' நாயகன் பிரபு

ஜெமினி ரூபேனி பிரபு விஜி நடிக்க "சூரப்புலி" என்ற படத்தை தயாரித்து திரையிட்டது. "சூரப்புலி"க்கு அடுத்து "தைரியசாலி" என்ற பெயரில் ஜெமினி ரூபேனி புதுப்படம் தயாரிக்கிறது.

கதாநாயகனாக பிரபு நடிக்கிறார். மற்ற நட்சத்திர தேர்வு நடந்து கொண்டிருக்கிறது. டி. ராமன் தயாரித்து டைரக்ட் செய்யும் "தைரியசாலி" படப்பிடிப்பு விரைவில் தொடங்குகிறது. (ம-10)

## கோடம்பாக்கம் டயரி

நடிகர் மோகன் ஹரே ராமா ஹரே கிருஷ்ணு இயக்கத்தில் சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. தினசரி காலை, மாலை நேரத்தில் பக்திப் பூஜை செய்யவும் தவறுவதில்லை. எதில் சேர்ந்தாலும் சரி, ஆனல் இந்த வயதிலேயே சாமியார் ஆகும் எண்ணம் மட்டும் மோகன் மனதில் உதிக்காமல் இருப்பதாக!

★

நடிகை அம்பிகை யின் திருமணப் பேச்சும் அடிபட்டதே அடிபட்டது, புதிதாக வந்த பட "சான்ஸ்" கைநழுவும் நிலைமை ஏற்பட்டதாம். அதனலேயே திருமண முடிவைத் தள்ளிப் போட்டிருப்பதாகத் தெரிகிறது. பணமா? திருமணமா? என்பதில் வென்றது வைட்டமின் "ப".

★

விரைவில் திரைக்கு வரும் "வாரிசு" படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பு உதயபூரில் உள்ள அரண்மனையில் 7 நாட்கள் நடந்தது. இந்த 7 நாட்களும் தண்ணீரை வாரியிறைப்பது போல தாராளமாகப் பணம் செலவு செய்யப்பட்டதாம். "இவ்வளவு செலவா?" என்று அந்தப் படத்தின் டைரக்டரே திகைத்துப் போனராம்!

★

இளம் நடிகர்களான விஜயகாந்த், ராஜேஷ், ராஜீவ் ஆகியோர் இன்னும் எந்த ஒரு நடிகையின் காதல் கடைக்கண் வீச்சுக்கும் அடிமையாகவில்லையாம். 3 பேரும் இப்படித்தான் கூறிக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் புற்றில் எது இருக்குமோ? யார் கண்டது?

★

நடிகர் கமலஹாசனை நடன அபிநயா மணியும் சரோஜா "மருமகனே" என்றுதான் அழைக்கிறார். கமலஹாசனும் நடன ஆசிரியையை மாமியாரே" என்றே அழைக்கிறார். படவுலகில் மாமியார், மருமகன் என்கிற உறவோடு பழகி வருபவர்கள் இந்த இருவர் மட்டுமே!

★

உள்ளங்கை அளவு கச்சை கட்டி ஆடும் நடிகைகள்தான் இப்போது "கவர்ச்சி" நடிகைகளாம்! தமிழ்த் திரைப்பட உலகில் 40 ஆண்டுகளுக்கு முன்பே "கவர்ச்சி"யைக் காட்டி ரசிகர்களை கொள்ளைகொண்ட நடிகைகளும் உண்டு. "கச்ச தேவயானி" என்ற படத்தில் சேலை அணிந்தே "கவர்ச்சி"யைக் காட்டினர், டி. ஆர். ராஜகுமாரி. "வன மோகினி" படத்திலோ அரைகுறை ஆடையிலேயே ரசிகர்கள் மனதை உலுக்கினர், தவமணி தேவி. இருவருமே கதாநாயகிகள்!

★

நடிகை மேஜிக் ராதிகா "கராத்தே" பயிற்சி பெற்றவர், ஷூட்டிங்கில் சென்ற இந்த நடிகையை இரு வாலிபர்கள் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து கலாட்டா செய்தனராம். நடிகையோ கீழே இறங்கி "கராத்தே" பாவனை காட்டி கதிகலங்க ஓடவைத்தாராம். அம்மா சொல்லக்கூடாது. பெண் புலிதான்! (ம-10



டஜயசாந்தியின் சங்குக் கழுத்தில் இதழ் பதித்து கார்த்திக் முத்த மழை பொழிவதற்கு என்னத்திலும் தடையில்லை. ஆனால் தமது கழுத்திலும் பவள இதழ்கள் ஊர்ந்து செல்ல வேண்டும் என அவர் விரும்புவது சரியா? "ஆயிரம் நிலவே வா" படத்தில் ஒரு கட்டம். (ம—10)

## 'சாட்சி' பாடல் பதிவு

வாணி ஜெயராம், எஸ். என். சுரேந்தர் பாட, வைரமுத்து எழுதிய "மணி மஞ்சங்கள் மகரந்தங்கள் இள முத்தங்கள் இடும் சத்தங்கள்..." என்ற பாடல் வீரலட்சுமி கம்பைனின் "சாட்சி" என்ற படத்துக்காக விஜயா கார்டன் ஒலிப்பதிவு கூடத்தில் ஒலிப்பதிவானது. சங்கர் — கணேஷ் இசை அமைத்தனர்.

பி. எஸ். வி. ஹரிஹரன் தயாரிக்கும் "சாட்சி" படத்தின் கதையை ஷோபா எழுத, திரைக்கதை, வசனம் எழுதி, எஸ். ஏ. சந்திரசேகரன் டைரக்ட் செய்கிறார்.

கதாநாயகனாக விஜயகாந்த், கதாநாயகியாக விஜி நடிக்க, நம்பியார், சங்கிலி முருகன், பண்டரிபாய், வசந்தா நடிக்கிறார்கள்.

(ம—10)

# மகாலட்சுமியை காதலிக்க போட்டி!

ஏ. வி. எம். ராஜன் மகள் மகாலட்சுமியை காதலிக்க நான்கு பேர் போட்டியிடுகின்றனர்.

"வாழ் டிரைவர் ராஜாக்கண்ணு", "ஊரும் உறவும்" ஆகிய படங்களைத் தயாரித்த நடிகர் ஏ. வி. எம். ராஜன் இப்போது அபி ஆர்ட்ஸ் சார்பில் "தேவி ஸ்ரீதேவி" என்ற வண்ணப் படத்தைத் தயாரிக்கிறார். இந்தப் படத்தின் திரைக் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புக்களை கங்கை அமரன் ஏற்றுள்ளார்.

ஏ. வி. எம். ராஜன் – புஷ்பலதா தம்பதிகளின் மகள் மகாலட்சுமி இதில் கதாநாயகியாக நடிக்கிறார். இவரை காதலிக்க போட்டியிடும் நான்கு வாலிபர்களாக சுரேஷ், திலீப், கங்கா, புது முகம் சுதாகர் ஆகியோர் நடிக்கிறார்கள். எப்போதும் மகாலட்சுமியைப் பின்தொடரும் இந்த நான்கு பேரையும் தன்னுடைய சுதிப சக்தியால் அவர் நாயாக மாற்றி விடுகிறார்.

இதற்காக கங்கை அமரன் எழுதிய "தசரதனின் மகனே தினம் தினம் தொழுதிடு நீ மனமே! ராமனவன் புகழ் படித்தால் நலன்களும் சுகங்களும் வாழ்வினில் பெருகிடுமே! பருவமோ இனி யது! பதமிது! கனிந்து!" என்று தொடங்கும் பாடல் ஒன்று ஏ. வி. எம். ஸ்டூடியோவில் பதிவு செய்யப்பட்டது.

இதில் ஏ. வி. எம். ராஜன், புஷ்பலதா, ரேகா, நம்பியார், தேங்காய் சீனிவாசன், குமரிமுத்து, கல்லாப் பெட்டி சிங்காரம், வில்லன் ஜெயராஜ் மற்றும் பலர் நடித்து வருகிறார்கள். இளையராஜா இசை அமைக்கிறார். "தேவி ஸ்ரீதேவி" வேகமாக வளர்ந்து வருகிறது.

(ம—10)

# கடமை உணர்வு மிகுந்த நடிகர் இதோ ஒருவர் வந்து விட்டார்

நடிகர்கள் கவனம் பிடித்தவர்கள் என்று புகார் கூறப்படுவதுண்டு. இந் நிலையில் கடமை உணர்வு மிக்க நடிகர் ஒருவர் இதோ கிடைத்து விட்டார்.

நடிகர் விஜயகாந்தின் தந்தை சமீபத்தில் மதுரையில் காலமானார். தந்தை இறந்த மூன்றுவது நாளே விஜயகாந்த் படப்பிடிப்பில் கலந்துகொண்டது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

அதற்கு அவர் சொன்ன காரணம்; என் தந்தையின் மறைவை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அந்தத் துக்கம் தாங்க முடியவில்லை. ஆனால் என்னை நம்பிப் பல லட்சம் முதலீடு செய்த தயாரிப்பாளரையும் நான் நினைத்துப் பார்க்க வேண்டாமா? அதனால்தான் அந்தத் துக்கத்தையும் பொருட்படுத்தாமல் படப் பிடிப்பில் கலந்து கொண்டேன்.

தன் தந்தையைப் பற்றிக் கூறியபோது விஜயகாந்தின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

ஒரு படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த போது இவர் தந்தை இறந்த தகவலைச் சொன்னார்களாம். அப்படியே அதிர்ந்து போய்விட்டாராம். ஆனால், அதே சமயத்தில் அந்த துக்கத்திலும் அவர் நடிக்க வேண்டிய காட்சிகளை நடித்துக் கொடுத்துவிட்டுத்தான் மதுரை புறப்பட்டுச் சென்றாராம். இப்படி கடமை உணர்வுள்ள ஒரு நடிகர் கிடைப்பது மிகவும் அரிது என்று தயாரிப்பாளர் வீரப்பாலே பாராட்டினர். (ம—10)



சிலோன் விஜேந்திரனின் கொடூரப் பார்வை எல்லாம் சிலுக்கு சுமிதாவின் முன் சக்தியற்றுப் போய் விடும். அத்துடன் முகத்தில் புன்முறுவலும் ஏற்படத்தான் செய்யும். "பொலீஸ் பொலீஸ்" படத்தில் வரும் கட்டம் இது. (ம—10)

# உஷ்.... இது ரகசியம்

தமிழ்ப் படங்களில் பின்னணி பாடும் பிரபல தெலுங்குப் பாடகர். இவர் தெலுங்குப் படங்களில் நடிக்கும் பிறமொழி நடிகர்கள் சிலருக்கு "டப்பிங்" குரலும் கொடுக்கிறாராம், பாடுவது போல இதிலும் தீவிரமாக இறங்கி இருக்கிறாராம், பாலான புளியான பாடகர்.

★

திருதேவியை சென்னையில் பார்ப்பதென்றாலே அபூர்வம் தான். பம்பாய், ஐதராபாத், விஜயவாடா என்று பறந்து கொண்டே இருக்கிறார். "ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு தமிழ்ப் படங்களில் நடித்தால் போதும்" என்ற முடிவுக்கு வந்து விட்டாராம். திருதேவி.

★

"சில்க்குக்கு போட்டி நானே" என்று வந்திருக்கும் அனுவான ஆட்டக்காரி படப்பிடிப்புக்கு மிகத் தாமதமாகவே வருகிறாராம். "ஏன் இந்தத் தாமதம்?" என்று கேட்டால், "வரும் போதுதானே வரமுடியும்" என்று பதில் கிடைக்கிறதாம்! நாலு படங்களில் "சான்ஸ்" அடித்தால் பதிலும் இப்படித்தான் வரும்போலும்.

★

"உழைப்புக்குத் தகுந்த ஓய்வு தேவை என்பதை நன்றாகப் புரிந்துகொண்டேன். அதனால் சில நாட்கள் படப்பிடிப்பில் கலந்துகொள்ளாது வீட்டிலேயே ஓய்வு எடுக்கிறேன்" என்றார், பிரபல சாந்த நடிகர். (ம—10)

## 'அடி ஆத்தா'

### சசிகலா

கோல்டன் பிலிம்சார் "அடி ஆத்தா" என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறார்கள், "இளமை காலங்கள்" சசிகலா இதில் கதாநாயகியாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நடிப்பவர் தாசரி பாலாஜி.

மாறுபட்ட பாத்திரம் ஒன்றில் சுஜாதா நடிக்கிறார். மற்றும் அனுராதா, கவுண்டமணி, ஜாஸ் மோகன், சாமிக்கண்ணு கல்லாப்பெட்டி சிங்காரம் மற்றும் பலரும் நடிக்கிறார்கள்.

இதன் கதை – வசனத்தை கல்யாண் எழுதுகிறார். ரங்கநாதன் கேமராவை கையாள கங்கை அமரன் இசை அமைக்கிறார்.

இதன் டைரக்ஷன் பொறுப்பை புதிய இயக்குநர் ஜி. என். செல்வகுமார் ஏற்றுள்ளார்.

(ம—10)





பியூஜி பிலிம் அறிமுகப்படுத்தும் அதி புதிய சம்பியன், பியூஜிகலர் எச்ஆர். பல வருட ஆராய்ச்சி, அபிவிருத்தியின் விளைவு.

**துல்லியமான வர்ணப் பதிவு**
பியூஜிகலர் எச்ஆர், வர்ணங்களைத் துல்லியமாகவும் உண்மையாகவும் பதிவு செய்யும்.

**திருத்தமான பரும அமைப்பு**
பியூஜிகலர் எச்ஆர், அதி நுட்பமான பரும அமைப்புள்ளது. பெரிதாக்கிய படப் பதிவுகளைப் பார்த்தால், தான் சிறப்பை நம்பலாம்.

**நிகரற்ற கூர்மைத் தெளிவு**
விபரங்கள், நுட்பங்களை பியூஜிகலர் எச்ஆர் அதி கூர்மைத் தெளிவுடன் பதிவு செய்யும்

**நுண்மைச் சருமச் சாயல்கள்**

பியூஜி வழங்கும் சுவையான சலுகை பற்றியும் ஒரு செய்தி. ஒவ்வொரு பியூஜிகலர் எச்ஆர் படப் பக்கெட்டின் உட்புறத்திலும் "ஒலிம்பிக் கழுகு செம்" உள்ள படம் ஒன்றிருக்கும். மொத்தம் உள்ள "செம்" சித்திரங்கள் 24. ஒன்று "செம்" ஒலிம்பிக் தீப் பந்தம் ஏந்தியுள்ள படம். மீதி 23 சித்திரங்கள், 21 ஒலிம்பிக் போட்டிகளையும் இரண்டு காட்சி விளையாட்டுகளையும் பிரதிநிதிப்படுத்தி, "செம்" அவற்றில் பங்குபற்றும் கட்டங்களைக் காட்டும். இந்தச் சித்திரங்களைச் சேகரிக்கத் தொடங்கி, பியூஜி அறிவிக்கும் சுவையான செய்திக்குக் காத்திருங்கள்.

**பியூஜி-வர்ணப் படச்சம்பியன்**

**போட்டோ கீனு லிமிட்டெட்,**
90, பிரதான வீதி, கொழும்பு 11. தொலைபேசி: 28063.
275, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 21051
மற்றும் கிடைக்குமிடம், நிலைவரைந்த வர்த்தக வளவம், கொழும்பு 3.

பியூஜி போட்டோ பிலிம் கம்பனி லிமிட்டெட், டோக்கியோ, ஜப்பான்.
விநியோகிப்போர்:
யுனிவர்சல் மார்க்கெட்டிங் சேவிசஸ்,
37, சிறகதில் வீதி, கொழும்பு 7. தொலைபேசி: 597986

TAL

# பெண்மையின்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி) நோக்கி, அவர் என்றும் அந்தி நேரத்துத் தொழுகைக்கென போய் விட்டார்.

கமருன்...... கணவர் சொல்லிச் சென்ற அவர் நிலை பற்றிச் சிந்தித்தாளா? அல்லது எல்லாமே கடலில் பெய்த மழை தானு?

கொஞ்ச நேரம் சுற்றிலேயாக அமர்ந்த கமருன், மறு நிமிடமே எழுந்து அடுக்களை நோக்கிப் போய் விட்டாள் "எப்படியாவது தன் கணவர் சமாளித்து எவரிடமாவது கடன் பட்டு, சென்ற வருடங்களைப் போல் வாங்கித் தருவார்" என்ற இமாலய நம்பிக்கை, அந்த கமருனிடம்.

நோன்பு மாதமாகிய ரமழானும் வந்தது..........

தலைநோன்பு இரவுக்கு நாலு பிள்ளைகளுக்கும் அணிவதற்கான புத்தாடையை தான் சேமித்து வைத்திருந்த உண்டியல் பணத்தைக் கொண்டு வாங்கிக் கொண்டாள். அதுவும் கணவர் பின்னர் தரும்போது கணக்கிட்டு கடன் தீர்த்துக் கொள்ளலாம் என்ற திட்டத்தில்தான்

ஆனால், ஜமாலோ அசைவே இல்லை. இதுபற்றி ஒரு வார்த்தையேனும் வாய் திறக்கவில்லை.

நாளும் ஜமால் போடும் தூண்டிலில் எந்த மீனும் அகப்படாதா என்று மிதப்பிலேயே கண்ணும் கருத்துமாய் காலத்தைக் கணக்குப் பார்த்தான். புதிய வேலை ஏதும் கிடைப்பதற்காக நாலுபேரிடம் கூறி, நாலு திசைகளிலும் வலை விரித்திருந்தான். மற்ற எந்த சிந்தனையும் ஜமாலைத் தாக்கவோ, தடுக்கவோ இல்லை.

நாட்கள் ஜமாலுக்காகவோ, கமருனுக்காகவோ காத்திருக்க வேகில்லை டாக்சி மீட்டரைப் போல ஓடின.

பன்னிரண்டாம் இரவு அப்புறம் இல்லாத்துக்காக உயிர் நீத்த பத்து தோழர்களின் நினைவு தினமாகிய பதினேழாம் இரவு...... இரண்டும் இனிதே வந்தன.

ஜமால் அசைந்து கொடுக்கவேயில்லை. பெருநாளைக்கு நாலு பிள்ளைகளுக்கும் ஒரே டிரஸ்ஸாக — உருப்படியாக வாங்கினால் போதும் என்ற நிலையிலேயே பாதை அமைத்துப் பதுங்கிக் கொண்டான்.

ஆனால் கமருனே, முகத்தில் என்றும் கொள்ளும் வெடிக்க, இங்கும் அங்குமாக, குறுக்கும் நெடுக்குமாக உலா வந்தாள். அவளுக்கு இருப்பு கொள்ளாத நிலையில், நாலு வார்த்தை கணவரைக் கேட்டு விட வேண்டும் என்ற ஆசை, அவளுள் விஸ்வரூபம் எடுத்தது.

"இங்க பாருங்க, உங்களுக்கு வசதி இல்லேன்னு சொல்லுங்க, நான் என் உம்மா வீட்டுக்குப் போய், அவர்களிடம் சொல்லி என் பிள்ளைகளுக்கு ஏதும் வாங்கிக் கொடுக்கிறேன். நீங்க எங்களை மறந்திடுங்க" எனக் கோபத்தின் கோட்டையே தாண்டிய வளாய்ப் பொரிந்து தள்ளினள்.

"கமருன்...... நீங்க கோபப்படுறதிலே அர்த்தமேயில்லே. அடுத்த வீட்டு அப்பாஸ் பிள்ளையைப் பாருங்க; முன் வீட்டு முத்தார் பிள்ளைகளைப் பாருங்க...... அவங்களெல்லாம் நாளொரு புத்தாடையா உடுத்திராங்க"

"அவங்க இவங்க கதை எனக்குத் தேவையில்லே. நீங்க வாங்கித் தருவீங்களா? இல்லேயா?" ஏதோ பந்தயம் இடுவது போல வெட்டொன்று துண்டு இரண்டாக ஆக்கி விடுவது போலக் கேட்டாள்.

"சாமத்தியத்திலே தொட்ட பேய் சந்தூக்கில் வைக்கும்வரை மாறவே மாறாது" என்று பள்ளி மோதினர் அடிக்கடி சொல்வார், அது மாதிரி இந்தக் குணம் கமருனை விட்டுக் கழன்று போகவே போகாதோ?

"கமருன், நீங்க ஏதோ ஒரு வித மயக்கத்திலே பேசுறீங்க. உண்மை நிலையை உணர்ந்தும் அதைப் புரிஞ்சிக்க மறுக்கு றீங்க...... இஸ்லாம் எளிமையைத்தான் வற்புறுத்துது. ஆடம்பரத்துக்கு என்றுமே அது தலைசாய்க்கல்ல. பெருநாளைக் கொண்டாடத்தான் வேணும், அதுக்காக ஆடம்பரமா — தினம் ஒரு புத்தாடையா உடுத்திக் கொண்டாட வேண்டிய அவசியமில்லே..."

"அப்போ...... நோன்பே தேவையில்லே; பெருநாளையும் கொண்டாட வேண்டிய அவசியமில்லேயே......" — அவள் தான்.

"நோன்பு பிடிக்கத்தான் வேணும். உண்மை நிலையை உணர்ந்து செயல்படும் தனியில் நோன்பு பிடிக்கணும். எல்லாரும் பிடிக்கிறாங்க என்பதுக்காக நாமும் பிடிக்கக் கூடாது. ரமழான் முழுதும் நோன்பு இருந்து பசியைத் தெரிஞ்சிக்கிட்டா போதாது. பசி தந்த பக்குவ நிலையை நம் வாழ்விலே பரிமளிக்கச் செய்யணும்......"

ஆகா......! என்ன அழகாக நோன்பின் மாண்பை ஜமால் விளக்குகிறான்? நோன்பென்பது வெறுமனே பசிபட்டினி கிடப்பதல்லவே, வயிறு காயும் போது, ஆரோக்கியம் பிறக்கும். [illegible] அந்த மனப் பக்குவம் வாழ்வை செம்மைப்படுத்த வேண்டும். இதுதானே நோன்பின் பயன்?

ஆனால் கமருன்......?

தலைவரின் உண்மை நிலையை உணர்ந்தும், அதனுள் மனப் பக்குவம் பெறாமல், ஆடம்பரம் எனும் சகதியிலே புரளுகிறாளே...

இதனுல் அவன் கண்ட பயன் என்ன?

கணவருடன் மனக்கசப்பு — இருவரும் இரு துருவங்களாய் ஒருவரையொருவர் முகம் பார்ப்பதோ — பேசுவதோ இல்லை.

புனித லைலத்துல் கத்ர் எனும் இருபத்தேழாம் இரவும் வந்தது. குடும்பத்தில் எந்தவித மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை.

வைகறை வேளைக்கு முன்னெழுந்து, சடங்கிற்காக "சஹர்" செய்வதும், பின் உறங்குவதும், மற்றவர் முன் தானும் ஒரு நோன்பாளி எனக் காட்டிக் கொள்வதுமாக கமருனின் காலம் கடந்தது.

இதனுல் சஹர் வேளையில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும் விசேட சஹர் நிகழ்ச்சிகளில் அக்கறை காட்டுவதில்லை அவள்.

ஆனால், அன்றிரவு — அந்த லைலத்துல் கத்ர் எனும் புனித இரவு முழுதும் வானொலியில் விசேட நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பு என்பதால், அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் எல்லோரும் வானொலியின் முன் மொய்த்துக் கொண்டார்கள்.

காரணம்...?

இரவு மணி ஒன்று — பதினைந்துக்கு கமருன் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள அந்தப் பிரகாசமான பள்ளிவாசலில் பேஷ் இமாம் "சஹர்" சிந்தனை வழங்கவிருக்கின்றார்.

நாலு பேருடன் ஐந்தாவது நபராக கமருனும், வானொலியை மொய்த்துள்ள பெண் ஜென்மங்களில் ஒருத்தியாக தூக்கத்தை மறந்து காத்திருக்கிறள்.

இதோ, நேரம் நெருங்கி விட்டது.

"ஏய்... கமருன் நம்ம ஹஸரத் பேசப் போறாரு... சத்தத்தைக் கூட்டி வை" என்ற பக்கத்து வீட்டு பாத்தும்மாவின் [illegible] கமருன் நிலைகொண்டான்.

இதோ, வானொலியில் அவர் களது பேஷ் இமாம் —

"அல்லாஹு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத் தஹு". இந்த நள்ளிரவின் நடுப்பகுதியிலே நோன்புப் பெருநாளை இன்னும் ஓரிரு நாட்களில் எதிர்நோக்கி நிற்கும் முஸ்லிம்களாகிய நம்மிடையே நோன்பின் பயனும் மனப்பக்குவம் காணப்பட வேண்டும்..." கனிர் குரலில் ஹஸரத் பேசிக் கொண்டே போகிறார்.

பேச்சு — நோன்பில் துவங்கி, சக்காத்தில் சற்றே தரிபட்டு, பித்ராவை தொட்டு இதோ பெருநாளைக் கொண்டாடும் முறை எப்படி அமைய வேண்டும் என்ற விளக்கு விளக்கந் தர ஆரம்பித்தது.

..."ஒரு முறை கலீபா உமரிப்னு கத்தாப் அவர்களிடம் அவர் தம் மனைவி நல்லாள் தம் பிள்ளைகளுக்கு ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாளைக்கு அணிவதற்கான புத்தாடைதைப்பதற்கு பணம் கேட்கின்றார். அதற்கு கலீபா உமர் அவர்கள், தன் வசதியீனத்தை குறிப்பிட்டு, "பின்னர் புத்தாடை தைக்கலாம்; இம்முறை பெருநாளில் பழைய ஆடைகளையே சூழலி அணிவோம்" எனக் கூறி விடுகின்றார். பிள்ளைகளும் — மனைவியும் தொடர்ந்து வற்புறுத்தவே, வைத்துல்மால் எனும் அரசாங்க பொது நிதியிலிருந்து தன் சம்பளத்திலிருந்து பின்னர் கழித்துக் கொள்ளும்படி வேண்டி, பெருநாட் செலவுக்கென முற்பணம் கேட்டு விண்ணப்பிக்கின்றார்கள் கலீபா அவர்கள்.

விண்ணப்பத்திற்கு மறுமொழி வருகிறது. அதில் "கலீபா அவர்களே, தங்களது விண்ணப்பத்தை மதிக்கிறோம். ஆனால், பிரஸ்தாப முற்பணத் தொகை முழுவதையும் கழிக்கும் காலம் வரை தாங்கள் உயிருடனே இருப்பீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு? எனவே, மன்னிக்கவும்" எனக் கண்டிருந்ததை வாசித்த கலீபா அவர்கள், அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்.

மறுநாள் பெருநாட் காலை கலீபா அவர்கள் கழுவிய பழைய உடைகளைத் தன் பிள்ளைக்கு அணிவித்து, பள்ளிக்கு தொழ அழைத்துச் செல்கின்றார்கள்... இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் அதிபதியாகிய கலீபா அவர்களிடம் காணப்பட்ட எளிமை, அமானிதம் இதயங்களாகிய நமக்கெல்லாம் நல்லதொரு படிப்பினையாகும்..."

ஹஸரத் பேசிக் கொண்டே போகிறார். அவர் சுட்டிக்காட்டிய அந்தச் சம்பவம், அந்தப் பெண்ணின் மனதைத் தொட்டதோ? ஆனால், கமருன் என்ற காரிகையின் பூமனத்தில் ஒரு கிளர்ப்பை உண்டாக்கி விட்டதென்னவோ உண்மை...!

அன்று சஹர் செய்து விட்டு படுத்தவள், அவளுக்கு நித்திரை வரவில்லை. ஹஸரத்தின் பேச்சு — தன் கணவரின் கையறு நிலை — கணவருடன் கசப்புற்ற தன் போக்கு... என்று அவளுள் ஒரு பிரளயமே ஏற்பட்டு, அவளை என்னவோ செய்தது.

பெருநாளைக்கு முந்திய நாளின் — சூரியன் சாயப்போகும் அந்தவொரு சாயங்கால வேளையில் —

— ஒரு பெண் தன் பிள்ளையொன்றை இடையில் தூக்கியபடி முக்காடிட்டு கமருனின் வீட்டு வாசலில், பெருநாளை ஒட்டி, "தாநியா" எனும் அன்பளிப்பு ஏதும் பெற்றுச் செல்ல வந்து நிற்கிறள்.

கமருன் ஐம்பது சத நாணயமொன்றை நீட்டுகிறள்.

"ம்மா... எனக்கு காசு வேணும்மா... இந்தப் பச்சைக் குழந்தைக்கு — உங்க மகளு நெனச்சி, பெருநாளைக்கு போடுறதுக்கு ஒரு பழைய சட்டை இருந்தா கொடுங்கம்மா..." என்று வறுமையின் விளிம்பிலே, அதன் ஓரத்துக்கே ஒடிப்போய் விட்ட நிலையில் கேட்ட போது...

கமருனின் கருமணிகள் இரண்டின் ஓரத்திலே நீர்மணிகளின் அணிவகுப்பு.

கமருனின் பூமனத்தில் அப்போதும் அந்தவொரு சிலிர்ப்பு...

தலைநோன்பு இரவுக்கென தன் கடைசி மகள் முனீருக்காக எடுத்த புத்தாடையை அவளது பெருநாள் ஹதியாவாக — அன்பளிப்பாக, வாழ்வின் விடியலுக்காய் ஏங்கும் அந்தத் தாயின் கைகளில் திணித்து விட்டு, உட்புறமாக ஓடி வந்து, கட்டிலில் குப்புற விழுந்து தேம்பித் தேம்பி அழுகிறாள்.

அந்த அழுகையின் அர்த்தம்..?

---

## சோதிட சிந்தாமணி

சிந்தாமணி ஜோதிடர் : திரு. ஆர்மி

10 — 7 — 1983 தொடக்கம் 16 — 7 — 1983 வரை உள்ள பலாபலன்கள்

### மேஷம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்.

மேஷம்:- மனதுக்கு ரம்மியமான ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் இடம்பெறும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட வேண்டி இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நீடிக்கும். வியாபாரிகள் விழிப்போடு இருக்க வேண்டும். பங்குதாரர்கள் மூலம் தொல்லைகள் ஏற்படக் கூடும். பயணத்தின் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4ஆம் கால்கள். ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் கால்கள்.

ரிஷபம்:- வியாபாரத்தில் செழிப்பு உண்டாகும். கடல் வாணிபம் சிறந்து விளங்கும். எழுத்தாளர்களுக்கு ஏற்றம் உண்டாகும். வார நடுப் பகுதியில் ஒருசில சங்கடங்கள் ஏற்படும். பக்குவத்தோடும், புத்தி சாலித்தனமாகவும் அதைச் சமாளிக்க வேண்டி ஏற்படும். தொழிலாளர்கள் உயர்வு பெறுவார்கள். கணவன் — மனைவி உறவு நன்ருக இருக்கும்.

### மிதுனம்

மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் கால்கள்.

மிதுனம்:- எதிர்காலத்துக்கு அத்தியாவசியமான ஒன்றிரண்டு திட்டங்கள் பூர்த்தியடையாமல் தாமதித்து நிற்கும். சிறு விபத்துக்கு இடமுண்டு. தெய்வ வழிபாடு மிக அவசியம். கலைத்துறையில் உள்ளவர்கள் ஆதாயம் அடைவார்கள். வியாபாரிகளுக்கு எதிர்பாராத அதிர்ச்சிகள் ஏற்பட இடமுண்டு. காதல் விவகாரங்கள் களிர்ச்சியற்று இருக்கும்.

### கடகம்

புனர்பூசம் 4ஆம் கால் பூசம் ஆயிலியம்.

கடகம்:- கௌரவம், புகழ், பொருளாதாரம் நன்ருக இருக்கும். ஆனாலும் மன அமைதி இராது. எதிர்பாராத விதமாக செலவினங்கள் அதிகரிக்கும். வீடு, நிலம் போன்றவற்றால் வருமானம் ஏற்படும். கோர்ட் விவகாரங்கள் தள்ளிப் போடப்படும். பிள்ளைகளால் புகழும், மகிழ்ச்சியும் ஏற்படும். தூர தேசத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கும்.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் கால்.

சிங்கம்:- குடும்ப நலம் திருப்திகரமாக இருக்கும். விவசாயிகள் மேன்மை அடைவார்கள். அரசியல்வாதிகள் கலக்கம் அடைவார்கள். தூரப் பிரயாணம் ஒன்றுக்கு அடிகோலப்படும். பொருளாதாரம் நன்ருக இருக்கும். கொடுக்கல், வாங்கல்கள் திருப்தியாக நடைபெறும். பயணத்தின் போது மிகக் கவனமாக இருக்க வேண்டும். அலட்சியப் போக்கால் கைப்பொருளை இழக்க நேரிடலாம்.

### கன்னி

உத்தரம் 2, 3, 4ஆம் கால்கள். அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் கால்கள்.

கன்னி:- எடுத்த கருமங்கள் தங்குதடையின்றி இனிது முடிவுறும். ஊக்கமும், உழைப்பும் உறுதியளிக்கும். பெரிய தலைவர்களின் உதவி கிடைக்கும். வியாபாரிகள் ஆதாயம் அடைவார்கள். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் திருப்தியான சூழ்நிலை உருவாகும். சிறு விபத்து ஏற்பட இடமுண்டு. எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### துலாம்

சித்திரை 3, 4 ஆம் கால்கள். சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள்

துலாம்:- ஊக்கத்தாலும், உழைப்பாலும் முன்னேற்றம் காணக் கூடிய வாரம் இது. ஒன்றிரண்டு பெருஞ் செலவுகளுக்கு இடமுண்டு. நண்பர்கள் உதவி செய்வார்கள். கொடுக்கல், வாங்கல் திருப்தியாக நடைபெறும். கலைஞர்கள் பொருளும், புகழும் பெறுவார்கள். தாய்வழியில் ஒரு சுபகாரியம் நடைபெறும். அயல்நாட்டில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

### விருச்சிகம்

விசாகம் 4ஆம் கால் அனுஷம் கேட்டை

விருச்சிகம்:- வர்த்தகர்கள் தங்கள் தொழில்துறையில் வளர்ச்சியைக் காண்பார்கள். தொழிலாளர்களுக்கு ஏற்றம் உண்டாகும். அரசாங்கப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு மனதில் உற்சாகமும், பலமும் ஏற்படும். மறைமுகமாக இருந்த பகைவர்கள் மறைவார்கள். சகோதரர்களால் பயன் உண்டு. கணவன் — மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இராது.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் கால்.

தனு:- பொருளாதார நிலை உயர்ந்திருக்கும், என்றாலும் செலவுகள் அதிகரிக்கும். கலைஞர்கள் அலட்சியப் போக்கால் சரிவைச் சந்திக்க நேரலாம். ஒரு நல்ல காரியத்தைச் செய்ய தற்குத் தடைகள் இருந்து வரும். அந்தத் தடைகளை அசுரத் துணிவுடன் எடுபட்டால் நன்மை உண்டு. கடிதப் போக்குவரத்து அனுகூலமானதாக இருக்கும்.

### மகரம்

உத்திராடம் 2, 3, 4ஆம் கால்கள். திருவோணம், அவிட்டம் 2ஆம் கால்கள்

மகரம்:- எடுத்த கருமங்கள் சில தடைகளின் பின் முடிவுறும். தாய்வழியால் உதவி கிடைக்கும். திடீர்ப் பொருள் வரவுக்கு இடமுண்டு. மனதுக்கு இனிய ஒரு சம்பவம் நடைபெறும். உற்றார் உறவினர் அன்புடனும், ஆதரவுடனும் நடந்து கொள்வார்கள். கலைஞர்களுக்கு கௌரவம் உயரும். கடிதப் போக்குவரத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### கும்பம்

அவிட்டம் 3, 4ஆம் கால்கள். பூரட்டாதி, சதயம் 1, 2, 3ஆம் கால்கள்

கும்பம்:- கௌரவம், புகழ் நன்ருக இருக்கும். ஆயினும் மனதிலே நிம்மதியில்லை. வீண் அலைச்சலும், பணச் செலவும் உண்டாகும். கோர்ட் விவகாரங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. வீடு, நிலம் போன்றவற்றால் வருமானம் உண்டு. வியாபாரிகள் ஆதாயம் அடைவார்கள். காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படும்.

### மீனம்

பூரட்டாதி 4ஆம் கால் உத்தரட்டாதி ரேவதி

மீனம்:- குடும்பநலம் நன்ருக இருக்கும். ஆயினும் அவ்வப்போது சிறு சிறு சறுக்கல்கள் ஏற்பட நேரிடலாம். துணிவால் அவற்றைச் சமாளிக்க வேண்டும். வியாபாரிகள் சிறு நஷ்டத்தைச் சந்திக்க நேரிடலாம். தொழிலாளர்கள் மேன்மை அடைவார்கள். வார இறுதியில் தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம். ஆனல் கவலைக்கு இடமில்லை.

---

# அவளுக்கு.....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி) கதைகள் கற்பனையே என்றும், தாழ்வு மனப்பான்மை காரணமாகப் பிறந்தவையே எனவும், நாளடைவில் கசீலா புரிந்து கொண்டாள். அதை மறக்கத்தான் அவன் குடிக்கிறனே என்று கூட அவள் வியந்திருக்கிறள்.

செந்தில் மீது கசீலாவுக்கு அனுதாபம் பொங்கியது. அவனுடன் அவள் பேசிப் பழக ஆரம்பித்தாள். நாளடைவில் அவன்மீது ஒருவித வாஞ்சையே ஏற்பட்டு விட்டது.

ஒருநாள் செந்தில் திடீரென்று கேட்டான், "கசீலா கேக்கிறன் என்டு குறை நினைக்காதை. உனக்கும் ஆனந்தனுக்கும் என்ன தகராறு?

"அப்படி ஒண்டுமில்லையே!"

"எனக்கு நினைக்காதை. நீங்கள் ரண்டுபேரும் புருஷன், பெண்டாட்டி மாதிரியே பழகிறியள்?"

"சும்மா போங்கோ. உங்களுக்கு வேறை வேலையில்லை" அவள் சிரித்துச் சமாளித்தாள்.

"நீ மட்டும் என்னோடை வந்தோண்டும் உன்னை ராணி மாதிரி வைச்சிருப்பன். என்னை நம்பிக்கு நீ என்னோடை எங்கை வரப் போறாய்?" பாதி வேடிக்கையாகவும், பாதி உண்மையாகவும் சொன்னன் செந்தில்.

கசீலாவுக்கு பேச்சின் போக்கு பிடிக்கவில்லை. ஆயினும் கேட்டாள், "நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால் வடிவாயிருக்கிறவன் யார் வந்து கேட்டாலும் கூடப் போயிடுவன் போலை கிடக்கு."

"ஒருக்காச் செய்தால் இன்னொருக்காச் செய்கிறது கஷ்டமோ?"

கசீலாவுக்கு அவனை ஓங்கி அறைய வேண்டும் போலிருந்தது. அதற்குள் ஆனந்தன் வந்துவிடவே பேச்சு நின்றது. அன்றிரவு வெகு நேரம் அவள் அழுதாள். அவள் ஒரு மனித ஜீவன் என்பதை எல்லோரும் மறந்து விட்டார்களா என அவள் நெஞ்சில் கோபக் கனல் மூண்டெழுந்தது.

சில நாட்கள் கசீலா செந்திலுடன் பேச்சுவார்த்தை வைக்கவே இல்லை. அவர்கள் அவர்கள் சந்திக்க நேர்ந்தால் அவள் பார்வையில் கனல் தெறித்தது.

ஒருநாள் ஆனந்தன் இல்லாத நேரத்தில் "ஆனந்தன் எங்கை?" என்று கேட்டபடி செந்தில் வந்து சேர்ந்தான். கையில் பை நிறைய. ஆனந்தன் இல்லாதது தெரிந்து கொண்டே அவன் வந்திருக்க வேண்டும்.

"தெரியாது" ஒரே சொல்லில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

---

# வீரமணி ஐயர்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி) நானே இசையும் அமைத்திருக்கிறேன். ஆட்டமும் இசையும் ஒன்ருக அமைந்த என்னுடைய முதல் முயற்சி இதுவென்றே சொல்ல வேண்டும். இசையைக் கேட்டால் நிச்சயம் நீங்கள் ரசிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

தசாவதாரம் நாட்டியத்தை என் மாணவர்கள் எல்லோருக்கும் பயிற்றுவித்திருக்கிறேன். அவர்களும் அதில் மிகவும் விருப்புகிறார்கள்.

என்னுடைய மாணவி ஒருத்தியின் அரங்கேற்றத்துக்காக அண்மையில் நான் கொழும்பு வர இருக்கிறேன். அநேகமாக ஜூன் 6, 7 இல் அங்கு நிற்பேன். அந்த மாணவியும் தசாவதார நாட்டியத்தை ஆடுவார்.

இந்த தசாவதார நாட்டியத்தை நான் அமைப்பதற்குக் காரணராக இருந்தவர் திருமதி செந்திவேநாதான். இதற்காக அவரை நான் மிகவும் பாராட்டுகிறேன். உங்களுடைய சாகித்தியத்தை அவர் கொண்டு வராதிருந்தால் நான் இந்த நாட்டியத்தைத் தயாரித்திருக்கவே முடியாது. முதல் நன்றி திருமதி செந்திவேநாவுக்கே உரியது. இந்த தசாவதார நாட்டியத்தை மேலும் மெருகு ஊட்ட நான் நினைத்திருக்கிறேன்.

கொழும்பில், சோலியத் தலைதார நிலையத்தில் எனது மாணவி குமாரி தனிதா திருநாவுக்கரசு ஒரு நாட்டிய நிகழ்ச்சி நடத்தவுள்ளார். அந்த சமயத்திலும் நான் கொழும்பில் நிற்பேன். குமாரி தனிதா தசாவதாரம் நாட்டியத்தையும் ஆடுவார். இதில் உங்களுக்கு எதுவித ஆட்சேபனையும் இராது என்று நான் நம்புகிறேன்.

நிகழ்ச்சி நிரல் புத்தகத்தில் தசாவதாரம் சாகித்திய கர்த்தா நீங்கள் தான் என்று பெயர் அச்சிடப்படும். நிகழ்ச்சியின்போது உங்கள் பெயரும் அறிவிக்கப்படும். நீங்களும் நானும் சேர்ந்து செய்த இந்தக் கலைப்பணியை இலங்கை அன்பர்கள் வெகுவாக ரசிப்பார்கள் என்பது திண்ணம். நான் கொழும்புக்கு வரும்போது அவசியம் என்னைச் சந்திப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இசை உலகிற்கு நீங்கள் செய்து வரும் அரிய பணி பற்றி நான் வெகுவாகக் கேள்விப்பட்டும் சொல்லியிருக்கிறேன். 35 தாளங்களுக்கும் 175 தாள வரிசைகளுக்கும் நீங்கள் அக்கினிருக்கும் சாகித்தியங்கள் அதிசயச் சிறப்பு வாய்ந்தவை. அவை மகோன்னதமான படைப்புகள் ஆகும். என்றோ ஒருநாள் உங்களுக்கு மிகப் பெரிய பெயரும் புகழும் கிடைக்கத்தான் போகின்றன. பணியைத் தொடருங்கள் வீரமணி! கடவுள் உங்களை ஆசிர்வதிப்பாராக.

ஒருவருக்காக அல்ல, மனித குலத்துக்காக நீங்கள் சாகித்தியங்களைப் படைக்கிறீர்கள்.

நாட்டியத்தைப் பொறுத்த வரையில் நானும் அப்படித்தான். என்னுடைய இந்தக் கருத்தை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். நாங்கள் நிலையற்றவர்கள். எங்கள் படைப்புகள் சிரஞ்சீவித்துவம் பெற்றவை ஆக வேண்டும்.

உங்கள் அன்புள்ள
அடையாறு கே. லக்ஷ்மணன்.

★

அடையாறு கே. லக்ஷ்மணனுடைய இந்தக் கடிதம் ஒன்றே சகல பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

தசாவதாரம் என்ற நாட்டியத்தில் —

"அவதாரம் செய்தாயடி நாராயணன்" என்ற பாட்டுக்கான கலை வாரிதி ந. வீரமணி ஐயர் உடையது தான் என்பதும் —

இந்தப் பாட்டுக்கான ஆட்டத்தின் மூலப் படிமம் அடையாறு கே. லக்ஷ்மணனுடையது தான் என்பதும் நிலை நாட்டப் படுகின்றன.

இதற்குமேல் வேலு ஆனந்தன் என்ன சொன்னலும், எத்தனை தடவை மன்னிப்புக் கோரினும் அவையெல்லாம் எடுபடுமா என்பதை வாசகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். கருத்துத் தெரிவிக்க வேண்டும்.

★

இது இந்த அளவில் இருக்க, ஓர் உரிமைப் பிரச்சினை வேறு தலை தூக்குகிறது.

யாரோ ஒருவருடைய பாட்டை, யாரோ ஒருவர் இயற்றியதாக ரூபவாஹினி ஒளிபரப்பியதே —

அந்த ரூபவாஹினியின் மீது திரு. வீரமணி ஐயரோ அல்லது பாட்டின் முதல் உரிமை பெற்ற திருமதி செந்திவேநாவோ "காபி ரைட்" கோர்ட் நடவடிக்கை ஒன்று தொடர முடியாதா என்பதுதான் அந்த உரிமைப் பிரச்சினை ஆகும்.

---

## மாலைதீவு கப்பலில் வெடி விபத்து

கொழும்பு, ஜூலை, 9

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் ஒரு மாலைதீவு கப்பலில் நேற்று முன்தினம் வெடி விபத்து ஏற்பட்டது.

இதனால் கப்பல் ஊழியர் மூவர் காயமடைந்தனர். எஞ்சின் அறை உடைபட்ட மற்றும் பல அறைகள் சேதமடைந்தன.

எஞ்சின் அறையில் "காஸ் சிலிண்டர்" ஒன்று வெடித்ததே இந்த விபத்துக்குக் காரணம் என்று ஆரம்ப விசாரணைகள் தெரிவிக்கின்றன.

அங்கு தோன்றிய தீ எவ்வித பாதிகளுக்கும் பரவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவிலிருந்து சுருவாடு ஏற்றி வந்த கப்பல் இது. (ர)

---


# 'மந்திரயோகி'

## வசிய மாந்திரீக வைத்தியம்

அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு இல. C 483



M.B.B.S. (H)S.M.P. இந்தியா. D.A.C.. (இலங்கை)யுடன் தொடர்பு கொள்ளவும்.

அன்பர்களே!

சூனியம், வசிய மருந்திடு, கண்ணூறு, நாவூறு, கிரக தோஷம், நோய், பேய், வைத்தியம், துன்பம், பிரச்சினைகளைத் தீர்க்க, பிரிந்தவரை வரவழைக்க, வேண்டாதவரை பிரிக்க, குடியை மறக்க, எதிரியை அடக்க, விரும்பியவர்களை வசியமாக்க, பரீட்சையில் சித்தியடைய, நேர்முகப் பரீட்சையில் வெற்றி பெற, தொழில் கிடைக்க, தொழில் விருத்தியடைய, சகல பிரச்சினைகளையும் தீர்த்து, உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற, மாந்திரீக விடயங்கள் எதுவானாலும் செய்து தரப்படும், அஷ்டாங்க சித்த ஆயுர்வேத, ஹோமியோ, ஆங்கில (H) வைத்திய முறைகளிலும் கிப்நாட்டிச, மெஸ்மெரிச, யோக சிகிச்சை முறைகளிலும், தெய்வ சக்தி கொண்டு, மாந்திரீக சக்தியினாலும் நோய் தீர்க்க, விரும்பியவற்றை நிறைவேற்ற மட்டக்களப்பு நான்காவது பரம்பரை மாந்திரீக, வைத்தியர், மலையாளத்திலேயும், மாந்திரீக சித்தர் எனப் புகழ்பெற்ற மாந்திரீகக் கலாநிதி சித்த மார்த்தாண்ட பண்டிட் மகேந்திரராஜ டாக்டர் "மந்திரயோகி" D.A.C.. (இலங்கை)யுடன் தொடர்பு கொள்ளவும்.

### ஆண்–பெண் (காதலன்–காதலி) வசியம் :–

இளைஞர்களே! யுவதிகளே! நீங்கள் விரும்பும் காதலன் — காதலியை அடைய மாந்திரீக வசியம் செய்வது பாவம் இல்லை. நிம்மதியான வாழ்க்கை வாழ்வதே முறையானதும் நீங்காத வாழ்வாகும். நம் முன்னோர் கள்கூட மந்திர, வசிய முறைகளைக் கையாண்டு, சித்தத்தைச் சாதித்து இன்பமாக வாழ்ந்திருக்கின்றார்கள்.

உங்கள் காதலில் எப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டாலும் கவலைப்பட வேண்டாம். நீங்கள் விரும்பும் பெண்ணை/ஆணை வசியமாக்கி பெற்றோர்களின் விருப்பத்துடன் திருமணம் செய்ய குறுகிய காலத்திலேயே முழு விபரமும், இருவரின் பெயர்களும் (பெற்றோர்களின் பெயர்கள் தெரிந்தால்) ஏமாற்ற மாட்டேன். சத்தியமாக திருமணம் செய்வேன் என்றும் எழுத வேண்டும். பெண்ணைக் காப்பாற்றும் தகுதி அரிய தொழில் வருவாய் கட்டாயம் அறிவிக்கவும். ஏமாற்றும் குணம் உள்ளவர்களுக்கும், சத்தியம் செய்து ஏமாற்றினாலும் வசியம் செய்து தர முடியாது.

ஆண், பெண்களின் வெட்கமான, வெளியில் சொல்ல முடியாத எப்பிரச்சினையானாலும் எழுதுங்கள். ஆண், பெண் மர்ம, உடல் உறுப்பு சம்பந்தமான பிரச்சினைகள், நோய்கள், அங்கங்கள், மார்பகம், பால் உறுப்புக்கள் போதிய அளவு வளர்ச்சியின்மை, சக்தியின்மை, வீரியக் குறைவு, காம்பத் தளர்ச்சி, ஆண், பெண் தன்மை, உணர்ச்சிகள் குறைதல், ஸ்கலித (விந்து வெளியேற்றம்), வெள்ளை நோய், உடல் மெலிவு, அழகின்மை, முடி நரைத்தல், உதிர்தல், இவைகளுக்கும் வேறு நோய்களுக்கும் கைகண்ட மருந்துகள் இருக்கின்றன.

நேரில் வர முடியாதவர்களுக்கு மருந்து, மந்திரம் செய்து பார்சலில் அனுப்பி வைக்கப்படும். 3 ரூபா 50 சத முத்திரையும், 50 சத முத்திரை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரும் அனுப்புபவர்களின் விடயங்கள் மாத்திரமே கவனிக்கப்படும். 10 ரூபாவிற்கு மணி ஓடர் அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும். பதிவுத் தபாலில் அனுப்பினால் பாதுகாப்பு.

## 'டாக்டர் மந்திரயோகி'

இந்தியன் வைத்தியசாலை,
கல்லடி, மட்டக்களப்பு. (Batticaloa.)

சிந்தாமணி

CHINTAMANI தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு சிந்தாமணி

# ஈகைத் திருநாள் வருகை

**எம்.ஜே.எம். தாஜுத்தீன்**

அருள் சுரக்கும் புனித ரமழான் பிரியாவிடை கூறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், இஸ்லாமிய உள்ளங்களில் இனிமை சேர்க்கும் ஈதுல் பித்ர் ஈகைப் பெருநாளும் இதோ நெருங்கி விட்டது.

பகல் நேரங்களில் பசித்திருந்தும், இரவு காலங்களில் விழித்திருந்தும் ஒரு மாத காலமாக மேற்கொண்ட புலனடக்கப் போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்ட களிப்பில் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவதற்கு முஸ்லிம்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

பிறை கண்டு நோன்பு வையுங்கள், பிறை கண்டு பெருநாள் கொண்டாடுங்கள் என்ற நபிகள் நாயகத்தின் வாக்குக்கு இணங்க செவ்வானத்தில் "ஷவ்வால்" இளம்பிறை தென்படும் போது நோன்புப் பெருநாள் வருகை தருகின்றது.

இஸ்லாத்தின் இரண்டு இனிய பெருநாட்களிலும் முதலில் வருவது ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாள்.

இப்பெருநாளின் இன்பத்தை இறைவன் ஈகையிலே வைத்துள்ளான். அதனால் தான் அது ஈகைத்திருநாள் என்ற அழைக்கப்படுகின்றது.

ஒரு மாதகால நோன்புக்குப் பின்னர் இத்திருநாளை இறைவன் மிகப் பொருத்தமாகவே அமைத்துள்ளான்.

பசி வருவதற்கு மாத்திரைகள் சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு ஏழைகளின் துயர் எங்கே விளங்கப்போகிறது?

இப்படியானவர்களுக்குப் பசியாலும், தாகத்தாலும் ஏற்படும் அவஸ்தையை அனுபவ ரீதியாக உணர வைப்பது நோன்பு ஒன்று தான்.

இதனால் இரக்கமற்ற பாறை நெஞ்சங்களும் ஏழைகளுக்காக அவர்களது துயர் துடைப்பதற்காக கசிந்து உருகுகின்றன.

தான் சாப்பிடும் போது அடுத்தவனின் பசியையும் உணர்ந்து அவன் ஏழைகளுக்கு உணவளிக்கிறான்.

தன் குடும்பத்தாருக்கு ஆடை அணிவித்து அழகு பார்க்கும் போது, ஏழைகளுக்கும் மானம் மறைக்க ஆடை தருகிறான்.

தான் பாடுபட்டுத் தேடிய செல்வத்தை ஒழுங்காகக் கணக்கிட்டு ஏழைகளுக்குரிய பங்கினை வழங்கி விடுகிறான்.

இவ்வாறு ஒரு மாத கால நோன்பினால் ஈகையின் மகத்துவம் மக்களின் உள்ளங்களில் பதிந்த பின்னர் அந்த ஈகைக்கென்றே ஒரு பெருநாள் கொண்டாடப்படுவது எவ்வளவு சிறப்புக்குரியது.

உந்தி எழுகின்ற மன இச்சைகளை அடக்கி, ஐம்புலன்களையும் ஒடுக்கி மிகப் பேணுதலாக நாம் நோற்ற நோன்பைக் கூட அங்கீகரிப்பதற்கு இறைவன் ஒரு நிபந்தனை விதிக்கிறான்.

நோன்பு நோற்றவர்கள் "ஸகாதுல் பித்ரா" எனும் தர்மத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்பதே அது.

நோன்புப் பெருநாள் தொழுகைக்கு முன்னர் இந்த தர்மம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துவதில் இருந்து ஈகைத் திருநாளில் அடிப்படைத் தத்துவம் நன்கு பேணப்படுவதை அவதானிக்கலாம்.

விருந்தால் பெருநாள் என்ற நிலையில் நாம் பட்டாசு கொளுத்தி மகிழவோ, கூத்து கும்மாளங்களில் மூழ்கவோ, வீண் களியாட்டங்களில் ஈடுபடவோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

பெருநாள் இரவைக்கூட அமைதியான முறையில் இறை வணக்கத்தில் செலவிட வேண்டியது அவசியமாகும்.

"இரு பெருநாள் இரவுகளையும் நற் காரியங்களைக் கொண்டு எவர் உயிர்பெறச் செய்கிறாரோ, அவருக்கு சுவர்க்கம் கடமையாகி விட்டது" என்று நபியவர்கள் கூறினார்கள்.

பெருநாள் இரவின் பெரும் பகுதியை இறை வணக்கத்தில் செலவிட்டு ஆத்மாவைத் தூய்மைப்படுத்திக் கொண்ட முஸ்லிம்கள், அதிகாலையில் எழுந்து குளித்து உடல் தூய்மை பெறுவர்.

புத்தாடைகளையும், வசதிக்கேற்ற தூய ஆடைகளையும் அணிந்து நறுமணம் பூசிக் கொள்வர்.

"அல்லாஹு அக்பர்......"

"அல்லாஹு அக்பர்" அல்லாஹ் மிகப் பெரியவன். அவனை மிகைத்த சக்தி உலகில் இல்லை என்ற இனிய தக்பீர் முழக்கத்துடன் பள்ளிவாசலுக்குச் செல்வர்.

அல்லாஹ்வின் சந்நிதானத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதமில்லை. ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமில்லை. அரசன் ஆண்டி என்ற பாகுபாடு இல்லை.

இந்த அரிய தத்துவத்தை நிரூபிக்கும் முகமாக அனைவரும் வரிசை வரிசையாக நின்று தோளோடு தோள் இணைத்து பெருநாள் தொழுகையை நிறைவேற்றிக் கொள்வர்.

பெருநாள் தொழுகை நிறைவேற்றிய பின்னர் தத்தமது வீடுகளுக்குச் சென்று தமது பெற்றோர், சகோதரர் ஆகியோருடன் ஸலாம் கூறி முஸாபஹாச் செய்து கொள்வர்.

அதே போன்று நண்பர்கள், அயல் வீட்டார் அனைவருடனும் ஸலாம் கூறி மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்வர்.

இவ்வுலகைப் பிரிந்து சென்றுவிட்ட பெற்றோர், உறவினர் ஆகியோரையும் நினைவு கூர்ந்து அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை புரிவர்.

தான தர்மங்களில் அதிகமாக ஈடுபடுவர். உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்வர்.

இந்த ஈகைத் திருநாளில் ஏழைகளை உபசரிப்பதும், அநாதைகளை ஆதரிப்பதும், வசதி குறைந்தோருக்கு உதவுவதும் சிறப்பான நற்கருமங்களாகும்.

ஒருநாள் பெருநாள் தினத்தில் வீதியில் அழுக்குத் தோய்ந்த உடையுடன் அழுது கொண்டிருந்த அனாதைக் குழந்தை ஒன்றை தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள் நபியவர்கள்.

அக் குழந்தைக்கு நல்ல உணவு கொடுத்து புத்தாடை அணிவித்து மகிழ்வூட்டினார்கள்.

எனவே, உண்பதாலும், உடுப்பதாலும் இத் திருநாளில் மகிழ்ச்சி கொள்வதை விட நபியவர்கள் முன்மாதிரி காட்டியது போல பிறரது துன்பங்களைக் களைவதில் ஏற்படும் மகிழ்ச்சியில் இத்திருநாளைக் கொண்டாடுவதே சிறப்பாகும்.

## உடை தரும் மதிப்பு

பலர், நேர்த்தியாக உடை அணிந்து பிறர் மத்தியில் கம்பீரமாகத் தோற்றமளித்து அவர்களைக் கவர்ந்து தேவையற்றதென எண்ணுகின்றனர். எனவே தமது உடை பற்றியோ, தோற்றம் பற்றியோ எந்தவிதமான அக்கறையும் எடுப்பதில்லை.

அவர்கள் தமது முகத்தை எதாவது ஒரு முறைதான் கழுவுவார்கள், மற்ற எல்லா நேரங்களிலும் முகத்தில் எண்ணெய் வழியும், அவர்களின் மூச்சில் ஏதோ ஒரு வாடையடிக்கும்.

சிலர் தமது உடைகளை அடிக்கடி மாற்றுவதோ, கூடியமட்டில் குளிப்பதோ இல்லை. எனவே அவர்களின் உடலிருந்து ஒருவித "வாடை" அடிப்பதுண்டு.

மற்றும் சிலர், அதிகமாக வேர்த்து கொட்டுபவர்கள், அதனால் ஏற்படும் "வாடை"யைப் போக்கிக் கொள்ள வாசனைத் திரவியங்கள் உள்ளன என்பதைப் அறியாமல் உள்ளனர்.

இதனால் ஏதோ நாம் எப்பொழுதும் "டிப்டொப்"பாக அமைய வேண்டும், காட்சியளிக்க வேண்டும் என்பதல்ல. ஆனால் உடை போன்றவற்றிற்கு மிக அதிகமாகச் செலவு செய்யாமல் மற்றவர்களைக் கவர்கிற விதத்தில் தோற்றமளிக்கலாம் என்றே கூற விரும்புகிறோம்.

உடைகள் அழுக்காக முன்னரே அவற்றைக் கழுவிப் போடுதல், நாமே ஒழுங்காக அவைகளைத் தோய்த்தெடுத்தல், கூடுமானவரை உடைகளை தொங்கவிடல், அடிக்கடி உடைகளைச் சுத்தமாக்கும் பிரஷை உபயோகித்தல் போன்றவற்றால் நாம் நமது தோற்றத்தை கவர்ச்சியுள்ளதாக ஆக்கிக் கொள்ளலாம்.

இவை யாவும் சிறு விஷயங்கள். ஆனால் இவை நிச்சயமாக நம்மை மற்றவர் முன்னால் நல்ல தோற்றமுள்ளவர்களாக மாற்றும். இது மற்றவர் மனத்தில் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறு செய்வதால் நமக்கு ஒரு மதிப்பை ஏற்படுத்தும். இந்த மதிப்பே சமூகத்தில் நமது அந்தஸ்தை உயர்த்தும். அதனால் ஆளுமையை வளர்க்கும். எனவே —

நாம் நம் ஆளுமையை ஓரளவு வளர்த்து, இந்தச் சமூகத்தில் மதிப்புடன் வாழ நமது உடை பற்றி நாம் சிறிது கவனஞ் செலுத்துதல் வேண்டும். மற்றவர் நம்மை ஒரு முறைக்கு இரு முறை திரும்பிப் பார்க்கக் கூடிய விதத்தில் தோற்றமளிக்க வேண்டும்.

— ஏ. பி. வி. கோமஸ் —

# காற்று மேடை...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணம் என்ற பெருமைக்கு உரியவராளர்.

மணங்கமழும் மல்லிகையும் இந்த முல்லை மலரின் இனத்தைச் சார்ந்ததே.

மல்லிகை, முல்லை இவை இரண்டும் வெண்மைக்கும், தூய்மைக்கும் உவமிக்கப்படுகின்றன.

இம் மணர்களின் ஒற்றுமையில் ஒரு சிறப்பு உண்டு. முல்லை மலரும் நேரத்தில் மல்லிகை மலர்வதில்லை. மல்லிகை மலரும் நேரம் முல்லை பூப்பதில்லை.

ரோஜா மலர்களைப் போன்றே மல்லிகை, முல்லை மலர்களிலும் பல வகை உள. இவற்றுள் அடுக்கு மல்லிகை, கஸ்தூரி மல்லிகை, குண்டு மல்லிகை, அந்தி மல்லிகை, தங்க மல்லிகை குறிப்பிடத்தக்கன.

அதிகமான வெப்பத்திலும் நன்கு செழித்து வளர்ந்து பூக்கக் கூடிய பூ "போகன் வில்லா". இந்த மலருக்கு பருவ காலங்கள் என தனியாக எதுவும் இல்லை. ஆண்டு முழுவதும் பூத்துப் பொலிந்து கொண்டே இருக்கும்.

இந்தச் செடி பூத்திருக்கும் போது வெயில் பட்டு மலர்கள் நெருப்புப் பற்றி எரிவதைப் போல் காட்சி தரும். அத்தனை கரும் சிவப்பு மலர்கள் போகன் வில்லா. இது தென் அமெரிக்காவுக்கே உரிய மலராகக் கருதப்படுகின்றது.

"டி. போகன் வில்" என்ற பிரஞ்சு நாட்டு மாலுமி ஒருவர் தான் இதனைப் பயிரிட்டுப் பரப்பினர். அதனால் தான் இம் மலரை போகன் வில்லா என்று அழைக்கின்றனர்.

பூக்களிலே மனோரஞ்சிதமும் ஒரு புதுமையான பூ. இந்தப் பூவை எந்தக் கலியை நினைத்துக் கொண்டு முகர்ந்து பார்த்தாலும் அக்கனியின் வாசனையே "கம்" என்று மணக்கும்.

மாலை ஆறு மணிக்கு மேலே தான் மனோரஞ்சிதம் மலரும். அது இரவு முழுவதும் மணம் பரப்பிக் கொண்டே இருக்கும்.

மா, பலா, வாழை, கொய்யாக்கனி, அன்னசி போன்ற மனங்கவர் பழங்களின் வாசனைகளைக் கமழச் செய்து கொண்டிருக்கும் மலர் இது. அதனால் தான் மனதுக்கு ரஞ்சிதமான இம்மலரை மனோரஞ்சிதம் என அழைப்பர்.

சூரிய காந்தி என்றால் யாவருக்குமே நன்கு அறிமுகமான பூ இது. சூரிய காந்திப்பூ சூரியன் உதயமாகும் போது (கிழக்கு) நோக்கியே மலரும். பின்பு சூரியன் செல்லும் பக்கமாகவே சாய்ந்து மேற்கு நோக்கி மாலையில் தலை குனியும். எனவே தான் இம்மலருக்கு சூரியகாந்தி என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.

இப்போது சூரியகாந்தி மலர்களின் விதைகளில் இருந்து எண்ணெய் தயாரிக்கப்படுகின்றது.

ரோஜாவில் இருந்து அத்தர் தயாரிக்கப்படுகிறது. இப்படி மலர்கள் வாழ்வில் மறக்க முடியாத மகோன்னத படைப்புகள். கால தேவனின் கவா ரூபங்கள். இயற்கையின் எழில் கோலங்கள் இம்மலர்கள். (22)



# ஆவளுக்கு...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில் அளித்து விட்டு அவன் உள்ளே போகத் திரும்பினான்.

"சுசீலா ஒரு நிமிஷம்."

"எனக்கும், உங்களுக்கும் கதையில்லை."

"நான் செய்த பிழைக்கு மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறன் சுசீலா. தோவிக்காமல் நான் சொல்லுறதைக் கேள்."

அவள் நின்றாள்.

"உன்ரை மனதைப் புண்படுத்திப் போட்டன். என்னை மன்னிச்சிடு."

"இனிமேல் கதைக்கிறதைக் கவனமாய்க் கதைக்க வேணும்."

"நீ நல்லவள், சுசீலா. நான் ஏதோ பகிடியெண்டு நினைச்சுக் கொண்டு மோட்டுக் கதை கதைச்சிட்டன்" அங்குமிங்கும் பார்த்த செந்தில் எதற்கோ அடி போடுகிறான் என்பது சுசீலாவுக்குப் புரிந்தது.

"உண்மையைச் சொல்லப் போனால், நான் ஒரு வருஷமா உன்னைக் கவனிச்ச வாறன். உங்கடை குடும்பம் நடக்கிற சீரும் எனக்குத் தெரியும். உன்ரை வாழ்க்கை இப்பிடிச் சீரழியுதே என்டு நான் எத்தனை நாள் வருந்தியிருக்கிறன் தெரியுமோ?" அவன் குரல் தழுதழுத்தது. போதை காரணமாக அவன் அழுதுவிடுவானோ எனச் சுசீலா அஞ்சினாள்.

"என்னைப் பார்த்து நீங்களேன் வருந்த வேணும்?"

"அதுதான் எனக்கும் தெரியேல்லை. என்ரை உணர்ச்சியை எப்பிடி உனக்கு விளங்கப் படுத்திறது? சொல்ல நினைக்கிறது, துணிவில்லை."

"நீங்கள் இன்னொரு நாளைக்குக் கதைக்கிறது நல்லதெண்டு நினைக்கிறன்" சுசீலா எழுந்தாள்.

"ஒரு அஞ்சு நிமிசம் இரு சுசீலா, தயவு செய்து இரு."

அவள் மீண்டும் அமர்ந்தாள்.

"என்னவோ தெரியாது. எனக்கு ராப்பகலா உன்ரை எண்ணந்தான். பிழை என்டு தெரிஞ்சும் என்னாலை ஒண்டும் செய்ய முடியாமலிருக்கு" அவன் எழுந்தான்.

"நீ என்னோடை வந்திடன் சுசீலா. நான் உன்னை ஒரு குறையும் இல்லாமல் வைச்சுக் காப்பாத்துவன். ஆனந்தனுக்குப் பயப்பிடாதை. நாங்கள் ஊரை விட்டே போகலாம்."

திடீரென்று உணர்ச்சி வசப்பட்ட நிலையில் முன்னுக்கு வந்து அவளது கரங்களைப் பற்றித் தனது கன்னங்களிலே ஒற்றினான் செந்தில்.

(தொடரும்)

★ இங்கிலாந்து ★ தாய்லாந்து ★ தெற்கு ஆபிரிக்கா ★ சிங்கப்பூர்

மேற்குறித்த நாடுகளில் உள்ளோர் எங்கள் மருந்து வகைகளைப் பாவித்து நல்ல பலனைப் பெற்றுள்ளனர்.

**கல்யாணமான ஆண், பெண் ஆகிய**

**இருபாலாரும் எங்கள் மருந்துகளைப் பாவித்து இல்லற வாழ்க்கையில் சம்பூர்ண வெற்றியையும், மகிழ்ச்சியையும் அடைந்துள்ளனர்.**





நீங்கள் உயர்ந்த பதவிகளை வகிப்பவர்களானாலும் சரி, பணக்காரர்களானாலும் சரி, துர் நடத்தையாலும், வேறு நோய்களாலும் உங்களுடைய ★ பாலுறுப்பு வீரியமின்மை ★ பலவீனம் ★ விரைவில் விந்து வெளியேறல் ★ பிள்ளைப்பேறு இன்மை ★ ஆகியவற்றால் உங்கள் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படுகிறதா? அவற்றிற்கு இடம் வைக்காதீர்கள்!

இந்தியாவில் மன்னர்கள் பாவித்து ஆயிரக்கணக்கான பெண்களின் நன்மை பெற்றது பிரஸ்தாப மருந்துகளைப் பாவித்தே. உங்களுக்கு பாலுறுப்பு வீரியமில்லாமையால் அவஸ்தைப்படுகிறீர்களா? அப்படியானால் தாமதியாமல் பெறுமதியான ஔஷதங்களைப் பாவித்து சந்தோஷத்தையும், நீண்ட குடும்ப சுகத்தையும் அனுபவியுங்கள்.

**இருபத்தைந்து வருடகாலத்திற்கும் அதிகமான பழைய புதிய பெறுமதியான ஔஷதங்களை முறைப்படி தயாரித்துள்ளோம்.**

இம்மருந்துகளைப் பாவித்த வெளிநாட்டவரும், உள்நாட்டவரும், பாவித்து பலன் பெற்று ஆயிரக்கணக்கானோர் அனுப்பி வைத்துள்ள கடிதங்கள் உங்களை வியப்பில் ஆழ்த்தும்.

திருமணம் செய்ய எண்ணியுள்ளீர்களா? திருமணம் செய்யப் பயப்படுகிறீர்களா திருமணமாகியபின் மனைவியைத் திருப்திபடுத்த முடியாமல் ஆண் உறுப்பு வீரியமின்மை, வெகு சீக்கிரம் விந்து வெளியேறுதல், உணர்ச்சியின்மை முதலிய நோய்களால் கஷ்டப்படுகிறீர்களா? தாமதியாமல் உடனடியாக மருந்தை வாங்கிப் பாவித்து தாம்பத்திய வாழ்க்கையை நன்றாக அமைத்து நீண்ட நேரம் பாலுணர்ச்சியில் ஈடுபட்டு சந்தோஷமடையுங்கள். இன்றே எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**செக்ஸ் விபோன் சிரப்** 14 நாட்களுக்கு ஒரு போத்தல் ரூபா 62/50

**செக்ஸ் விபோன் ஒயில்மன்ட்** 14 நாட்களுக்கு பாவிக்க வேண்டிய டியூப் விலை ரூபா 27/50.

பாலுறுப்பு வீரியமின்மை, உறுப்புகள் வீரியமின்மை, இவற்றிற்கு வெளிப்பூச்சு மருந்து. சுகத்திற்கு கெடுதி இல்லாதது. இந்த இரண்டு மருந்துகளையும் ஒரே சமயத்தில் எடுத்துப் பாவித்தால் மிகவும் நல்ல பலன் அடைவீர்கள். வி. பீ. பியில் பெற்றுக்கொள்ள ரூபா 4/-க்கு முத்திரை அனுப்புங்கள். மணி ஓடர், போஸ்டல் ஓடர்களை பதிவுத் தபாலில் அனுப்புங்கள். செக்குகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேற்குறித்த இரண்டு மருந்துகளுடன், கடுமையான பெரிய வியாதிகளுக்கு எங்களிடம் அதிவிசேஷ மருந்துகள் உண்டு. நேரில் வந்து பரிசோதித்துப் பெற்றுக்கொள்ளலாம். சிரப் ஒயில்மன்ட் இரண்டிற்கும் வி. பீ. பீ. சார்ஜ் ரூபா 5/- முத்திரைகள்.

வேறு மருந்துகளை பாவித்து பலன் இல்லாமல் சிட்டிபிட்ட கவலைகளையும் உதறித் தள்ளி விட்டு தற்கொலை செய்ய எண்ணி இருந்தோர் பலர் என்னை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி குறிப்பிட்ட தினத்தில் நோய்களை கட்டுப்படுத்தி பரிசில்களையும் வழங்கி உள்ளனர்.

ஆனபடியால் உடனடியாக என்னை சந்தியுங்கள் அல்லது தபாலில் தொடர்பு கொள்ளுங்கள்.

விவாகம் செய்வதற்கு வயது வந்த இளைஞர்களும், யுவதிகளும், தமக்குள்ள இரகசிய நோய்களை பெற்றோர்களுக்கு கூற வெட்கப்பட்டு, தமது திருமண வாழ்க்கையை ஒத்திப் போட வேண்டியதில்லை. அவ்வண்டைய நோய்களைப் பற்றி கவலைப்படாது, என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். அதற்கேற்ற மருந்துகள் என்னிடம் தயாராக உள்ளது. நேரில் விஜயம் செய்து பாருங்கள். உண்மை விளங்கும். வி. பீ. பியில் மருந்துகளுக்கு எழுதும் போது ரூபா 5/-க்கு முத்திரை சேர்த்து அனுப்ப வேண்டும். கடிதங்களுக்குப் பதில் வேண்டுமானால் -/50 சத முத்திரையுடன் அனுப்ப வேண்டும்.

**பெண்களுக்கு**

தாமதமான மாதவிடாய்க்கு நீங்கள் எந்த சிகிச்சை பலனளிக்காவிட்டால் உடனடியாக அபத்தற்ற, விசேஷமான "சாந்தி வில்லை" வாங்குங்கள். விலை 28 ரூபா 50 சதம். வி. பீ. பீ. ஏதாவது ரூபா 4/00க்கு முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ள முடியும். இன்றும் நேரில் சந்தித்தால் பரிசோதித்து விசேஷ மருந்து கொடுக்கப்படும். கர்ப்ப கோளாறுகளுக்கும் திறமையான மருந்துகள் உண்டு. நேரில் வரவும்.

நோயாளர்களின் பரிசோதிக்கும் நேரம் காலை 8-30 மணி முதல் 1-30 மணிவரை. பிற்பகல் 4 மணி முதல் 8 மணிவரை. போயா தினத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் பி.ப 1-30 மணிவரை சிகிச்சை அளிக்கப்படும். சனிக்கிழமைகளில் சிகிச்சை அளிக்கப்பட மாட்டாது.

**பெண்களைப் பற்றி**

மயில் தோகையை ஒத்த முடியை உடையவர்கள் என்றும், பிறைச் சந்திரனை ஒத்த நெற்றி என்றும் கவிஞர்கள் கவிகளில் பாடி உள்ளனர். அப்படியான பொலிவை பெற்ற பெண் வர்க்கத்தினருக்கு விந்து வெளியேறல், முடி உதிர்தல், முடி பழுத்தல், மயக்கம், உடம்பு மெலிதல், நின்ற இடத்தில் விழுதல், அமைதியின்மை ஆகியவற்றை பாதுகாக்க ஜீவக சிரப் பாவியுங்கள். போத்தல் ஒன்றின் விலை 85/- ரூபா.

வி. பீ. பீயில் பெற்றுக்கொள்ள ரூபா 5/- முத்திரை அனுப்புங்கள். மற்றும் பெண்களுக்கு உண்டாகிய சகல நோய்களுக்கும் வெவ்வேறு சிகிச்சை முறை மருந்துகளும் உண்டு. உடம்பு முழுவதற்கும் பூரண சுகம் தருவது. நேரில் சந்திக்கவும்.

**பிள்ளைகள் இல்லாத கணவன் மனைவிக்கு**

இரண்டு பேரும் நேரில் வந்து பரிசோதனை செய்து, விசேஷ மருந்து உட்கொண்டு, விரும்பியபடி நல்ல பலனைப் பெறலாம். வேறு டாக்டர்களிடமிருந்து பரிசோதித்த துண்டுகள் இருந்தால் அவற்றையும் கொண்டு வந்தால் நல்லது.

**டாக்டர் வில்ப்ரட் அபயவர்த்தன தொலைபேசி: 32446**

**(DR. WILFRED ABEYWARDENA) Neuro and Skin Specialist L.H.M.P. (India) L.M.P. (Sri Lanka).**

இல. 77, பஞ்சிகாவத்தை ரோட் (டவர் ஹோல் அருகில்) மருதானை, கொழும்பு—10.

77, Panchikawatte Road (near Tower Hall), Maradana.

இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டவர்: சுவாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12. (இலங்கை) தபால் பெட்டி: 1613. வெளியிட்ட திகதி 10 ஜூலை 1983.

Chintamani 5, Gunasena Mawata, Colombo 12.P. O. Box 1613.